Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 மாசி 09 சனிக்கிழமை (21.02.2015) பக்கங்கள் 20 ஓசை – 144

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

# கூட்டமைப்பின் மனமாற்றம் காலம் கடந்த ஞானம்

## வரவேற்கிறது ஈ.பி.டி.பி.

(யாழ்ப்பாணம்)

நாம் நீண்ட காலமாகவே வலியுறுத்தி வந்திருக்கும் எமது அரசியல் வழிமுறை நோக்கி காலம் கடந்தாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் வந்திருப்பதை நாம் நேசக் கரம் நீட்டி வரவேற்கின்றோம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் பேச்சாளருமான பசுபதி சீவரத்தினம் (கி.பி.) விடுத்திருக்கும் ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த அறிக்கையில், வரலாறு ஒருபோதும் பின்நோக்கி சுழல்வதில்லை. அதன் முன்நோக்கிய சுழற்சியை தடுக்க நினைத்தவர்களில் எவரும் வெற்றி கண்டதும் இல்லை.

துயர் தோய்ந்த எமது மக்களின் அரசியல் வரலாற்றில் மாற்றங்களை உருவாக்கி, எமது மக்களின் வாழ்விடங்கள் தோறும்

19 ஆம் பக்கம் பார்க்க...

## ஜெனிவா நோக்கி மங்கள விரைந்தார்

எதிர்வரும் மார்ச் 2ஆம் திகதி ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமை கவுன்ஸில் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக வெளிவிவ கார அமைச்சர் மங்கள சமர வீர செல்லவுள்ளார் என வெளிவிவகார அமைச்சு நேற்று தெரிவித்துள்ளது.

உலகம் பூராகவும் உள்ள சுமார் 65 இற்கும் மேற்பட்ட வெளிவிவகார அமைச்சர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்ள

19 ஆம் பக்கம் பார்க்க...

## யாழில் நாளை இளைஞர் மாநாடு

# அரசு அழைப்பு கூட்டமைப்பு மறுப்பு

(யாழ்ப்பாணம்)

***ராஜித உட்பட மத்திய அமைச்சர்கள் பலர் நாளை யாழ். நகரில் ஒன்று கூடி வடக்கின் இளைஞர்களின் எதிர்காலம் குறித்து ஆராயவுள்ளதுடன், புதிய செயற்றிட்டங்களுக்கான கருவூலங்களையும் அடையாளம் காணவுள்ளனர்.***

இந்த நிகழ்வுகளில் கலந்து கொள்ளும்படி கூட்டமைப்பினருக்கு அரசு அழைப்பு விடுத்த போதிலும், இந்த அழைப்பை கூட்டமைப்பு நிராகரித்துவிட்டது.

மத்திய அமைச்சர்களுடன் கூட்டங்களில் வடமாகாண அமைச்சர்கள் பங்குபற்றமாட்டார்கள் என அண்மையில் முதலமைச்சரின் அறிவிப்பையடுத்து, கூட்டமைப்பினர் இல்லாமலேயே 'சேஞ்ச்' அமைப்பின் யாழ்.இளைஞர் மாநாட்டை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கமைய விஜயகலா மகேஸ்வரனின் ஆசியுடன்

19 ஆம் பக்கம் பார்க்க...

## தேசிய பாதுகாப்புக்கு சவால்; ரணில் மீது முறைப்பாடு



நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு சவால் ஏற்படும் வகையில் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்து பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிராக தீவிரவாத விசாரணைப் பிரிவில் நேற்று முறைப்பாடொன்று செய்யப்பட்டுள்ளது.

சிங்களயே தேசிய முன்னணியின் தலைவர் வணக்கத்திற்குரிய மெடில்லே பக்ஞாலோக்க தேரரினால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்த மெடில்லே பக்ஞாலோக்க தேரர்,

வடக்கிற்கு செல்ல முன்னர் விதிக்கப்பட்டிருந்த பாஸ் நடைமுறை நீக்கப்பட்டமை, இராணுவம் வசப்படுத்திய காணிகள் மீண்டும் தமிழர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றமை போன்ற விடயங்கள் தேசியப் பாதுகாப்புக்கு களங்கத்தை ஏற்படுத்துகின்றன.

அதுமட்டுமன்றி, கொழும்பில் அதியுயர் பாதுகாப்பு வலயம்

19 ஆம் பக்கம் பார்க்க...

## புதிய இராணுவத் தளபதியாக கிரிசாந்த டி சில்வா



புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் கிரிசாந்த டி சில்வா நியமிக்கப்பட்டார்.

அவருக்கான நியமனக் கடிதம் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து நேற்று முற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கையளித்தார்.

இலங்கை இராணுவத்தில் 36 வருட கால சேவையை பூர்த்தி செய்துள்ள மேஜர் ஜெனரல்

19 ஆம் பக்கம் பார்க்க...

## உலகவங்கியின் உபதலைவருடன் சந்திப்பு

(கொழும்பு

தெற்காசிய பிராந்தியத்துக்கான உலக வங்கியின் உபதலைவர் திருமதி எனெட் டிக்சன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இருவருக்கிடையிலான சந்திப்பொன்று நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இட்ம்பெற்றது.

ஆசிய பசுபிக் நாடுகளுக்கான சர்வதேச நிதிக் கூட்டுத்தாபன பணிப்பாளர் விவேக் பத்தாக், உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிட பணிப்பாளர் திருமதி பிரான்கொய்ஸ் குளோட்டஸ், வதிவிட முகாமையாளர் எடம் செக், ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. அபேகோன், ஜனாதிபதியின் ஆலோசகர்கள் கலாநிதி ஜயந்த தனபால, கலாநிதி விக்கிரம வீரசூரிய, நிதி திட்டமிடல் அமைச்சின் பணிப்பாளர் நாயகம் ஆர்.எம்.பி.ரத்நாயக்க ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## சுன்னாகம் மின் நிலையம் மீண்டும் திறக்க அனுமதி

### பராமரிப்புக்காக மட்டும்

சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தினை பராமரிப்புப் பணிகளுக்காக திறப்பதற்கு நிபந்தனைகளுடன் கூடிய அனுமதியை யாழ்.மேல் நீதிமன்றம் வழங்கியுள்ளது.

யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி கே.சிவபாதசுந்தரம் முன்னிலையில், நேற்று இடம்பெற்ற வழக்கு விசாரணையில், பிரதிவாதிகள் தரப்பு முன்வைத்த கோரிக்கைகளை கருத்திற்கொண்டு, இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இயந்திரங்களையும், ஆவணங்களையும் பராமரிப்ப தற்கு அனுமதி வழங்குமாறு, சுன்னாகம்

19 ஆம் பக்கம் பார்க்க...

## உடையார்கட்டில் பாடசாலை நிர்மாணம்

### ஜப்பானிய அரசு நிதியுதவி

முல்லைத்தீவு, உடையார்கட்டு பாடசாலை நிர்மாணப் பணிக்காக ஜப்பான் 215, 866 அமெரிக்க டொலரை (சுமார் 28 மில்லியன் ரூபா) வழங்கியுள்ளது.

ஜப்பான் அடிப்படை மனித பாதுகாப்புத் திட்டத்தினூடாக இந்நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

பிள்ளைகளின் கல்வி உரிமையை பாதுகாப்பதற்கு கற்றலுக்குகந்த பாடசாலைச் சூழலை ஏற்படுத்துவதற்காக நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள இந்நிதி சிறுவர் பாதுகாப்பு நிதிய அமைப்பிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஒரு கட்டடமும், 5 வகுப்பறையுமுடைய உடையார்கட்டு பாடசாலையில் தற்போது 529 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். ஏனைய வகுப்புக்கள்

19 ஆம் பக்கம் பார்க்க...

# எல்லை தாண்டும் இந்திய படகுகளை தடுக்கக்கோரி போராடுவோம்

## யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

எங்களது எல்லைக்குள் இந்திய இழுவைப் படகுகள் வர அனுமதிக்க முடியாது. அவ்வாறு வருவதை தடுக்கக்கோரி போராட்டம் மேற்கொள்ளவுள்ளதாக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசத் தலைவர் அந்தோனிப்பிள்ளை எம்பிலியாம்பிள்ளை தெரிவித்தார்.

நேற்று செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய இழுவைப் படகுகள் எங்களது எல்லைகளைத் தாண்டக்கூடாது. அவர்களின் எல்லைக்குள் என்னவென்றாலும் செய்யட்டும்.

பலகோடி ரூபா சொத்தை இழந்து மிக கஷ்ர நிலையில் இத்தொழிலையே நம்பி வாழும் எம்மக்களின் கடல்வள சொத்துக்களை சுரண்டுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

இதற்கான இழப்பீடுகள் எதுவுமே இல்லை. இதைப் பற்றி கதைக்கிறோமே தவிர எதுவும் செய்ய முடியவில்லை. நல்ல முடிவு ஒன்று எமக்கு கிடைக்க வேண்டும். ஜனாதிபதி மனம் வைத்து இந்திய மீனவர்கள் எல்லை தாண்டக் கூடாது என்பதில் உறுதியாக இருக்க வேண்டும்.

முன்னர் ராஜித சேனாரட்ண அமைசசராக இருந்த காலத்தில் பிடிக்கப்பட்ட இழுவைப் படகுகளை விடுதலை செய்துள்ளார். அப்போது சொற்பமானவையே வந்தன.

ஆனால், தற்போது பெரும் எண்ணிக்கையில் வந்து எமது கடல் வளத்தை அள்ளுகின்றனர். இதற்கு விரைவில் முடிவு கட்டவேண்டும். இல்லையேல் போராட்டங்கள் மேற்கொண்டு எமது எதிர்ப்பை தெரிவிக்க வேண்டிய நிலை ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(இ)

# நெல்லியடிப் பகுதியில் அழிவடைந்த வீடுகளை புனரமைக்க ஏற்பாடு

நெல்லியடிப் பகுதியில் கடந்த கால அனர்த்தங்களினால் அழிவடைந்துள்ள வீடுகளை புனரமைத்து வழங்க சமுர்த்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாச உறுதியளித்துள்ளார். கடந்த 1981ஆம் ஆண்டு ரணசிங்க பிரேமதாசவினால் பொதுமக்களின் பாவனைக்காக வீடில்லாதவர்களுக்கு பெருமளவான வீடுகளை அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தது.

ஆயினும் கடந்த கால அனர்த்தத்தின் மூலம் வீடுகள் பெருமளவில் சேதமடைந்தது. இவற்றை புனரமைத்து தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ள நிலையில் இந்த வீடுகள் குறித்து திணைக்களத்தின் அதிகாரிகள் உண்மை நிலையை அறியுமாறு தெரிவித்திருந்தார் அவற்றை அறிக்கைகள் கிடைக்கப்பெற்றதும் உடனடியாக மக்களின் அன்றடாடத்துக்கு மிக அவசியமான இந்த வீடுகளை திருத்திக் கொடுக்க முடியும் என அவர் மேலும் உறுதிமொழி அளித்துள்ளார்.

# காலாவதியான பொருள் விற்பனை 6 வர்த்தகர்களுக்கு தண்டம்

சாவகச்சேரி நகரப் பகுதியில் காலாவதியான பொருட்களை விற்பனை செய்த ஆறு வர்த்தகர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. குறித்த வர்த்தகர்கள் காலாவதியான பொருட்களை விற்றமை தொடர்பில் பொதுச் சுகாதார பரிசோதகர் பரிவினால் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது குறித்த ஆறு வர்த்தகர்களுக்கும் சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி தலா 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (11)

## DD TV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | சனிக்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஒளிமயமான வாழ்வு |
| Am 07.00 | MORNING SONG |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | ஆரோகனம் |
| Am 09.30 | MY STYLE |
| Am 09.55 | காலைச்செய்தி |
| Am 10.00 | ஆரோக்கியமான வாழ்வு |
| Am 11.00 | மக்கள் முகம் |
| PM 11.30 | I T .COM |
| PM 12.00 | காதல் கீதங்கள் |
| PM 12.30 | சிரிக்க சிரிக்க |
| PM 01.00 | மதிய செய்தி |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.55 | மாலை செய்தி |
| PM 04.00 | சிரிக்க சிரிக்க |
| PM 05.00 | அதிர்வுகள் |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | வரலாற்று நாயகர்கள் |
| PM 07.30 | தெரிந்தல் சொல்லுங்கள் |
| PM 08.00 | பிரதான செய்தி |
| PM 08.30 | இதய ஊஞ்சல் |
| PM 09.00 | ஆங்கில திரைப்படம் தமிழாக்கம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

## நெல் கொள்வனவு

(தென்மராட்சி)

தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைமைப் பணிமனை தற்போது விவசாயிகளிடமிருந்து தரமான காய்ந்த நெல்லை நியாய நிலையில் உடன் பணம் செலுத்தி கொள்வனவு செய்து வருகின்றது.

நெல்லை விற்பனை செய்ய விரும்பும் விவசாயிகள் 0771328591 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென பொது முகாமையாளர் அறிவித்துள்ளார். (150)

# டெங்கு பரவ காரணமான குடும்பங்களுக்கு அபராதம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட கல்வயல் பிரதேசத்தில் டெங்கு நுளம்பு பரவக் காரணமான 2 வீட்டு உரிமையாளரகளுக்கு தலா 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் டெங்கு நுளம்பு பரவும் வகையில் பற்றைகள் சூழ்ந்த பகுதியாக காணியின் சுற்றுப் புறத்தை வைத்திருந்த இரு வீட்டு உரிமையாளர்களுக்கு எதிராக சாவகச்சேரி பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் குறித்த வீட்டு உரிமையாளரகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து குறித்த இருவருக்கும் த்லா 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த துடன் காணியை துப்புரவாக்குமாறு உத்தவிட்டார். (11)

### இல்ல மெய்வல்லுநர் போட்டி

ஆவரங்கால் மகாஜனக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது. பாடசாலை அதிபர் க. விஜயதேவன் தலைமையில் இப்போட்டி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (85)


# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1137

திகதி 19.02.2015

வெற்றி எண்கள் 30 31 61 65 ஆங்கில எழுத்து V

ஜக்பொட் பரிசு ரூ. 1,36,80,100/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 1,36,80,100/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 4 | 50,000/= | ரூ. 2,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 262 | 1,000/= | ரூ. 2,62,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 439 | 1,000/= | ரூ. 4,39,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11530 | 60/= | ரூ. 6,91,800/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6083 | 40/= | ரூ. 2,43,320/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 151922 | 20/= | ரூ. 30,38,440/= |
| ஆங்கில எழுத்து | 22069 | 20/= | ரூ. 4,41,380/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 63,15,940/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 13,976,940/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2015.02.23 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(c/3817)


# நெல்லியடி புதிய சந்தைக்கு அருகில் மஞ்சள் கடவை இல்லை

(கரணவாய்)

நெல்லியடி புதிய சந்தைப் பகுதிக்கு முன்பாக மஞ்சள் கடவை போடப்படாமையால் வீதியை கடப்பதில் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக, 750 வழித் தட வீதியை கடந்தே சந்தைக்கு செல்ல வேண்டியுள்ளதாகவும், இவ்வீதி, போக்குவரத்துக்கு பிரதான வீதியாக காணப்படுவதாகவும் தெரிவிக்கும் மக்கள் இவ்வீதியில் குறிப்பாக, சந்தைப் பகுதிக்கு முன்பாக மஞ்சள் கடவை போடப்பட வேண்டியது அவசியமானது.

குறிப்பாக, காலை மாலை வேளையுமே அதிகரித்த போக்குவரத்து நெருக்கடிகள் ஏற்படுவதாகவும் இக்காலப் பகுதியில் விபத்துக்கள் ஏற்படும் நிலை காணப்படுவதாகவும் பேருந்துக் காகாத்து நிற்கும் பயணிகள் இவ்வாறு விபத்தை எதிர்நோக்கும் அவல நிலை ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, பொதுமக்களின் போக்குவரத்து நெருக்கடியை தவிர்க்கும் வகையில் வீதியில் மஞ்சள் கடவையை போடுமாறு பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (18)


## சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

சுதுமலை தெற்கில் உடன் குடியேறக் கூடிய நிலையில் ஒரு புதிய வீடு விற்பனைக்குண்டு. பென்ஷன் பெறுவோர் போன்ற நிரந்தர வருமானம் பெறுவோர்கும் அரச வைத்தியசாலையில் பணி புரிவோர்க்கும் குறைந்த நிலையில் கொடுக்கப்படும். முன் உரிமையுடன். தொடர்பு :- பார்வையிட காலை 9 மணிக்கு முன்னரும், மாலை 2 மணிக்குப் பின்னரும். கே. சீவரட்ணம், சம்பந்தர் ஒழுங்கை, சுதுமலை தெற்கு, சுதுமலை. (R/399)


## பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும்

(வல்வை)

வல்வை கணபதி படிப்பகத்தின் 48ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கணபதி பாலர் பாடசாலை மண்டபத்தில் தலைவர் ச. ஜெயகணேஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திருமதி கிறிஸ்ரின் சாந்தவதனி அப்துல் ஜபார், வல்லை தென்கிழக்கு கிராம உத்தியோகத்தர் நடராசா சேகர் மற்றும் வல்வை நகர சபை செயலாளர் திருமதி கிரிஜா வாசுதேவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# வீட்டுத்திட்டப்பணிகளை விரைந்து முடிக்கப் பணிப்பு

## முகமாலை மக்கள் அவதி

SDC நிறுவனத்தினால் முகமாலை, வேம்பொடு கேணி, இத்தாவில் ஆகிய பிரதேசங்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்தை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன் கட்டிமுடிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த யூன் மாதம் இப்பகுதியிலுள்ள 66 குடும்பங்களுக்கு குறித்த நிறுவனத்தினால் வழங்கப்பட்டிருந்த 550,000 ரூபா பெறுமதியான வீட்டுத்திட்டத்தை தமது ஒப்பந்தம் முடிந்து செல்லவுள்ளதால் உடன் முடிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கும் அப்பகுதி மக்கள் மேலதிக நிதி இல்லாமல் தாம் எவ்வாறு இந்த வீட்டுத்திட்டத்தை முடிப்பது எனவும் தெரிவித்துள்ளனர்.

அன்றாட வாழ்வுக்கே அவதிப்படும் இந்த மக்கள் இம்மாத முடிவுக்குள் எவ்வாறு வீடுகளைக் கட்டி முடிக்க முடியுமென கேள்வி எழுப்பியுள்ளனர்.

மேலும் இப்பகுதியிலுள்ள 66 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருந்த வீட்டுத்திட்டத்தில் 5 குடும்பங்கள் தமது நிர்மாணப் பணியை மேற்கொள்ள முடியாது கஷ்ரப்பட்டு வந்தனர். இவர்களை சந்தித்த குறித்த நிறுவனத்தின் தொழில் நுட்ப உதவியாளர் அவர்களுக்கான வீட்டுத் திட்டத்தை நிறுத்தியுள்ளார். இதனால் கவலையடைந்த குடும்பங்கள் தமக்கு வீட்டுத்திட்டத்தை அனுமதிக்குமாறும் அதற்கான மேலதிக நிதியை வழங்குமாறும் கோரியுள்ளனர்.

இதனை மறுத்த தொழில் நுட்ப உதவியாளர் யாழ்.அரசடி வீதியிலுள்ள தமது நிறுவனத்துக்குச் சென்று அனுமதியைப் பெற்றுவருமாறும் தெரிவித்துள்ளார்.

வறுமைக்கோட்டுக்குட்பட்ட இந்த மக்கள் தமது அன்றாட வாழ்வில் பெரும் இன்னல் களை எதிர் நோக்கியுள்ளனர். இந்த நிலையில் பனைமரம், மணல் போன்றவற்றுக்கே இங்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இவ்வாறு துன்பங்களையே வாழ்வாகக் கொண்டுள்ள இம்மக்கள் எவ்வாறு இம்மாத இறுதிக்குள் தமது வீட்டுத் திட்டத்தைக் கட்டிமுடிக்க முடியும்.

தமது ஒப்பந்த காலம் முடிவடைகின்ற காரணத்தினால் மக்களை இக்கட்டுக்குள் தள்ளியுள்ளதாக கவலையடையும் மக்களுக்கு உரிய தீர்வினை வழங்க குறிப்பிட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (37)

## "பை" குறும்பட வெளியீடு

ராஜ் சிவராஜ் இன் "பை" மற்றும் "Figure ஐ தியேட்டருக்கு கூட்டிச் செல்வது எப்படி என்ற இரு குறும்படங்கள் கடந்த 15 ஆம் திகதி ராஜா திரையரங்கில் வெளியிடப்பட்டது.

ராஜ் இன் இயக்கத்தில் மதீசன் தனபால சிங்கத்தின் இசையில் சப்தமி கூட்டில் தயாரான "பை" மற்றும் "Figure ஐ தியேட்டருக்கு கூட்டிச் செல்வது எப்படி" இரு குறும்படங்களையும் இயக்குநர் ராஜ் சிவராஜ் வெளியிட்டு வைத்தார்.

இரண்டு காட்சிகளாக காட்சிப்படுத்தப்பட்ட இக் குறும்பட வெளியீட்டு நிகழ்வுக்கு இரண்டு தடவைகளும் அரங்கம் நிறைந்த ரசிகர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

"பை" குறும்படத்தை ராஜ் சிவராஜ் எழுதி, இயக்கி, படத்தொகுப்பு செய்ய நில்ருக்ஷன், சுலக்ஷன் நடித்துள்ளனர்.

இதற்கான இசை யினை சப்தமி கலையக சத்யன் கோபாலகிருஷ்ணன் (முரளி) வழங்கியுள்ளார். "Figure ஐ தியேட்டருக்கு கூட்டிச் செல்வது எப்படி" குறும்படத்தையும் ராஜ் எழுதி, இயக்கி படத்தொகுப்பு செய்ய காண்டீபன் மற்றும் ஷனா நடித்துள்ளனர். இதற்கான இசையினை மதீஷன் தனபாலசிங்கமும் colour correction and animations ஐ துஷிகரனும், மேற்கொண்டுள்ளனர். (48)

## துவிச்சக்கரவண்டியை திருடிய நபர் மடக்கிப்பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை புலோலி மந்திகை சந்திப் பகுதியில் நேற்று முன்தினம் பகல் வேளையில் துவிச்சக்கர வண்டியை திருடிய நபர் கையும் மெய்யுமாக பிடிபட்டார்.

குறித்த நபர் சந்திப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டியை திருடிக் கொண்டு ஓடிய நிலையில் அங்கிருந்தவர்கள் திருடனை துரத்திச் சென்று பிடித்ததுடன் குறித்த நபரை பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இப்பகுதியில் தொடர்ச்சியாக திருட்டுக்கள் இடம்பெற்று வருவதாகவும் இதுவரை 4, 5 துவிச்சக்கரவண்டிகள் களவாடப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கும் அப்பகுதி மக்கள் திருட்டு தொடர்பில் தாம் அவதானம் செலுத்தியமையாலேயே குறித்த திருடன் பிடிபட்டான் என அவர்கள் தெரிவித்துள்ளனர். (18)

## மாறுபட்டவிலைகளில் சிற்றுண்டிகள் விசனமடையும் நுகர்வோர்

(கரணவாய்)

நெல்லியடி நகரப்பகுதியில் உள்ள தேநீர் கடைகளில் சிற்றுண்டிகளும் தேநீரும் மாறுபட்ட விலைகளில் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர்.


தற்போது கோதுமை மாவின் விலை குறைவடைந்த நிலையில் சிற்றுண்டிகளின் விலை யும் குறைந்துள்ளது.

எனினும் குறித்த பகுதி கடைகளில் சிற்றுண்டிகள் மாறுபட்ட விலையில் கூடியும் சில கடைகளில் நிர்ணய விலையி லும் விற்கப்படுவதாகவும் இதனால் நுகர்வோர் நஷ்டத்தை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கின்றனர்.

நெல்லியடி நகரப் பகுதியில் நாளாந்தம் பல்வேறு இடங்களிலிருந்தும் மக்கள் வந்து செல்கின்ற நிலையில் குறிப்பாக பேருந்து பயணிகள் தேநீர் கடைகளில் தேநீர் மற்றும் சிற்றுண்டிகளை உட்கொள்வதாகவும் இந்நிலையில் கடை உரிமையாளர்கள் மாறுபட்ட விலையில் இவற்றை விற்பனை செய்வதால் தாம் கஷ்டங்களை எதிர் நோக்குவதாக தெரிவிக் கின்றனர்.

எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து நுகர்வோர் நலனில் அக்கறை கொள்ள வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (18)

## வெற்றிபெற்றோருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன



(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் சிவன்கோவிலில் (பர்வத வர்த்தனி அம்பாள் சமேத நடராச இராமலிங்க சுவாமி கோவில்) சிவராத்திரியை ஒட்டி அண்மையில் நடாத்திய சைவ நெறிப்போட்டிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வு சிவராத்திரி தினத்தன்று இடம்பெற்றது.

கோலம் போடுதல், மாலை கட்டுதல், பண்ணிசை மற்றும் சைவசமய வினாடிவினா ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் க.தில்லைநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை சொல்லருவி லலீசன் வழங்கி வைத்தார்.




# அப்படியா சங்கதி?

**செய்தி -**

"சிறிலங்காவில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான ஐ.நா.வின் விசாரணை அறிக்கையைத் தாமதப்படுத்துவதும் விவகாரத்தில் முடிவெடுக்க வேண்டியது ஐ.நா. மனித உரிமை ஆணையாளரே" என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

**அப்படியா சங்கதி?**

அப்படியென்றால், அமெரிக்கா நைஸாகக் கைகழுவுகிறதா? அல்லது நைஸாக நழுவப்பார்க்கிறதா?

நல்லாய்த்தானிருக்கிறது கதை.

இப்படித் தமிழர்களை அமெரிக்கா கைவிடும், தமிழர்களுக்குக் கதை விடும் என்று விசயம் அறிந்தவர்களுக்கு எப்பவோ தெரியும்.

விரல் சூப்பும் குழந்தைகளுக்கும் இது விளங்கும்.

ஆனால், பெருந்தமிழ்த் தலைமைகளுக்கும் தமிழ் அரசியல் ஆய்வாளர்களுக்கும் தமிழ்ப் பெரு ஊடகங்களுக்கும் இது விளங்காமல் போனதுதான் வேடிக்கை.

இந்தியாவும் அமெரிக்காவும் ஐ.நா.வும் தமிழ் மக்களுக்கு பால் பருக்கும் என்று இன்னும் நம்பிக்கொண்டிருக்கிற தலைவர்களையும் அந்தத் தலைவர்களை நம்பிக்கொண்டிருக்கிற தொண்டர்களையும் அபிமானிகளையும் என்னவென்று சொல்வது?

இலங்கையின் போர்க்குற்ற விவகாரம் உண்மைப் பிரச்சினையாக இருந்தாலும் அது மகிந்த ராஜபக்ஸவுக்கு எதிராக - அவருடைய ஆட்சிக்காலத்தில் ஊதிப்பெருப்பிக்கப்பட்ட ஒரு விவகாரம்.

அப்பொழுது அமெரிக்காவுக்கு எதிர்க்கோணத்தில் இலங்கை இருந்தது. எதிர் முனையில் மகிந்த சிந்தனையும் இருந்தது.

இப்பொழுது அமெரிக்காவுக்கு இனிக்கும் விதத்தில் இலங்கை இருக்கிறது. இனிக்கும் விதமாகவே புதிய ஆட்சியும் நடக்கிறது. இந்த நிலைமையில் எதற்காக அமெரிக்கா இலங்கைக்கு விருப்பமில்லாத ஒரு காரியத்தைப் பார்க்க வேணும்?

இலங்கை மீதான போர்க்குற்றம் என்பது இப்பொழுது அமெரிக்காவுக்குத் தேவையில்லாத ஒன்று.

தனக்குத் தேவையில்லாத ஒன்றை எதற்காக அமெரிக்கா வில்லங்கப்பட்டுத் தன்னுடைய தலையில் தூக்கி வைக்கப்போகிறது?

மகிந்த ராஜபக்ஸவுக்குக் கடிவாளம் போடுவதற்காகவே அப்பொழுது போர்க்குற்றம் விவகாரமாக்கப்பட்டது. இப்பொழுது அதற்கு அவசியம் இல்லை.

ஆகவே அமெரிக்கப் பிரேரணை என்பது மங்கிப்போன பழைய காகிதமாகி விட்டது.

போரின்போது பாதிக்கப்பட்டது, அமெரிக்கா அல்லவே. ஐ.நாவும் அல்லவே.

அது தமிழ் மக்கள்தானே.

தமிழ் மக்களின் மீதான போருக்கு முழுமையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கியதும் இந்தியாவும் அமெரிக்காவும்தானே.

போர்க்குற்றம் நடந்து கொண்டிருப்பதை அறிந்தும் அறியாத மாதிரி இருந்தது ஐ.நா தானே.

எல்லாமே ஒரு நாடகம்தான்.

இதையெல்லாம் அறிந்தும் அறியாதவர்களைப்போல "சர்வதேச சமூகத்தை நம்பியிருக்கிறோம். ஐ.நா விசாரணையைத் துரிதப்படுத்த வேணும். போர்க்குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். சர்வதேச சமூகத்துக்கு தமிழ் மக்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்திக் காட்ட வேண்டும்…." என்றெல்லாம் நடித்துக்கொண்டிருக்கும் தமிழ் அரசியல் தலைமைகள் ஆடுவதும் நாடகம்தான்.

தமிழ்ப்பெருங்குடி வெளியாரை நம்புவதும் வெளியாருக்காகக் காத்திருப்பதும் நாடகம்தான்.

நாடகமே இந்த உலகமடா… இந்த உலகமே பெரிய நாடகமடா….!

ம. அய்யம்பிள்ளை

ஊடுருவும் சூரிய ஒளி போன்றது உண்மை அதை யாராலும் மூடி மறைக்க முடியாது. - மில்டன்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## 'தேவை' தாண்டிய 'விருப்பம்' வேண்டாம்!

சாதாரண மக்களுடைய தேவைகள் எவை? அவர்களுடைய தேவைகள் எளிமையானவை, வெளிப்படையானவை, நேர்மையானவை. அவை உணவு, உடை, உறைவிடம், நன்னீர், ஆரோக் கிய உடல்நலம் ஆகியவைதான்.

இவற்றை இயற்கையிடமிருந்தே பெற்றுக் கொள்ளும்போது அவர்களுக்கு எந்தப் பிரச்சினைகளும் இருப்பதில்லை.

இயற்கை வளங்களை அழிக்காமல் அதிலிருந்து வாழ்வுக்குத் தேவையானவற்றை மட்டும் பெற்றுக்கொண்டு அவர்களது இதர தேவைகளான கல்வி, மருத்துவம், போக்குவரத்து, பொழுதுபோக்குக்கு கலைகள் என வசதி வாய்ப்புகளை ஒரு அரசு செய்து தருமாக இருந்தால் அந்த வாழ்க்கையே அவர்கள் மகிழ்ந்து கொண்டாடப் போதுமானது.

தாமே தயாரித்த மற்றும் சூழலில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டே தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கிறார்கள். அவற்றைக் கொண்டே தங்கள் வாழ்வியலை நகர்த்துகிறார்கள்.

ஆனால் நடுத்தரக் குடும்பங்களிலும், செல்வ வளமிக்க குடும்பங்களிலும்தான் "தேவைகளைத்" தாண்டி மேலதிக "விருப்பம்" பிரதானமாகியுள்ளது. நீண்ட நாள் ஆசைகள், திடீர் ஆசைகள், குழப்ப மனநிலை, மயக்க நிலை, அந்தஸ்து என பொருட்களை வாங்கிக் குவிக்கும் நுகர்வோர் மனநிலைக்குள் அவர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

நடுத்தரக் குடும்பங்களில்தான் பெரும்பாலும் பொருட்களை வாங்கிக் குவிப்பதா அல்லது சேமிப்பதா என்று முடிவெடுக்கத் தெரியாமல் தவிக்கிறார்கள்.

நுகர்வோர் மனநிலைக்கு அடிமையாகிற சமூகத்தில் அவர்களை எது மகிழ்விக்கும் என அறியாமல் குழப்பத்தில் உள்ளனர். செல்வம் சேர்க்க வேண்டும் என்ற பேராசைதான் சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கு மிக முக்கிய காரணமாக உள்ளது என்கிறார் பொருளாதார வல்லுனரும், சமூகவியலாளருமான Thorstein Veblen.

பொருட்களை வாங்கிக் குவிப்பதின் பின்னணியில் தங்களின் "மகிழ்ச்சி" அடங்கியுள்ளது என்பதை விட தன்னைச் சுற்றியுள்ள சமூகத்தின் முன்பு தாங்கள் "வளமிக்கவர்கள்" என்று காட்டுகிற மனப்பாங்கே உள்ளது. அதில்தான் அந்தஸ்து அடங்கியுள்ளது என நினைக்கிறார்கள்.

எதிர் பாலியலை கவர்வதற்கும் மயக்குவதற்குமாகவும் பொருட்களை வாங்கிக் குவிக்கிறார்கள். இதைத்தான் "பகட்டான நுகர்வு" என வர்ணிக்கிறார் வெப்லன்.

மகிழ்ச்சி எனச் சொல்லி பொருட்களை வாங்கிக் குவித்தாலும் பெரும்பாலும் அவர்கள் வாங்கிக் குவிக்கிற பொருட்கள் பயனற்று இருப்பதைக் காணலாம்.

தீர்மானிக்கப்பட்ட ஒரு சமூகத்தில் தங்களின் தேவைகளைக் கருதி குறிப்பிட்ட சில பொருட்களை வைத்துக் கொள்வதே சமூக நுகர்வு (Social Consumption) ஆகும். உதாரணமாக ஒருவர் மோட்டார் சைக்கிள் வைத்துக் கொள்ளுதல், செல்போன் வைத்துக் கொள்ளுதல், வீடு வாங்கிக் கொள்ளுதல், தரமான பள்ளிகளில் குழந்தைகளைப் படிக்கச் செய்தல் ஆகியவைதான் சமூக நுகர்வுக்கான காரணிகள்.

சுற்றத்தினருக்கு இணையாக வாழ வேண்டும். தங்களின் சுற்றத்தார் படிக்க வைக்கிற பாடசாலைகளிலேயே தங்கள் குழந்தைகளைப் படிக்க வைக்க வேண்டும். இதை நிறைவேற்ற விடுமுறை நாட்களில் கூட பணிபுரிகிறார்கள். ஓய்வு பெறும் நாள் வரை ஓயாது ஓடுகிறார்கள்.

ஒருவர் ஓடுவதைப் பார்த்து அடுத்தவர் ஓடுகிற சமூகமாகத்தான் நுகர்வு மனநிலை இவர்களை மாற்றியுள்ளது.

இந்த நுகர்வுப் போட்டா போட்டி மனநிலையிலிருந்து நாம் விடுபட வேண்டும். நுகர்வு வெறிகொண்டு இயற்கையிடமிருந்து விலகிச் செல்லச் செல்ல மானுட சமூகத்தின் மகிழ்ச்சிநிறை வாழ்வும் மனிதனிடமிருந்து விலகிச் சென்றுகொண்டிருக்கும்.

- ஆசிரியர்

# முறையற்ற பண அறவீடு அதிபர்கள் மீது நடவடிக்கை

## கல்வி அமைச்சர் எச்சரிக்கை

முறையற்ற விதத்தில் பணம் அறவிடும் பாடசாலை அதிபர்கள் தொடர்பில் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அவ்வாறான அதிபர்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கான பெயர்ப் பட்டியல் கிடைத்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய அரசாங்கத்தினால் இவ்வாறான நடவடிக்கைகளை நிறுத்தும் வகையில் சுற்றுநிருபம் வெளியிடப்பட்டது.

எனினும் சில அதிபர்கள் அந்த சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள தகவலுக்கு மாறாக செயற்பட்டுள்ளமை தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் கல்வி அமைச்சர் கூறியுள்ளார்.

அமைச்சினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள விசாரணைப் பிரிவிற்கு தொடர்ந்தும் முறையற்ற விதத்தில் பாடசாலைகளில் பணம் அறவிடப்படுகின்றமை குறித்து முறைப்பாடுகள் கிடைப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# மாங்குளம் பொலிஸ் பிரிவு நேற்று முன்தினம் முதல் நீக்கம்

(கொழும்பு)

மாங்குளம் பொலிஸ் பிரிவு நேற்றுமுன்தினம் முதல் நீக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, மாங்குளம் பொலிஸ் பிரிவின் கீழ் இயங்கிய ஆறு பொலிஸ் நிலையங்கள் வேறு இரண்டு பொலிஸ் பிரிவுகளுடன் இணைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவித்தார்.

இரண்டு பொலிஸ் நிலையங்கள் முல்லைத்தீவு பொலிஸ் பிரிவிற்கும், நான்கு பொலிஸ் நிலையங்கள் வவுனியா பொலிஸ் பிரிவிற்கும் சேர்க்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாக நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையின் போது ஏ-9 வீதியில் பயணிக்கும் போது ஏற்படக்கூடிய இடர்களைத் தவிர்க்கும் பொருட்டு மாங்குளம் பொலிஸ் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டதாகவும் பொலிஸ ஊடகப் பேச்சாளர் கூறினார்.

தற்போது யுத்தம் நிறைவடைந்து குறித்த வீதியில் காணப்பட்ட போக்குவரத்துத் தடைகளும் நீக்கப்பட்டுள்ள நிலையில், நிர்வாகத்தை இலகுபடுத்தும் வகையில் மாங்குளம் பொலிஸ் பிரிவு நேற்று முதல் நீக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன சுட்டிக்காட்டியுள்ளார்.

# அணுசக்தி ஒத்துழைப்பு பாகிஸ்தானுடன் பேச்சு

இலங்கை அணுசக்தி ஒத்துழைப்பு குறித்து பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் பாட்டளி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இந்தியா சென்றிருந்த அமைச்சர் பாட்டளி சம்பிக்க ரணவக்க டில்லியில் அணுசக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளார்.

பாகிஸ்தானுடன் உறவினை வலுப்படுத்திக் கொள்ளவென தொழில்நுட்பத்திறன் மற்றும் மனித திறமைகள் உடன்படிக்கையில் கைச் சாத்திட இலங்கை எதிர்பார்த்துள்ளது.

ரஷ்ய அரசுக்குச் சொந்தமான ROSATOM நிறுவனத்துடன் முன்கூட்டியே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதென பாட்டளி சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவுடன் இணைந்து செயற்படவும் இலங்கை எதிர்பார்த்துள்ளது. ஆனால் அந்த நாடுகளுடன் அணுசக்தி ஒத்துழைப்பு கிடையாது என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# அனைத்துவித பயங்கரவாதமும் இல்லாது ஒழிக்கப்பட வேண்டும்

## அரசாங்கம் கோரிக்கை

(கொழும்பு)

எல்லா வகையிலான பயங்கரவாதமும் இல்லா தொழிக்கப்பட வேண்டுமென இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

அண்மையில் எகிப்தைச் சேர்ந்த கொப்டிக் கிறிஸ்தவர்கள் 21 பேரை ஐ.எஸ்.ஐ.எஸ. தீவிரவாதிகள் படுகொலை செய்தமையைக் கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதம் ஓர் மிகப் பெரிய சவால் எனவும், சர்வதேச சமூகம் பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க திடமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளது.

மிகக் கொடூரமான முறையில் 21 கொப்டிக் கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதல் நடவடிக்கையானது மனிதாபிமானத்திற்கு எதிரான கொடிய செயல் என வெளிவிவகார அமைச்சு கண்டனம் வெளியிட்டுள்ளது.

இந்தத் துயரம் மிகுந்த தருணத்தில் எகிப்திய மக்களுடன் துன்பத்தை இலங்கை மக்கள் பகிர்ந்து கொள்வதாகவும், ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளது.

# உள்நாட்டு பொறிமுறை நாட்டிற்கு ஆபத்தானது

## எச்சரிக்கிறார் குணதாஸ

(கொழும்பு)

உள்நாட்டு விசாரணை பொறிமுறை நாட்டுக்கு ஆபத்தானது என தேசிய அமைப்புக்களின் ஒன்றிய இணைப்பாளர் குணதாஸ அமரசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர், உள்நாட்டு விசாரணைகள் குறித்து கேள்விகளை எழுப்ப முடியாது என்று கூறியுள்ளார்.

வெளிநாட்டில் இருந்து மேற்கொள்ளப்படும் விசாரணை ஒன்று தொடர்பில் எதிர்ப்புகளை வெளிப்படுத்த முடியும், ஆனால் உள்நாட்டு விசாரணைகளுக்கு அவ்வாறு செய்யமுடியாது.

அத்துடன் இது உள்நாட்டு விசாரணை என்று கூறப்படுகின்ற போதும், அவர்களுக்குத் தேவையான வகையிலேயே இந்த விசாரணை இடம்பெறும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# வடமாகாண சபையின் பொறுப்புணர்வற்ற போட்டுடைக்கும் காரியம்

**சுகு-ஸ்ரீதரன்**

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு ஆறு வாரங்கள் கடந்த நிலையில் வட மாகாணசபை யுத்தத்தின் இறுதி நாட்களில் நடந்த பேரழிவு இனப்படுகொலை பற்றிய ஜெனிவா அறிக்கை உரியகாலத்தில் - எதிர்வரும் மாாச் மாதத்தில் வெளியிடப்பட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசரும் வடக்கு முதலமைச்சருமான விக்னேஸ்வரன் அவர்கள் வழமை-

வித்துள்ளது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா வின் அனுசரணையுடன் உள்நாட்டில் நியாயமான விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என இந்த அரசு உறுதியளித்துள்ளது. இந்த சூழ்நிலையில் வடக்கு மாகாணசபை இப்படியொரு தீரமானத்தைக் கொண்டுவந்ததன் மூலம் பேரினவாத சக்திகளைப் பலப்படுத்தும் மூலோபாய தவறொன்று விடப்பட்டிருக்கிறது.

நிலைமை சீர் செய்யப்பட வேண்டும்

நீடித்து நிலவுவது இன்றைய ஆளும் தரப்பினருக்கும் விருப்பமான விடயமல்ல.

சிவில் வகைப்பட்ட ஜனநாயக நிலவரங்களை நோக்கி நகர வேண்டிய தேவையிருக்கிறது. அதைநோக்கி வரலாறு உந்தித் தள்ளிக்கொண்டிருக்கிறது.



**மாகாணசபைக்குரிய அதிகாரங்களை முழுமைபெறச் செய்வது உள்ளிட்ட ஏராளம் பிரச்சினைகள் நிறைந்து கிடக்கின்றன. இவற்றையெல்லாம் விட்டுவிட்டு போதையூட்டும் சுலோகங்களுடன் யதார்த்தத்துக்கு புறம்பாகச் செயற்பட முனைகின்றனர். பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான தற்போதைய சந்தர்ப்பமும் இழக்கப்பட்டு விடுமோ என்ற ஐயம் எழுந்துகொண்டுதான் இருக்கிறது. நிதானமில்லாத போக்குகள் பல சந்தர்ப்பங்களில் பாரிய நஷ்டத்தை சேதாரத்தை எமது சமூகத்துக்கு ஏற்படுத்தியிருக்கின்றன என்பதை இவர்கள் மீண்டும் மீண்டும் உணரத் தலைப்படுகிறார்கள் இல்லை.**

மயான இலங்கையின் சுதந்திரத்திற்கு பின்னான வரலாற்றைச் சொல்லி யுத்தத்தின் இறுதி நாட்களில் நிகழ்ந்த அனர்த்தங்கள் வரையும் குறிப்பிட்டு இதனை வலியுறுத்தினார்..

புதிய அரசாங்கம் விசேட அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவது ஊழலற்ற நிர்வாகம், நிர்வாகத்தில் அரசியல் தலையீடுகளை தவிர்ப்பது சமூகங்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்துவது, ஜனநாயகத்தை மேம்படுத்துவது, மலையகத்தின் வீடமைப்புத் திட்டங்களை உருவாக்குவது, அரச, தனியார் துறை ஊழியர்களின் ஊதியத்தை அதிகரிப்பது, சாதாரண மக்கள் மீதான விலைவாசி சுமைகளைக் குறைப்பது, சிவில் நிர்வாகத்தை பலப்படுத்துவது- மக்களுக்கு நேசமானதாக அதனை உருவாக்குவது உள்ளிட்ட பல்வேறு விடயங்களைத் தனது 100 நாள் வேலைத்திட்டத்தில் உள்ளடக்கியுள்ளது.

சுற்றாடல் பாதிப்புக்களை ஏற்படுத்தாத விதமாக பேண்தகவு கட்டமைப்புக்களை உருவாக்குவது என்பவற்றை தேர்தல் வாக்குறுதியாக அளித்துள்ளது.

தவிர உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றுவது, பல ஆண்டுகளாக இடம்பெயர்ந்து வாழும் மக்களை தமது சொந்த இடங்களில் குடியேற்றுவது, அரசியல் கைதிகளை விடுதலை செய்வது, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவது, உள்ளிட்ட விடயங்களை சாத்தியமாக்குவது, அரசியலமைப்பில் பாரிய சீர்திருத்தங்களைச் செய்வது, இலங்கையின் பல்லினப் பாங்கை உறுதி செய்வது உள்ளிட்ட பல விடயங்கள் நிகழலாம் என்ற எதிர்பார்ப்பையும் உருவாக்கியுள்ளது.

நடக்குமோ நடக்காதோ போதிய அவகாசத்தை அளிக்காமல் வடக்கு மாகாணசபை எடுத்தேன் கவிழ்த்தேன் என்றவாறு தீர்மானங்களை சபையில் நிறைவேற்றுவது, நீண்டகால நோக்கில் தமிழ் மக்களுக்கு நன்மை பயக்குமா என்பது முக்கியமான கேள்வியாகும்.

தேவையில்லாமல் சம்பந்தா சம்பந்தமில்லாமல் மோதல் நிலைமைகளைத் தோற்றுவிப்பது மாகாணசபை ஆக்கபூர்வமான முறையில் இலகுவாக செயற்படுவதற்கு உதவுமா? என்பதெல்லாம் தவிர்க்க முடியாத கேள்விகளாகும்.

உண்மையில் இவர்களுக்கு பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் அக்கறை இருக்கிறதா? என்ற கேள்வி எழுகிறது.

தமிழ் மக்களின் நீண்டகால அன்றாட விடயங்களுடன் இவர்கள் விளையாடுகிறார்களா என்ற ஐயத்தைத் தோற்று

என்பதைவிட அராஜக வழிகளில் நிலைமையை மோசமடையச் செய்யும் காரியங்களே நடைபெறுகின்றன.

இவர்கள் கூறும் சர்வதேச சமூகம் இவர்களுடைய நடைமுறையை ஆதரிக்கப் போவதில்லை. எதிரான பிரதிபலிப்புக்களும் தனிமைப்படுத்தல்களுமே இங்கு மிச்சமாகும்.

புதிய அரசுக்கு சந்தர்ப்பத்தை வழங்காத இந்த அராஜகம் சமூகப் பொறுப்பற்ற தனத்தின் வெளிப்பாடாகும். கொஞ்சமேனும் முன்னேற்றகரமாக இருக்கும் நிலைமைகளைப் பின் தள்ளுவதாகவும் இது அமைந்துள்ளது.

புதிய அரசின் பிரதமர் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான தமது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார். தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்களும் இதுபற்றிய நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளார. இத்தகைய சூழ்நிலையில் இந்த தீர்மானம் இனசமூகங்களிடையே ஐக்கியத்தை விரும்பும் சக்திகளை பலவீனப்படுத்தி அதிதீவிர இனவாத சக்திகளை பலப்படுத்துவதாகவே அமையும்.

70 வருடங்களுக்கு மேலாக நிலவும் பிரச்சினை இன்னும் வரம்பற்ற காலத்திற்கு நீடித்துச் செல்வதற்கே வழிவகுக்கும்.

தற்போது ஆட்சியில் இருப்பவர்கள் தமக்கு வாக்களித்த மக்களின் எதிர்பார்ப்புக்களை ஒரேயடியாக புறக்கணித்துவிட முடியாது.

சமூக ஏற்றத்தாழ்வு இடைவெளி அதிகரித்த சூழ்நிலையில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைக்க வேண்டிய சீர்திருத்தம் மேற்கொள்ள வேண்டியிருந்தது. அரச தனியார் துறை ஊழியர்களின் ஓய்வூதியர்களின் ஊதியத்தை அதிகரிக்க வேண்டியிருந்தது.

ஒரு குறிப்பிட்ட குடும்பத்தினருக்கு விசுவாசமான வகையில் உருவாக்கப்பட்ட இராணுவ கட்டமைப்பு- அதிகாரத்தை அனுபவித்த கட்டமைப்பு

**நடக்குமோ நடக்காதோ போதிய அவகாசத்தை அளிக்காமல் வடக்கு மாகாணசபை எடுத்தேன் கவிழ்த்தேன் என்றவாறு தீர்மானங்களை சபையில் நிறைவேற்றுவது, நீண்டகால நோக்கில் தமிழ் மக்களுக்கு நன்மை பயக்குமா என்பது முக்கியமான கேள்வியாகும். தேவையில்லாமல் சம்பந்தா சம்பந்தமில்லாமல் மோதல் நிலைமைகளைத் தோற்றுவிப்பது மாகாணசபை ஆக்கபூர்வமான முறையில் இலகுவாக செயற்படுவதற்கு உதவுமா? உண்மையில் இவர்களுக்கு பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் அக்கறை இருக்கிறதா?**

1970கள் தொடக்கம் இந்த நாட்டில் நிலவும் ஜனநாயக சீர்குலைவு நிலைகளிலிருந்து மீளவேண்டியிருக்கிறது.

பயமற்று ஒவ்வொரு மனிதரும் மனித சமூகமும் சுதந்திரமாக வாழ்வதற்கான நிலைமைகள் ஸ்தாபிக்கப்பட வேண்டியிருக்கிறது. அதற்கான வாய்ப்புக்களை கதவுகளை அடைத்து விடும் அதிதீவிர நிலைப்பாடாகவே வடக்கு மாகாணசபையின் நடவடிக்கைகளைக் கருத முடியும்.

வடக்கு மாகாணசபை கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் ஏராளம் இருக்கின்றன. பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் சுதந்திரமான வாழ்வு, இடம்பெயர்ந்தவர்களின் மீள்குடியேற்றம், தண்ணீரில் எண்ணெய்க் கழிவுகள் கலந்ததனால் சுன்னாகமும் அதன் சுற்றுப்புறங்களிலும் ஏற்பட்டுள்ள பாரிய சூழலியல் பிரச்சினைகள், குடிநீர் வசதிகளை அதிகரிப்பது உள்ளூர் தெருக்களை செப்பனிடுவது, கல்வி, சுகாதார நிலைகளை மேம்படுத்துவது சுற்றாடல் அழிவு சவால்களை எதிர்கொள்வது இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்களை அதிகரிப்பது....

மாகாணசபைக்குரிய அதிகாரங் களை முழுமைபெறச் செய்வது உள்ளிட்ட ஏராளம் பிரச்சினைகள் நிறைந்து கிடக்கின்றன.

இவற்றையெல்லாம் விட்டுவிட்டு போதையூட்டும் சுலோகங்களுடன் யதார்த்தத்துக்கு புறம்பாக செயற்பட முனைகின்றனர். உண்மையில் உலக உள்ளூர் யதார்த்தங்கள் இங்கு புரிந்துகொள்ளப் படவில்லை.

பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான தற்போதைய சந்தர்ப்பம் இழக்கப்பட்டு விடுமோ என்ற ஐயம் எழுந்துகொண்டு தான் இருக்கிறது.

நிதானமில்லாத போக்குகள் பல சந்தர்ப்பங்களில் பாரிய நட்டத்தை சேதாரத்தை எமது சமூகத்துக்கு ஏற்படுத்தியிருக்கின்றன என்பதை இவர்கள் மீண்டும் மீண்டும் உணரத் தலைப்படுகிறார்கள் இல்லை.

மனித உரிமைகள் பற்றிய அக்கறைகளை இங்கு யாரும் குறைகூறி விட முடியாது. ஆனால் அது "நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறனுமின்றி" செய்யும் வஞ்சனையாக இருக்கமுடியாது.

எனவே சிந்தித்து தூரநோக்கில் எமது மக்களுக்கு எவையெவை நன்மை பயக்கும் அவல வாழ்விலிருந்து விடுதலையையும் விமோசனத்தையும் பெற்றுத்தரும் என்ற நன் நோக்கிலிருந்து செயற்பட வேண்டும்.

அற்ப அதிகார தேர்தல் நோக்கங்களுக்காக மக்களுக்கு தீங்கு விளைவிக்கும் தீர்மானங்கள் தவிர்க்கப்படல் வேண்டும்.

வடக்கு மாகாணசபையின் தீர்மானம் இனப்பிரச்சினைக்குத் நிரந்தர தீர்வு காண விரும்பும் அண்டை நாடு மற்றும் சர்வதேச சக்திகளுக்கு அசௌகரியத்தையும் சங்கடத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான அவ நம்பிக்கையை மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் ஏற்படுத்துவது எமது பிரச்சினைகளை நாளடவில் யாரும் பொருட்படுத்தாத நிலைமைக்கு கொண்டு சேர்ப்பிக்கும்.

வடக்கு மாகாணசபையின் தீர்மானம் டெல்லியில் அதிருப்தியை தோற்றுவித்துள்ளதென்பதை நாம் அங்கிருந்து வரும் செய்திகளினூடாக உணர முடிகிறது.

முதிர்ச்சியற்ற எல்லாவற்றையும் போட்டுடைக்கின்ற செய்ற்பாடாக இது பார்க்கப்படுகிறது.

அதிகாரப்பரவலாக்கல் தொடர்பாக தென்னிலங்கையில் கரிசனை கொண்ட சக்திகளையும் இது பலவீனப்படுத்துகிறது.

சந்தர்ப்பங்கள் நழுவவிடப்படுகின்றன. எரிச்சலடைவதற்கான நிலைமைகள் வலுவடைவதில் தமிழ் மக்களுக்கு மேலும் மேலும் பின்னடைவையே ஏற்படுத்தும்.

எனவே தவறுகள் உடனடியாக சரி செய்யப்படல் வேண்டும். இதற்கான அழுத்தங்கள் மக்கள் கல்வியாளர்கள் மத்தியிலிருந்து எழ வேண்டும்.

# 13பிளஸ் அழுத்தத்தை கைவிட்டது இந்தியா

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இந்தியா 13ஆவது திருத்தச்சட்டத்துக்கு அப்பால் சென்று அரசியல் தீர்வு காணும்படி வலியுறுத்தவில்லை என்று, அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடந்த அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் சந்திப்பில், அண்மையில் புதுடில்லி சென்றிருந்த ஜனாதிபதி தலைமையிலான குழுவிடம், 13ஆவது திருத்தச்சட்டத்துக்கு அப்பால் சென்று தீர்வு காண்பதாக முன்னைய ஆட்சியாளர் மகிந்த ராஜபக்ச கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுமாறு இந்தியப் பிரதமர் வலியுறுத்தினாரா என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் ராஜித சேனாரத்ன,

அத்தகைய எந்தக் கோரிக்கையும் இந்தியாவினால் விடுக்கப்படவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தான் கூட்டல் (பிளஸ்), கழித்தல் (மைனஸ்) என்று குழப்பினார். அவரது அந்தக் கணிப்புகள் தான் தோல்விக்கு இட்டுச் சென்றது.

இனப்பிரச்சினைக்கு, எல்லா சமூகங்களும் ஏற்றுக் கொள்ளத்தக்க தீர்வு ஒன்றை எட்டுவதாக இந்தியாவிடம் மைத்திரிபால சிறிசேன அரசாங்கம் வாக்குறுதி அளித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஆக்கபூர்வமாகவும், சாதகமாகவும் செயற்படும்.

ஒற்றையாட்சிக்குள் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதே தற்போதைய அரசாங்கத்தின் கொள்கை என்று தெரிவித்துள்ளார்.

# கேபி குறித்து தகவல் தர ஒரு வார அவகாசம் தேவை

## சட்டமா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

கேபி எனப்படும் குமரன் பத்மநாதன் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை குறித்து தன்னால் எவ்வித கருத்தையும் வெளியிட முடியாது எனவும், கருத்துவெளியிட இன்னும் ஒருவார கால அவகாசம் தேவை என்றும் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுகத கம்லத் நேற்று முன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

குமரன் பத்மநாதனை கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு கோரி மக்கள் விடுதலை முன்னணி கடந்த மாதம் 19 ஆம் திகதி தாக்கல் செய்த மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.


வழக்கில் சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டா ஜெயரல் சுகத கம்லத், கேபி தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை குறித்து தனக்குத் தெரியாது என்று கூறியுள்ளார்.

மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் முன்வைத்த கால அவகாச கோரிக்கையை ஏற்றுக் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி விஜித் மல்ல கொட, எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு மனுவை பிற்போட்டுள்ளார். குறித்த மனு கடந்த 5 ஆம் திகதி விசாரணைக்கு வந்தபோது குமரன் பத்மநாதனின் கடவுச்சீட்டை முடக்கி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

குமரன் பத்மநாதன் பல பெயர்களில் கடவுச்சீட்டு தயாரித்து இலங்கை வந்துள்ளதாக தெரியவருகிறது.

# மார்ச் 13 இல் இலங்கைக்கு வருகிறார் மோடி

(கொழும்பு)



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அடுத்தமாதம் இலங்கைக்கு பயணம் மேற்கொள்வார் என்பதை இலங்கை அரசாங்கம் அதிகாரபூர்வமாக நேற்று முன்தினம் அறிவிதுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில், அமைசசர் ராஜித சேனாரத்ன இதனை அறிவித்தார்.

அடுத்தமாதம், 13 ஆம் திகதி கொழும்பு வரும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, 15 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார்.

இந்தியப் பிரதமர் ஒருவர் கடந்த 25 ஆண்டுகளில், இலங்கைக்கு மேற்கொள்ளும் முதல் அதிகாரபூர்வ பயணம் இதுவாகும் என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கடைசியாக முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி 1987 ஆம் ஆண்டு அரசுமுறைப் பயணமாக இலங்கை வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# முன்னைய அரசின் மோசடிகள் விசாரணைகளில் திருப்தி இல்லை

## - அமைச்சர் அர்ஜுன விசனம்

கடந்த அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டு வரும் ஊழல் மோசடிகள் தொடர்பில் தற்போதைய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து திருப்தி அடைய முடியாது என துறைமுக மற்றும் விமான சேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தினால் பாரியளவில் ஊழல் மோசடிகள் மேற்கொள்ளப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.



இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தற்போதைய அரசாங்கம் மேற்கொண்டு வரும் விசாரணைகள் மற்றும் அதனுடன் தொடர்புடையவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் குறித்து திருப்தி அடைய முடியாது.

துறைமுகம் மற்றும் விமான நிலையம் ஆகியவற்றில் பாரியளவில் மோசடிகள் இடம்பெற்றுள்ளன.

ஆரம்ப கட்ட விசாரணைகளின் மூலம் இந்த விடயம் அம்பலமாகியுள்ளது.

இது குறித்து விரிவான விசாரணைகள் நடாத்தி குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் தராதரம் பாராது தண்டிக்கப்படுவர்.

விமான நிலையம், சிவில் விமான சேவை அதிகார சபை, துறைமுக அதிகார சபை போன்றன தொடர்பில் விசாரணை நடாத்தப்பட உள்ளது என சிங்கள பத்திரிகையொன்றுக்கு அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

# நிறைவேற்று ஜனாதிபதிமுறை இரத்துச்செய்ய சட்டமூலம்

நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதற்கான சட்டமுலம் தயாரிக்கப்பட்டு வருவதாக ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இரத்துச்செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பொருட்டு நியமிக்கப்பட்டுள்ள குழுவின் உறுப்பினரான இவர், கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சநதிப்பின் போது இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசாங்கத்தின் அடிப்படை கொள்கை குறித்து அனைத்து கட்சிகளுடனும் கலந்துரையாடப்படுகின்றன. எமது கலந்துரையாடல் தொடர்பான விடயங்களை மக்களின் பார்வைக்காக இன்னும் சில தினங்களில் மூன்றுமொழிகளிலும் வெளியிடுவோம். கலந்துரையாடலின் விடயங்களை அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் வழங்கியுள்ளோம்.இதற்கு கட்சிகளுக்கு இடையில் இணக்கப்பாடு வந்தால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதில் சிக்கல் இல்லை எனத் தெரிவித்தார்.

# கலைக்கப்படவில்லை நீலப்படையணி



நீலப் படையணியைப் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரத்துச் செய்துள்ளதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை என கட்சியின் தேசிய அமைப்பாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். நீலப்படையணி என்ற அமைப்பின் பெயர் மாற்றப்பட்டுள்ளதே தவிர, அமைப்பு இரத்துச் செய்யப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் அணி கடந்த காலங்களில் நீலப்படையணி என அழைக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். எனினும், கட்சியின் யாப்பு விதிகளின் மாற்றத்தின் போது நீலப்படையணி மற்றும் மகளிர் பிரிவு ஆகியன தொடர்பில் பெயர் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இதன்படி, நீலப்படையணியின் பெயர் இளைஞர் முன்னணி எனவும், மகளிர் பிரிவின் பெயர் மகளிர் முன்னணி எனவும் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# ஜனவரி எட்டாம் திகதிக்குப்பின்னர் அரசியலில் நிகழவில்லை மாற்றம்

## விசனம்கொள்கிறது ஜே.வி.பி.

(கொழும்பு)



கடந்த ஜனவரிமாதம் எட்டாம் திகதிக்குப்பின்னர் அரசியலில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லையென ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

அரச மொழிப்பெயர்ப்பு சேவைகள் சங்கத்தின் 41 ஆவது வருடாந்த மாநாட்டில் கலந்து கொண்ட தேசிய தொழிற்சங்க சம்மேளன மத்திய நிலையத்தின் தலைவரும் மாகாண சபை உறுப்பினருமான கே.டீ.லால காந்த,மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனவரி மாதம் 8 ஆம் திகதியிலிருந்து அரசியலில் பாரிய மாற்றம் ஏற்பட்டுவிட்டதாக எவரும் கருதவேண்டாம், .ஜோன் அமரதுங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வருவதாக கூறினர். அவ்வாறு நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்படுமாயின் நாடாளுமன்றத்தை கலைப்பதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க கூறினார். ஆனால் அவ்வாறு செய்யாமைக்கான காரணம், ஏப்ரல் 19 ஆம் திகதி , நாடாளுமன்றத்திற்கு ஐந்து வருடங்கள் நிறைவு பெறுகின்றன.அதற்கு முன்னர் நாடாளுமன்றம் கலைக்கப்படுமாயின் அங்குள்ள பெரும்பாலானவர்களுக்கு ஓய்வூதியம் இல்லாதுபோவதுடன் மீண்டும் நாடாளுமன்றத்துக்கு வருவதற்கான வாய்ப்பும் இல்லாது போகும் என, தெரிந்தமையினால் இவ்வாறு செயற்படுகின்றனர் என கே.டீ.லால்காந்த தெரிவித்தார்.

# சூழல் பாதுகாப்பு சட்டங்களை அழுத்தமின்றி செயற்படுத்துக

## - ஜனாதிபதி அறிவுறுத்து

(கொழும்பு)

சூழல் பாதுகாப்பு சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது அழுத்தங்களுக்கு அடிபணியாது அதிகாரிகள் தமது கடமைகளை முன்னெடுக்கவேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.


பத்தரமுல்லையில் உள்ள மத்திய சுற்றாடல் அதிகார சபையில் நடைபெற்ற சந்திப்பொனறில் கலந்துகொண்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து அதிகாரிகளும் சட்டத்தை முழுமையாக பாதுகாத்து செயற்பட வேண்டும் எனவும்அவ்வாறான அதிகாரிகளுக்காக தான் எந்த சந்தர்ப்பத்திலும் முன்னிற்பதற்கு தயார் எனவும், அச்சமின்றியும், சந்தேகமின்றியும், நாட்டுக்காக செயற்பட வேண்டும் எனவும் அதிகார சபையின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.



# நாச்சிக்குடா சந்தைக் கட்டடத்தில் வியாபாரத்திற்கு அனுமதியில்லை

## விசனமடையும் வர்த்தகர்கள்



முழங்காவில் நாச்சிக்குடா பகுதியில் உள்ள சந்தை வியாபாரிகளின் நன்மை கருதி புதிதாக அமைக்கப்பட்ட சந்தைக்கட்டடத்தில் வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படவில்லை என அப்பகுதி வியாபாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

சந்தை வியாபாரிகளின் நன்மை கருதி நாச்சிக்குடா பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட சந்தைக் கட்டடத் தொகுதியில் 10 மாதங்களாகியும் இன்னமும் வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கும் வியாபாரிகள் இந்த சந்தைக் கட்டடம் பூநகரிப் பிரதேச சபைக்குட்பட்டது எனவும் தெரிவித்துள்ளனர். அதுமட்டுமன்றி அப்பகுதியில் ஏற்கனவே இடம் பெற்றுவரும் சந்தைகளால் வியாபாரிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் கவலை தெரிவித்துள்ளனர். மேலும் இந்த வியாபாரிகள் தமது வியாபாரத்தை சிறந்த முறையில் முன்னெடுப்பதற்கு போதிய இடவசதி இல்லாமல் உள்ளதாகவும் இது பற்றி பிரதேச சபைக்கு தெரியப்படுத்தியதாகவும் தெரிவித்துள்ளனர். அதுமட்டுமன்றி தமது பொருட்கள் மழை மற்றும் வெயில் காரணமாக பழுதடைவதாக தெரிவித்துள்ளதுடன் அப்பகுதியிலுள்ள கழிவுப் பொருட்களை பிரதேசசபை அகற்றாது அசமந்தப் போக்கில் செயற்பட்டு வருவதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும் தமது துர்ப்பாக்கிய நிலமையைக் கண்டும் காணாதது போல் பூநகரிப் பிரதேச சபை செயற்படுவது கவலை அளிப்பதாக தெரிவித்துள்ள சந்தை வியாபாரிகள் 10 மாதகாலமாக திறக்கப்படாதுள்ள இந்த சந்தைக் கட்டடத்தைத் திறந்து வியாபாரத்துக்கு உதவ முன்வர வேண்டுமென கோரிக்கை ஒன்றையும் முன்வைத்துள்ளனர். (81)

# முத்துமாரி அம்பாளுக்கு முதலாவது மகோற்சவம்


காரைநகர் வலந்தலை மடத்துக்கரை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் திருத்தல வரலாற்றில் முதலாவது கொடியேற்ற நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை வெகு விமர்சையாக நடைபெறவுள்ளது.

இவ் ஆலயத்தில் இதுவரை காலமும் கொடித்தம்பம் இல்லாத நிலையில் முதன் முறையாக கொடித்தம்பம் நாட்டப்பட்டு மகோற்சவம் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

இதில் 8 ஆம் நாள் வேட்டைத்திருவிழாவும், 9 ஆம் நாள் சப்பறத்திருவிழாவும், 10 ஆம் நாள் தேர்த்திருவிழாவும் இடம்பெறவுள்ளதுடன் 11 ஆம் நாள் தீர்த்த உற்சவமும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளன. (50)

## உபகரணங்கள் வழங்கல்

நாம் நண்பர்கள் அமைப்பினால் மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப் போட்டி மூலம் திரட்டப்பட்ட நிதியில் பூநகரி பிரதேசத்தில் கவுதாரிமுனையில் உள்ள வினாசியோடை முத்துத்தம்பி வித்தியாலயத்தில் சுமார் 83 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் அண்மையில் குறித்த அமைப்பினரால் கையளிக்கப்பட்டன இந் நிகழ்வில் பாடசாலை அதிபர், கல்வித் திணைக்கள அதிகாரிகள், ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.(48)



கீரிமலை நகுலேஸ்வர ஆலய தேர்த்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை காலை பக்திபூர்வமாக இடம்பெற்றதனைக் காணலாம். (48)

## இசைத்தமிழ் இறுவட்டு வெளியிடப்பட்டது

(சாவகச்சேரி)

கொடிகாமம் பெரியநாவலடி சிவகாமசுந்தரி அம்மன் கோவிலின் திருவூஞ்சல் பதிகம் மற்றும் இசைத் தமிழ் இறுவட்டு ஆகியவற்றின் வெளியீட்டு விழா கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் க.குணசிங்கம் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு நூலை வெளியிட்டு வைத்தார்.


இறுவட்டை முன்னாள் அதிபர் க.ஆனந்தராசா வெளியிட்டு வைத்தார். ஊஞ்சற்பதிகப் பாடல்களை நீர்வை தி.மயூரகிரி சர்மாவும் இசைப்பாக்களை வெற்றி. துஷ்யந்தனும் ஆக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (11)



# சொல்லாத சேதி

எஸ். அனசூயா

# இது இப்படி நடந்திருந்தால்....?



தனது இரண்டாவது பதவிக்காலத்தில் இரண்டு வருடங்கள் இன்னமும் இருக்கக்கூடியதாக அவசரப்பட்டு ஜனாதிபதித் தேர்தலை நடாத்தியது எவ்வளவு தவறு என்பதை மகிந்த ராஜபக்ச தனது தேர்தலின் பின்னர் நிச்சயமாக உணர்ந்திருப்பார். இடதுசாரிக் கட்சிகள் உட்பட அவரது சொந்தக் கட்சியினர் கூட எடுத்துச் சொல்லியும் அவர் ஒருவரது சொல்லையும் கேட்காமல் ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடாத்தப் புறப்பட்டு தலை குப்புற விழுந்து கிடக்கிறார். இதைத்தான் நமது முன்னோர்கள் "கெடுகுடி சொல் கேளாது" என்று சொன்னார்களோ என்னவோ?

தனது வெற்றியில் இருந்த அளவுக்கதிகமான நம்பிக்கையாலும், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள பலம் வாய்ந்த சக்திகள் தனக்கு எதிராகத் திரண்டிருப்பதைப் புரிந்து கொள்ளாமலும், சோதிடர்களின் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட மூடத்தனமான எதிர்வு கூறல்களாலும், அவர் தோல்வியைத் தழுவவேண்டி வந்துவிட்டது. இந்த நிலையைத்தான் "ஆனைக்கும் அடி சறுக்கும்" என்ற இன்னொரு முதுமொழி நினைவுக்குக் கொண்டு வருகிறது.

மகிந்த ராஜபக்ச ஜனாதிபதித் தேர்தலில் தோற்றாலும், தனது அவசரத்தனமான நடவடிக்கை மூலம் மறுபக்கத்தில் நாட்டு மக்களுக்கு சில மனிதர்களின் உண்மையான சுயரூபத்தை அம்பலப்படுத்தியும் இருக்கிறார். அந்தவகையில் தான் தோற்றும் நாட்டுக்கு நல்லதைச் செய்திருக்கிறார். அவை என்னவென்று ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

❍ முதல்நாள் இரவு மகிந்தவுடன் ஒன்றாக இருந்து அலரி மாளிகையில் முட்டை அப்பம் சாப்பிட்டவர் அடுத்த நாள் எதிர்க்கட்சிகளின் பொது ஜனாதிபதி வேட்பாளராக் அறிவிக்கப்படுகிறார். மகிந்த தேர்தலை அறிவிக்காது இருந்திருப்பின் மைத்திரிபால சிறிசேன 10 வருடங்களாக இருந்தது போல மகிந்த அரசில் ஒரு முக்கிய அமைச்சராகவும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளராகவும் வலம் வந்து கொண்டிருந்திருப்பார்.

❍ அதுபோல மகிந்த தேர்தலை அறிவிக்காது விட்டிருந்தால் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிர்பாராது கிடைத்த இந்த பிரதமர் பதவி கிடைத்திருக்காது. அவரது நேரம் அவரது ஐ.தே.கவுக்குள் நடக்கும் குடுமிபிடிச் சண்டையில் கழிந்திருக்கும்.

❍ அதேபோல '9 வருடங்களாக நாட்டையும் கட்சியையும் காப்பாற்றுவதற்காகக் காத்திருந்த' முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா இன்னமும் காத்துக்கொண்டுதான் இருந்திருப்பார்.

❍ ரவூப் ஹக்கீம், ரிசாத் பதியுதீன் போன்றவர்களுக்குக் கூட மகிந்த தேர்தலை அறிவிக்காது விட்டிருந்தால், தமது சமூகத்தின் நலன்கள் பற்றித் திடீரெனத் தோன்றிய உணர்வு தோன்றாமல் மந்திரி பதவிகளில் ஒட்டியிருந்து கொண்டு சுக-போகம் அனுபவித்திருப்பார்கள்.

❍ 15 வருடங்களுக்கும் மேலாக புலிகளின் கொலைத் தாக்குதலுக்கு அஞ்சி கொழும்புக்கு ஓடி வந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கங்களின் பாதுகாப்பிலும், நிதி உதவியிலும் வாழ்ந்து வந்த முன்னாள் தமிழ் ஆயுதக் குழுக்கள், வீ.ஆனந்தசங்கரி போன்ற 'மிதவாத' அரசியல்வாதிகள் எல்லோருக்கும் திடீரெனத் தோன்றிய ஜனநாயக ஞானோதயம் மகிந்த தேர்தலை அறிவிக்காது விட்டிருந்தால் ஒருபோதும் தோன்றியே இருக்காது.

❍ வலதுசாரியாக இருந்தவர்களும் 'இடதுசாரி'யாக இருந்தவர்களும், புலி ஆதரவாளர்களாக இருந்தவர்களும் எதிர்ப்பாளர்களாக இருந்தவர்களும் என, எதிரும் புதிருமாக போலித்தனமாகக் காட்சி அளித்தவர்களை மகிந்தவின் தேர்தல் அறிவிப்பு ஒரே இரவில் கைகோர்க்க வைத்த பெருமையும் அவரையே சாரும்.

❍ அதேபோல தினசரி நூற்றுக்கணக்கில் மகிந்த அரசின் அரசியல்வாதிகள், அதிகாரிகளுக்கெதிராக ஊழல் குற்றச்சாட்டுகளை முறைப்பாடு செய்பவர்கள் தொடர்ந்தும் முகவரியில்லாமல் வாழ்ந்திருப்பார்கள்.

❍ தமிழ் தேசியக் கூட்டமைப்பு சம்பந்தன் கூட மகிந்த அரசு தொடர்ந்திருந்தால் இலங்கையின் இந்த வருட சுதந்திர தினத்தன்று பாடியது போன்று "ஆனந்த சுதந்திரம் வந்ததென்று.." பள்ளுப்பாட்டு பாடாமல், அந்தத் தினத்தை வழமையான பிரகாரம் தமிழர் துக்க நாளாக அனுஷ்டித்திருப்பார்.

❍ அமெரிக்கா கூட இந்த வருட மார்ச் மாதம் இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் சமர்ப்பிக்க உத்தேசித்திருந்த இன்னொரு கடுமையான தீர்மானத்தை நிறுத்தி வைப்பது அல்லது அதன் சாரத்தை மென்மைப்படுத்துவது குறித்து ஆலோசித்திருக்காது.

இப்படி இப்படி பலருடைய உள்ளங்களுக்குள் பதுங்கியிருந்த மிருகங்களை ஜனாதிபதித் தேர்தலை அறிவித்ததன் மூலம் மகிந்த 'வெட்டை'க்கு கலைத்து விட்டிருக்கிறார். அதன் மூலம் தான் தோற்றாலும் இலங்கை மக்களுக்கு இந்த ஆசாடபூதிகளை இனம் காட்டி, நாட்டு மக்களுக்குப் பெரும் சேவையொன்றைச் செய்திருக்கிறார். இந்தத் தேர்தல் அறிவிப்பு வரவில்லையாயின் இந்த 'மனிதர்கள்' எல்லாம் வழமைபோல பல்வேறு முகமூடிகளுடன் சமூகத்தில் வழமை போல உலவி வந்திருப்பார்கள்.

அசுவத்தாமன்



## சூரிச் செஸ் தொடர் ஆனந்த் சமநிலை

6 வீரர்களுக்கு இடையிலான சூரிச் செஸ் போட்டித் தொடர் சுவிட்சர்லாந்தில் நடந்து வருகிறது. இதன் 5 ஆவது மற்றும் கடைசி சுற்றில் இந்தியாவின் விசுவநாதன் ஆனந்த் நேற்று முன்தினம் ரஷ்யாவின் செர்ஜி கார்ஜகினை 42ஆவது நகர்த்தலில சமன் செய்தார்.

கிளாசிக் சுற்று முடிவில் ஆனந்த் 2 வெற்றி, 3 சமநிலை என்று 7 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்தார்.

அடுத்து அதிவிரைவு செஸ் முறைப்படி (ரேபிட்) ஒரே நாளில் அனைத்து வீரர்களும் தங்களுக்குள் தலா ஒரு முறை மோதுவார்கள். இதன் அடிப்படையில் சம்பியன் யார் என்பது தீர்மானிக்கப்படும்

## உலகக் கிண்ணம் 2015

### நாளைய ஆட்டம்

ஆப்கானிஸ்தான்
எதிர்
இலங்கை
இடம்- டியூனிடின்
நேரம்- அதிகாலை 03.30

இந்தியா
எதிர்
தென்னாபிரிக்கா
இடம்- மெல்பேர்ன்
நேரம்- காலை 09.00

## சௌத்தியின் வேகத்தில் சுருண்டது இங்கிலாந்து



(வெலிங்ரன்)

ரிம் சௌத்தியின் வேகத்தில் 8 விக்கெட்டுக்களால் இங்கிலாந்தை வீழ்த்தியது நியூஸிலாந்து

உலக கிண்ண கிரிக்கெட் போட்டியின் 9ஆவது "லீக்" ஆட்டம் வெலிங்டனில் நேற்று நியூஸிலாந்து மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அந்த அணி சார்பில் களமிறங்கிய எவரும் அரைச்சதம் கூட கடக்காத நிலையில் வரிசையாக வெளியேறினர்.

33.2 ஓவர்களை மாத்திரமே எதிர்கொண்ட இங்கிலாந்து 123 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இங்கிலாந்து அணி சார்பாக ரூட் (Joe Root) அதிகூடிய ஓட்டங்களாக 46 ஓட்டங்களை பெற்றார்.

இதனையடுத்து 124 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலகுவான இலக்குடன் களம் இறங்கிய நியூஸிலாந்து அணி 12.2 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மட்டும் இழந்த நிலையில் 125 ஓட்டங்களைப் பெற்று, 226 பந்துகள் மீதமிருக்க 8 விக்கெட்டுக்களால் வெற்றி வாகை சூடியது.

நியூஸிலாந்து அணி சார்பாக பிரண்டன் மெக்கலம் (Brendon McCullum)25 பந்துகளில் அதிகூடிய ஓட்டங்களாக 77 ஓட்டங்களைப் பெற்றார். இதில் 8 பவுண்டரிகளும் 7 சிக்சர்களும் அடங்கும்.

இதன்படி பிரண்டன் மெக்கலம், உலகக் கிண்ணப் போட்டிகளில் 18 பந்துகளில் அதிவேகமாக அரைச் சதம் அடித்த வீரர் என்ற பெருமையை நேற்று தன்வசப்படுத்தியுள்ளார்.

மேலும் ஒரு நாள் போட்டிகளில் விரைவாக அரைச்சதம் அடித்த 3ஆவது வீரராகவும் இவர் திகழ்கின்றார். முதலிரண்டு இடங்களில் டிவிலியர்ஸ் (16), சனத் ஜெயசூரிய (17) உள்ளனர்.

இதேவேளை இந்தப் போட்டியில் அசத்தலாக பந்து வீசிய நியூஸிலாந்து வீரர் டிம் சௌத்தி 7 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

9 ஓவர்கள் பந்து வீசிய அவர் 33 ஓட்டங்களை மட்டுமே கொடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இது, உலகக் கிண்ண வரலாற்றில் 3 ஆவது சிறந்த பந்துவீச்சாக அமைந்தது.

முதலிரண்டு இடங்களில் அவுஸ்ரேலியாவின் மெக்ராத் (7 ஓவர்கள், 15 ஓட்டங்கள்), ஆன்டி பிக்செல் (10 ஓவர்கள்,20 ஓட்டங்கள்) ஆகியோர் உள்ளனர். இருவரும் 7 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதேவேளை நேற்றைய போட்டியில் சிறப்பாக பந்துவீசிய நியூஸிலாந்தை வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்ற சௌத்தி போட்டியின் சிறப்பாட்டக்காரராகவும் தெரிவானார்.

## சிறந்த கிரிக்கட் வீரர்கள் மலிங்க, ரோஹித் தெரிவு





கடந்தாண்டின் சிறந்த கிரிக்கெட் வீரர்களாக இலங்கை அணியின் லசித் மலிங்க மற்றும் இந்திய அணியின் ரோஹித் சர்மா தெரிவு செய் யப்பட்டுள்ளானர்.

ESPN Cricinfo இணையத்தளம் சிறந்த கிரிக்கெட் வீரர்களைத் தெரிவு செய்வதற்காக வருடாந்தம் நடாத்தும் வாக்கெடுப்பில் இலங்கை, இந்திய வீரர்கள் முன்னிலை பெற்றுள்ளனர்.

ஆசிய வெற்றிக்கிண்ண சுற்றுத்தொடரின் இறுதிப்போட்டியில் 56 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுகளைக் கைப்பற்றிய லசித் மலிங்க ஒருநாள் சர்வதேச போட்டிகளின் சிறந்த பந்துவீச்சாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் சிறந்த துடுப்பாட்ட வீரராக பிரண்டன் மெக்கலமும், சிறந்த பந்துவீச்சாளராக மிச்செல் ஜோன்சனும் தெரிவாகியுள்ளனர். ஒருநாள் சர்வதேச போட்டிகளின் சிறந்த துடுப்பாட்ட வீராக ரோஹித் சர்மா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் தலைவர்களான ரிக்கி பொண்டிங், இயன் சப்பல் மற்றும் ESPN Cricinfo இணையத்தளத்தின் செய்தியாளர்களும் அடங்கிய யூரர்கள் குழு வீரர்களை தெரிவு செய்தது.

## பாக்.களத்தடுப்பு பயிற்சியாளர் பதவி விலகலை மீளப்பெற்றார்



பாகிஸ்தான் களத்தடுப்பு பயிற்சியாளர் லுடென் தனது பதவி விலகல் முடிவைத் திரும்ப பெற்றார்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் மூத்த வீரர்கள் அப்ரிடி, உமர் அக்மல் உள்ளிட்டோர் தனக்கு ஒத்துழைப்பு அளிக்க மறுப்பதுடன், அசிங்கமாக திட்டுவதாக அந்த அணியின் களத்தடுப்பு பயிற்சியாளர் கிராண்ட் லுடென் புகார் கூறினார்.

பின்னர் ராஜினாமா கடிதத்தை பாகிஸ்தான் கிரிக் கெட் சபைக்கு அனுப்பினார்.

இந்த நிலையில் கிரான்ட் லுடெனை பாகிஸ்தான் அணி நிர்வாகத்தினரும், கிரிக்கெட் சபை நிர்வாகிகளும் சமாதானப்படுத்தினர்.

மீண்டும் இது போன்று நடக்காது என்றும் உறுதி அளித்தனர். இதனால் அவர் தனது முடிவை வாபஸ் பெற்றுள்ளார்.

ஏற்கனவே செய்யப்பட்ட ஒப்பந்தத்தின்படி 2016ஆம் ஆண்டு மே மாதம் வரை அப்பணியில் அவர் தொடருவார் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

## சிறிலங்கா கிரிக்கெட் புதிய நிர்வாக சபை தெரிவு

சிறிலங்கா கிரிக்கட்டின் புதிய நிர்வாகசபையை தெரிவு செய்வதற்கான தேர்தல் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி இந்த தேர்தல் நடைபெறுமென சிறிலங்கா கிரிக்கட் அறிவித்துள்ளது.

அதேதினத்தில் நடைபெறவுள்ள வருடாந்த பொதுக் கூடத்தின் போது இந்த தேர்தலும் நடைபெறவுள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சரின் கோரிக்கையின் அடிப்படையில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, சிறிலங்கா கிரிக்கட்டின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹோலிமட்டும் ஆபத்தானவர் அல்ல தென்னாபிரிக்க பயிற்சியாளர் தெரிவிப்பு

(மெல்பேர்ன்)

உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் நாளை ஞாயிற்றுக் கிழமை நடைபெறும் லீக் ஆட்டத்தில் இந்தியா மற்றும் தென் ஆபிரிக்க அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன. இந்த நிலையில் தென் ஆபிரிக்க அணியின் பயிற்சியாளர் ரஸல் டொமிங்கோ அளித்த பேட்டியில் கூறியதாவது:-

கடந்த சில வருடங்களாக இந்திய அணியின் தலைசிறந்த வீரராக விராட்கோலி விளங்கி வருகிறார் என்பதை நாங்கள் அறிவோம். அவருடைய துடுப்பாட்ட சாதனைகள் வியக்கத்தக்கதாக உள்ளன. இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசையில் அவர் தான் ராஜா என்பதில் சந்தேகமில்லை. இருப்பினும் சுரேஷ் ரெய்னா, ரோகித் சர்மா, டோனி, ரஹானே போன்ற சிறந்த வீரர்களும் அந்த அணியில் உள்ளனர். அவர்களைக் கட்டுப்படுத்துவது குறித்து விவாதித்தோம்.

இந்திய அணியில் வலுவான துடுப்பாட்ட வரிசை இருக்கிறது. துடுப்பாட்ட வரிசையில் ஒரு தனிப்பட்ட நபரை மட்டும் குறிவைத்து செயற்படுவது எங்களுடைய ஆட்ட பாணி கிடையாது. ஒட்டு மொத்த இந்திய அணியையும் நாங்கள் மிகவும் மதிக்கிறோம். ஏனெனில் அவர்களது துடுப்பாட்ட வரிசையில் நிறைய வெற்றியாளர்கள் உள்ளனர்.

எங்களது அணியை தயார்படுத்துவதில் முழு கவனத்தையும் செலுத்தி வருகிறோம். உலக கோப்பை போட்டியில் இதுவரை நாங்கள் இந்திய அணிக்கு எதிரான 3 ஆட்டங்களிலும் வெற்றி பெற்று இருக்கிறோம். அது எங்களுக்கு மனரீதியாக பலமா? இல்லையா? என்பது எனக்குத் தெரியாது.


ஆனால் நாங்கள் இந்திய அணியை சாதாரணமாக எடுத்துக்கொள்ள மாட்டோம். இந்திய அணி நடப்பு உலக சாம்பியன் மட்டுமின்றி, ஒருநாள் போட்டியில சிறப்பான அணியாகவும் விளங்குகிறது. கடந்த காலங்களில் உலக கோப்பையில் நாங்கள் இந்திய அணிக்கு எதிராக செய்த சாதனைகளை ஞாயிற்றுக கிழமை லீக் ஆட்டத்தின் போது லேசாக தான் கணக்கில் கொள்ள முடியும்.


போட்டி முடிவு எப்பொழுதும் முக்கியமானதாகும். மிகப்பெரிய ரசிகர்கள் கூட்டத்துக்கு முன்னிலையில் இந்தியா போன்ற தரமான அணியை வென்றால் அது நல்ல உத்வேகத்தை கொடுக்கும். தொடக்க லீக் ஆட்டங்களில் இந்திய அணியை வீழ்த்தினால் நிறைய நம்பிக்கை கிடைக்கும். இந்திய அணிக்கு எதிரான ஆட்டத்தில் மிகுந்த எதிர்பார்ப்பு இருப்பதை நாங்கள் அறிவோம்.


எங்கள் அணியில் சிலருக்கு இதற்கு முன்பு இதுபோன்ற ஆட்ட சூழ்நிலையை பார்த்த அனுபவம் கிடையாது. இந்தியா மற்றும் பாகிஸ்தான் மோதிய ஆட்டத்தை நாங்கள் அதிகம் பார்க்கவில்லை. எங்களது ஆட்டம் குறித்தே நாங்கள் முழுக்கவனத்தையும் செலுத்தி வருகிறோம்.

மெல்பேர்ன் பிட்ச்சில் ஈரப்பதம் தென்படுகிறது. உலகின் தலைசிறந்த வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவரான பிலாண்டரின் பந்து வீச்சுக்கு பிட்ச் அனுகூலமாக இருக்கும். இந்த ஆட்டத்தில் அவர் முக்கிய பங்களிப்பார் என்று நம்புகிறேன். இவ்வாறு பயிற்சியாளர் ரஸ்செல் டொமிங்கோ தெரிவித்தார்.

# மகாஜனவை இனிங்ஸால் வென்றது சென்.ஜோண்ஸ்







சென்.ஜோண்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப் பளை மகாஜனக் கல்லூரி மோதிய கிரிக்கெட் போட்டியில், எஸ்.ஜெனிபிளமிங் சதத்தின் உதவியுடன் சென். ஜோண்ஸ் கல்லூரி. இனிங்ஸ் மற்றும் .37 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட் டில், 19 வயதுப்பிரிவு, பிரிவு 3 அணிகளுக்கு இடையிலான மட்டுப்படுத்தப்படாத ஓவர்கள் கொண்ட இரண்டு நாள் கிரிக் கெட் சுற்றுப்போட்டி, மகாஜனக் கல்லூரி மைதானத்தில் கடந்த 13ஆம் 14ஆம் திகதிகளில் நடைபெற்றன.

நாணயச் சுழற்சியில் வென்ற மகாஜன கல்லூரி அணி, முதலில் துடுப்பெடுத்தாடக் களமி றங்கியது.

அவ்வணி 24.5 ஓவர்களில் 80 ஓட்டங்களுக்கு சகல விக்கெட் டுக்களையும இழந்தது.

அணி சார்பில் ஜி.கபிலன் 21 ஓட்டங்களை பெற்றார்.

பந்துவீச்சில் சென். ஜோண்ஸ் அணி சார்பாக, கே.கபில்ராஜ், ஆர்.லோகதீஸ்வரன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், ஆர்.பிரிசங்கர், வி.யதுசன் ஆகி யோர் தலா 2 விக்கெட்டுக்க ளையும் வீழ்த்தினார்கள்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸை ஆரம்பித்த சென். ஜோண்ஸ் கல்லூரிக்கு, எஸ்.ஜெனிபிளமிங் சதமடித்து கைகொடுக்க 74.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 323 ஓட்டங்களைப் பெற்றது.

எஸ்.ஜெனிபிளமிங் 124, எஸ்.கபில்ராஜ் 53, பி.துவாரக சீலன் 42 ஓட்டங்களைப் பெற் றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் மகாஜன அணி சார்பாக, ஏ.ரசிகரன் 4, எஸ். ஜெசிந்தன் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்கள்.

243 ஓட்டங்கள் பின் னிலையில் தமது இரண்டாவது இனிங்ஸை துடுப்பெடுத்தாட களமிறங்கிய மகாஜனக் கல் லூரி அணி, நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி, இனிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க முற்பட்ட போதும் அது கைகொடுக்க வில்லை.

77.5 ஓவர்களில் 206 ஓட்டங்க ளுக்கு சகல விக்கெட்டுக்களை யும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் இறுதி வரை ஆட்டமிழக்காமல் அணிக் காக போராடிய எஸ்.ஜெசிந்தன் 56, எஸ்.நிவாஸ் 27 ஓட்டங் களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்.ஜோண்ஸ் சார்பாக கே.கபில்ராஜ், ஆர்.லோக தீஸ்வரன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி னார்கள்.




# கரவெட்டி மென்பந்தாட்டம் மாலுசந்தி மைக்கல் வெற்றி




கரவெட்டி பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையில் இடம் பெற்ற மென்பந்தாட்ட கிரிக் கெட் போட்டியொன்றில் மாலு சந்தி மைக்கல் இளைஞர் கழகம் 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டிகள் மைக்கல் விளையாட் டுக்கழகத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றன.

மொத்தமாக 23 அணிகள் இந்தச் சுற்றுப்போட்டியில் கலந்துகொண்டன.

அணிக்கு 6 பேர் 5 ஓவர்கள் கொண்ட போட்டியாக நடை பெற்றன.

இறுதிப்போட்டியில் மைக்கல் இளைஞர் கழக அணியை எதிர்த்து கொம்மாந்துறை இளைஞர் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொம்மாந்துறை இளைஞர் கழகஅணி 5 ஓவர்களில் 30 ஓட் டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மைக்கல் இளைஞர் கழகஅணி 3.1 ஓவர்களில் 1 விக்கெட் டுக்களை இழந்து வெற்றியி லக்கை அடைந்தது.

# கபடியில் சம்பியனானது கோயிற்கடவை இளைஞர்

கரவெட்டி பிரதேச இளைஞர் விளையாட்டுக் கழகங்களுக் கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் ஆண்களுக்கான கபடியில் கோயிற்கடவை இளை ஞர் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

ஆண்களுக்கான கபடிப் போட்டியில் 6 அணிகள் பங்கு பற்றியதுடன், போட்டிகள் இமை யாணன் மத்திய மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் மனோ கரா இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கோயிற் கடவை இளைஞர் விளையாட் டுக்கழகம் மோதியது.

இதில் கோயிற்கடவை இளைஞர். கழக அணி 42:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

# கலந்துரையாடல்


(யாழ்ப்பாணம்)

வடமாகாண பாடசாலைக ளுக்கிடையிலான வலைப் பந்தாட்ட நடுவர் சங்கமானது முதன் முதலில் உருவாக்கப்பட வுள்ளது.

இதன் கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணிக்கு யா/கொக் குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெறவுள்ளதால் வலைப்பந்தாட்டத்தில் ஆர்வ முள்ள அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆர்வமுள்ள அனைவ ரையும் கலந்துகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கரப்பந்தாட்டம் இறுதி ஆட்டம் இன்று



(யாழ்ப்பாணம்)

சங்கானை கோட்டமட்ட பெருவிளையாட்டுப் போட்டிக ளில் 19 வயதுப் பிரிவினருக் கான கரப்பந்தாட்டப் போட்டி யின் இறுதியாட்டம் இன்று காலை 8.30 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி மைதா னத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய இறுதிப் போட்டி யில் வட்டு மத்திய கல்லூரி அணியும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் மோதவுள்ளன.

# நெடியகாடு கால்பந்தாட்டம் சென்.மேரிஸ்,அன்ரனீஸ் வெற்றி



நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியில் நடாத்திவரும் கால்பந் தாட்டச் சுற்றுப்போட்டியில் நாவாந்துறை சென்.மேரிஷ் மற்றும் பாஷையூர் சென்.அன்ரனீஸ் அணிகள் வெற்றிபெற்றன.

நெடியகாடு விளையாட்டுக்கழக மைதானத்தில் இந்த கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நடை பெறுகிறது.

கடந்த 17 ஆம் திகதி நடை பெற்ற போட்டியில் நாவாந்துறை சென்.மேரிஷ் அணியை எதிர்த்து கரவைச்சுடர் விளையாட்டுக்கழகம் மோதியது. இதில் சென்.மேரிஷ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

அருள்தாஸ் நிதர்சன், அன்ரனி அன்ரன் சாள்ஸ் ஆகியோர் தலா ஒருகோல்களை சென்.மேரிஷ் அணிக்காக பெற்றுக்கொடுத்தனர்.

கரவைச்சுடர் அணி சார்பாக என்.விக்னேஸ்வரன் கோலை, பெற்றுக்கொடுத்தார்.

இரண்டாவது போட்டியில் பாஷையூர் சென்.அன்ரனீஸ் அணியை எதிர்த்து கொற்றா வத்தை அன்பாலயம் அணி மோதியது.

அபாரமாக ஆடிய சென்.அன்ரனீஸ் அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. யூ.கலிஸ்டன் 5 கோல்களையும் என்.மதுசன், எம்.பெனான்சியஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோல்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

# வருடாந்த பொதுக்கூட்டம்

வல்வை விளையாட்டுக்கழ கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய அங்கத்தவர் தெரிவும் எதிர்வரும் 5 ஆம் திகதி மாலை 04.30 மணிக்கு வல்வை றெயின்போ விளை யாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்பொதுக்கூட்டத்திற்கு அனைவரையும் வருகைதரு மாறு வல்வை விளையாட்டுக் கழகத்தினர் கேட்டுக்கொள்கின் றார்கள்.

# மேற்கிந்திய தீவுகளின் தெரிவு தேர்வாளர்களின் மோசமான முடிவு



உலகக்கிண்ண மேற்கிந்திய தீவுகள் அணியில் முன்னணி வீரர்களை சேர்க்காதது தெரி வாளர்களின் மோசமான முடிவு என்று முன்னாள் அணித்தலைவர பிரையன் லாரா சாடியுள்ளார்.

சமீபத்தில் சம்பள பிரச்சி னையை காரணம் காட்டி இந்தி யாவுக்கு எதிராக நடந்த தொடரை பாதியிலேயே மேற்கிந்திய தீவுகள் அணி கைவிட்டது. இது இரு நாட்டு கிரிக்கெட் சபைக்கு இடையில் பிரச்சினையை உண் டாக்கியது.

இந்தப் பிரச்சினைக்கு முன்னணி வீரர்கள் தான் கார ணம் என்று மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் சபை போலார் வெய்ன் பிராவோவை உலகக் கிண்ண அணியில் தெரிவு செய் யவில்லை.

இந்நிலையில் நடைபெற்று வரும் உலகக்கிண்ணத் தொட ரில் கத்துக்குட்டி அணிகள் கூட மேற்கிந்திய அணியை கதற விடுகிறது.

இது தொடர்பாக மேற்கிந்திய தீவுகள் அணியின் முன்னாள் அணித்தலைவர் பிரையன் லாரா கூறுகையில், கௌரவம் மிக்க உலகக் கிண்ணப் போட்டிக்கு இத்தகைய அணி தெரிவு செய் யப்பட்டிருப்பதை பார்க்கும் போது, எங்களுக்கு நாங்களே உலை வைத்தது போன்று இருக்கிறது.

சகலதுறை வீரர் போலார்ட் டும், வெய்ன் பிராவோவும் இந்த உலகக்கிண்ணத்தில் விளையாடி இருக்க வேண்டும். அவர்களை ஏன் தெரிவு செய்யவில்லை? என் பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை என்று கூறியுள்ளார்.

# ஆரம்ப துடுப்பாட்ட வரிசை பொருத்தம் என்கிறார் லஹிரு



இலங்கை அணியில் ஆரம்ப துடுப்பாட்ட வரிசையில் இருப் பது தனக்கு பொருத்தமாக உள்ள தாக அந்த அணியின் வீரர் லஹிரு திரிமன்னே தெரிவித்துள் ளார்.

2010ஆம் ஆண்டு ஆரம்ப துடுப் பாட்ட வீரராக அறிமுகமான திரிமன்னே துடுப்பாட்ட வரிசை யில் ஒன்று தொடக்கம் எட்டு வரை சகல இடங்களிலும் விளை யாடியுள்ளார்.

உலகக்கிண்ணப் போட்டிகளில் அவருக்கு மீண்டும் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கும் வாய்ப்பு தற்போது கிடைத்தி ருக்கிறது.

இந்நிலையில் தமது துடுப் பாட்டப் பாணியை அவதானிக்கை யில், துடுப்பாட்ட வரிசையில் ஆரம்ப இடத்தில் இருப்பது இலங்கை அணிக்கு பயனுள்ள தாக இருக்கும் என லஹிரு திரி மன்னே நம்பிக்கை வெளியிட் டுள்ளார்.

# என்னுடைய கார்ட்டூன்கள் அரசியல்வாதிகளுக்காக அல்ல!

**சி**றுவயது முதலே ஓவியத்தில் நாட்டம் கொண்டிருந்த ஆர்.கே.லட்சுமண் (1921 - 2015) முறைப்படி ஓவியம் கற்க மும்பை





யில் உள்ள பிரபல ஓவியக் கல்லூரிக்கு விண்ணப்பம் செய்த போது அவ் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. பின்னர் சுயமாக கார்ட்டூன்களை வரையத் தொடங்கி, Free Press Journal பத்திரிகையில் கார்ட்டூனிஸ்டாக சேர்ந்தார். இவரது வருகையால் அங்கு ஏற்கெனவே கார்ட்டூனிஸ்டாக இருந்தவர் பால்தாக்ரே (பின்னாளில் சிவசேனா தலைவரானார்).

பின்னர் 1947ஆம் ஆண்டில் Times of India பத்திரிகையில் கார்ட்டூனிஸ்டாக சேர்ந்து 63 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றியது பத்திரிகைத் துறையில் எந்த கார்ட்டூனிஸ்டும் நிகழ்த்தாத சாதனையாகும்.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் தன்னுடைய சகோதரர் ஆர்.கே. நாராயணின் படைப்புகளின் கதாபாத் திரங்களுக்கு தன்னுடைய ஓவியங்கள் மூலம் உயிரூட்டி வந்த லட்சுமணுக்கு அரசியல் பிடிக்கும்; அவரது சகோதரர் நாராயணுக்கு அரசியல் பிடிக்காது. இருவரும் வெவ்வேறு துருவங்களாக இருந்தனர்.

"இந்த அரசியல்வாதிகளைப் பற்றி நான் கவலைப்படுவதே இல்லை. அவர்களது கோபம் என்னை எந்த வகையிலும் பாதிக்காது. நான் வரையும் ஓவியங்கள் மக்களுக்காகத் தான்; அரசியல்வாதிகளுக்காக அல்ல" என்று தெரிவித்த லட்சுமண், ஜனவரி 26 ஆம் திகதியன்று தன்னுடைய 94 வயதில் காலமானார். அவர் எழுதிய The Tunnel of Time என்ற புத்தகத்திலிருந்து சில பகுதிகள்:

✘ வாசகர்களுக்கு நகைச்சுவை கலந்த ஒரு பாத்திரத்தை அறிமுகப் படுத்தி அவர் மூலம் நாட்டு நடப்புகளை தெளிவுபடுத்த உத்தேசித்தேன்.

அன்றாட அரசியல் மற்றும் பொது நிகழ்ச்சிகளைப் பார்த்து நாட்டு நடப்புகளை விமர்சிப்பது போல் அமைந்த "பொதுஜனம்" பாத்திரம் வாசகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. வாசகர்களும் தங்கள் பங்குக்கு அரசியல்வாதிகளின் அடாவடித்தனம், இலஞ்சம், தபால் தாமதம், டெலிபோன் குளறுபடிகள், மின்சாரக்கட்டண உயர்வு, சுற்றிலும் நடக்கும் விதிமீறல்களைக் குறிப்பிட்டு கார்ட்டூன்களாக யோசனை கூறத் தொடங்கினர்.

✘ புதுடில்லி உள்துறை அமைச்சகத்திலிருந்து வருவதாக கூறி தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட நபரொருவர் என்னை சந்தித்த போது, எனக்கு பிரதமர் "பத்மபூஷண்" விருது வழங்க பரிந்துரை செய்திருப்பதாக கூறினார். இத்தகவல் எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. ஏனெனில் பிரதமர் இந்திரா காந்தியை நான் கார்ட்டூன்களில் விமர்சித்து வந்ததோடு அவரது செயற்பாடுகளையும் கேலி செய்து வந்தேன். இதற்காகவே இந்த விருதுக்கு நான் தகுதியானவன் என்று நினைத்திருப்பாரோ என்று கருதினேன்.

இருந்தாலும் இந்த விருதை ஏற்பதற்கு சற்று அவகாசம் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டேன். கடைசியில் அந்த விருதை நான் ஏற்க ஒப்புக் கொண்டேன். அதிகாரபூர்வமான அறிவிப்பு வந்தவுடன் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் எனக்கு ஏராளமான வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்தன.

இதைத் தொடர்ந்து உள்துறை அமைச்சகம் எனக்கொரு கடிதம் அனுப்பியிருந்தது. விருது வழங்கும் தினத்தன்று எப்படி விழாவில் பங்கேற்க வேண்டும். எப்படி விருது பெற வேண்டும் என்று முன்னதாகவே ஒத்திகை பார்க்கும் நிகழ்ச்சிக்கு வரும்படி அதில் குறிப்பிட்டிருந்தார்கள். விழாவுக்கு மனைவியையும் அழைத்து வருவதாக இருந்தால் வந்து போகும், தங்கும் செலவை அரசு ஏற்கும். அப்படி மனைவியை அழைத்து வரும்போது அதிக ஆடம்பரமின்றி புடவை அணிந்து வரவேண்டுமென்றும், புடவையின் போர்டர் அகலம் இரண்டு அங்குலத்திற்குமேல் இருக்கக் கூடாதென்றும் குறிப்பிட்டிருந்தார்கள். எதிர்பாராத விதமாக ஒத்திகைக்குப் போக முடியவில்லை; விழாவிலும் பங்கேற்கவில்லை. அன்றைய தினத்தில் ஏற்கெனவே நான் ஜேர்மனியில் ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்க ஒப்புக் கொண்டிருந்ததால் புதுடில்லி போக முடியவில்லை.


பத்து மாதங்கள் கழித்து "பத்மபூஷண்" விருதுக்கான ஒரு பெரிய பதக்கத்தையும், ஒரு சிறிய பதக்கத்தையும் தபால் மூலம் எனக்கு அனுப்பியிருந்தார்கள். கூடவே உள்துறை அமைச்சக செயலாளர் கடிதமொன்றையும் அனுப்பியிருந்தார். அதில் பெரிய பதக்கத்தை உத்தியோகபூர்வமான விழாக்களிலும், சிறிய பதக்கத்தை சாதாரண நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளும்போது அணிந்து கொள்ளலாம். பார்ப்பவர் கண்களுக்கு பளிச்சென்று தெரியும்படி அணிந்து கொள்ள வேண்டும்மென்றும் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். இந்த நிபந்தனைகளுக்கு என்ன அர்த்தம் என்பது இன்றுவரை எனக்குப் புரியவில்லை.

✘ புகழ்பெற்ற கவிஞர் டி.எஸ். எலியட்டை சந்தித்து அவரது உருவத்தை ஓவியமாக வரையச் சென்றிருந்தேன். அவரது உருவத்தை முதலில் பென்சிலில் வரையத் தொடங்கினேன். பெரும்பாலும் அவர் மௌனமாக உட்கார்ந்திருப்பதைப் பார்த்து பேச்சு கொடுக்க நினைத்தேன். லண்டனில் நான் சந்தித்த ஒரு கவிஞரைப் பற்றி அவரிடம் கூறினேன். அந்தக் கவிஞர் தனக்கு எலியட்டைத் தெரியும் என்றும், தற்போது அச்சாகி வரும் அவரது கவிதைத் தொகுப்புக்கு எல்லியட்தான் முகவுரை எழுதிக் கொடுத்திருப்பதாகவும் அவர் கூறியதை இவரிடம் தெரிவித்தேன். "அப்படியொரு கவிஞர் பெயரை நான் கேள்விப்பட்டதே இல்லை. இதுவரை நான் யாருக்கும் முகவுரை எழுதித் தரவும் இல்லை" என்று அவர் சொல்லிவிட்டு போஸ் கொடுக்க நிமிர்ந்து உட்கார்ந்தார். அதன் பிறகு நான் ஏதும் பேசவில்லை. ஓவியத்தை முடித்துவிட்டு அவரிடம் கையெழுத்து போட்டுத் தரும்படி கேட்டேன். அவர் அசையாமல் அப்படியே உறங்கிக் கொண்டிருந்தார். சற்று உரத்த குரலில் அவரை எழுப்பினேன். உறக்கத்திலிருந்து விழித்த அவர் என்னிடம் மன்னிப்புக் கேட்ட பின்பு, ஓவியத்தைப் பார்த்து பாராட்டியதோடு கையெழுத்திட்டுக் கொடுத்தார்.

✘ மொரார்ஜி தேசாய், மகாராஷ்டிர முதல்வராக பதவி ஏற்ற பின்னர் மாநிலத்தில் மதுவிலக்குச் சட்டத்தை அமுல்படுத்தினார். குடிப்பது உடல் நலத்திற்கு தீங்கானது, பாவம் என்ற கருத்தில் இந்த சட்டத்தைக் கொண்டு வந்தார். கூடவே குறுக்கெழுத்துப் போட்டி, குதிரைப் பந்தயங்களுக்கும் தடைவிதித்தார். குடிப்பது குறித்து அவர் கூறுகையில், தனக்கு தண்ணீர் தாகம் எடுத்தால் கூட சாதாரண தண்ணீரை குடிப்பதில்லை. குடிக்க வேண்டும் என்று தோன்றினால் தன்னுடைய சிறுநீரையே குடிக்க தயங்கமாட்டேன் என்றும் கூறியிருந்தார். இது குறித்து நான் வரைந்த கார்ட்டூன் அவருக்கு கோபத்தை ஏற்படுத்தியது. உடனடியாக அமைச்சரவையைக் கூட்டி, தங்கள் கொள்கையை எதிர்த்து அரசையும், அமைச்சர்களையும், அரசியல்வாதிகளையும் கேலிசெய்து கார்ட்டூன்கள் வெளியிடுவதைத் தடைசெய்ய வேண்டுமென்று தீர்மானமொன்றை நிறைவேற்றினார். இந்திய அரசியல் சட்டப்படி பேச்சுரிமை, எழுத்துரிமை வழங்கப்பட்டிருந்தாலும் அதை தடை செய்யவும் முடியுமென்று குறிப்பிட்டிருந்தார்.

✘ பெரும்பாலும் நான் அரசியல்வாதிகளை நேரில் சந்திப்பதைத் தவிர்த்து வந்தேன். என்னுடைய தொழில் முறையில் ஓர் அரசியல்வாதி என்னுடைய கார்ட்டூனை பாராட்டினால் அதன் பின்னால் ஓர் அர்த்தம் இருப்பதாகவே கருதினேன். எதிர்க்கட்சியில் இருப்பவரைப் பற்றி கார்ட்டூனில் குறிப்பிட்டிருந்தால் என்னை ஒரு ஜீனியஸாகப் பாராட்டுவார்கள். இதுபோன்ற சமயங்களில் அரசியல்வாதிகள் என்னைச் சந்தித்து பாராட்டி கைகுலுக்கினாலும் மறைமுகமாக இதுபோன்ற கார்ட்டூன்களை நிறுத்திக் கொள்ளுங்கள் என்று எச்சரிப்பதாகவே நான் கருதுவதுண்டு.

## கீதையும் யோகமும்



**ந**டராஜகுரு பஞ்சாபில் ஒரு கீதைமாநாட்டுக்குச் செல்ல நேர்கிறது. அங்கே ஏற்கனவே பேசியவர்கள் அர்ஜுனன் அறிவிழந்து தடுமாறும்போது கிருஷ்ணன் மெய்ஞானத்தைச் சொன்னார் என்று பேசினார்கள். தான் பேச எழுந்ததுமே நடராஜகுரு கேட்டார் "என் சுயநலத்துக்காக மூத்த பெரியவர்களையும் சகோதரர்களையும் கொல்ல மாட்டேன் என ஒருவன் சொன்னால் அது அறிவின்மையா என்ன?" அங்கே உள்ளவர்களால் பதில் சொல்ல முடியவில்லை.

குருவே விளக்கினார். கீதையின் தொடக்கத்தில் அர்ஜுனன் சொல்லும் அந்த துயரம் மிக்க சொற்கள் அறியாமையைக் காட்டுவன அல்ல. அது ஒரு மாபெரும் விவேகம். சாதாரண மனிதனுக்கு அது வராது. என் நன்மைக்காக நான் பிறருக்கு தீங்கிழைக்கப் போவதில்லை என்று ஒருவன் சொல்வதென்பது ஒரு மன உச்சம்தான். ஓர் உண்மைஞானம்தான் அது.

அர்ஜுனன் அந்நிலைக்கு வந்து நின்ற காரணத்தால்தான் கீதை அவனுக்குச் சொல்லப்பட்டது. எந்தக் குருவும் சீடனின் அறியாமையைக் கண்டு அவனுக்கு கற்பிக்க ஆரம்பிக்கமாட்டார். அவனுடைய அறிவைக் கண்டபின் மேலும் அறிவை அளிப்பதற்காகவே கற்பிக்க ஆரம்பிப்பார். அர்ஜுனனின் அந்த மனசஞ்சலம் ஒரு பெரிய விவேகம். ஆகவேதான் கிருஷ்ணன் அவனுக்கு கீதையை உள்வாங்கும் பக்குவமிருப்பதாகச் சொன்னார்.

கிருஷ்ணன் "நீ ஞானியரின் சொற்களைச் சொல்கிறாய்" என்று அர்ஜுனனிடம் சொல்வது கிண்டலாகத்தான் என்று பலரால் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அது தவறு. அது ஞானியரின் சொல்லேதான். ஆகவேதான் அந்த அத்தியாயமும் அர்ஜுன விஷாத யோகம் என்று சொல்லப்பட்டுள்ளது. அதுவும் ஒரு யோகமே. அது கேள்வி மட்டும் உள்ள அத்தியாயம் அல்ல, அது ஒரு பதில்தான். முதற்கட்ட பதில்.

ஒரு சாதாரண லௌகீக மனிதனைப் பொறுத்தவரை அர்ஜுனன் சொல்லும் அந்த வரிகளே அவனுக்கு போதுமானதாகும். "என் சுயநலமல்ல என் சுற்றமும் நாடும் வாழவேண்டும் என்ற பொதுநலமே எனக்குத் தேவை" என ஒருவன் உணர்ந்தால் அதுவே அவனுக்கு போதும். அதுவே அவனுக்கு விடுதலை அளிக்கும். அது பொய்யல்ல அது ஒரு உண்மை.

- ஜெயமோகன்

# வீட்டுத்தோட்டம் செய்கிறீர்களா?

▌ரோஜாச் செடி நடும்போது கூடவே இரண்டு, மூன்று சிறிய வெங்காயத்தை ஊன்றி வையுங்கள். ரோஜாச் செடியை பூச்சி, புழுக்கள் அண்டாது.

▌உங்கள் வீட்டுத் தோட்டத்தில் மா மரம் காய்க்காமல் இருக்கிறதா? மா மரத்தின் பட்டையை வேரிலிருந்து மேலாக 5 செ.மீ அல்லது 6 செ.மீ உயரத்துக்கு உரித்துவிட்டு தினமும் தண்ணீர் ஊற்றி வரவும். அடுத்த சீசனில் நிறைய பூத்துக் காய்க்கும்.



▌ரோஜா, குரோட்டன் போன்ற செடிகளுக்கு காலையில் வெயில் வரும்முன்னும் மாலையில் வெயில் போன பின்னும் தண்ணீர் ஊற்றுவதோடு இலைகளின் மீதும் பரவலாக படும்படி ஊற்றினால் செடிகளுக்கு நல்ல பாதுகாப்பு கிடைக்கும்.

▌பூந்தொட்டியினுள் ஆற்று மணலும் அதற்கு மேலே செம்மண்ணும் கலந்து செடிகள் நட, ஆற்று மணல் ஈரப்பதத்துடன் இருந்து செடிகளை வாடாமல் பாதுகாக்கும்.

▌ரோஜாச் செடி அழகாக நிறையப் பூக்கள் பூக்க பீட்ரூட்டின் தோலையும், வேக வைத்த உருளைக்கிழங்கின் தோலையும் உரமாகப் போட வேண்டும்.

▌வெயில் காலத்தில் மிக அதிகாலையில் தண்ணீர்விட வேண்டும். மாலையிலும் நன்றாக வெயில் தாழ்ந்த பின்னரே நீர்விட வேண்டும். இதனால் நீண்டநேரம் மண்ணில் ஈரப்பதம் இருக்கும்.

▌செடித் தொட்டிகளில் தண்ணீர் விட்டபின் ஓரிரு பொலித்தீன் விரிப்பால் சற்று இடைவெளிவிட்டு பரத்தி ஒரு கல்லை பாரத்திற்கு வைத்துவிட்டால் லேசில் நீர் ஆவியாகாது.

▌பழம், காய்கறிகள் நறுக்கிய தோலை மிக்ஸியில் ஒரு நிமிஷம் அடித்து செடிக்கு ஊற்றி மண்ணால் மூடவும். செடிகளுக்கு சத்தான இயற்கை உரம் கிடைக்கும்.

▌தேங்காய்ச் சிரட்டையை தும்பு நீக்கி அழகிய வர்ணம் அடித்து மூன்று துளைகள் இட்டு அதில் நைலோன் கயிறைக் கட்டவும். சிறிது மணல் நிரப்பி மணிபிளாண்ட் செடியை நட்டு ஆணியில் மாட்டினால் அழகாக இருக்கும்.

▌வீட்டில் சூரியகாந்திச் செடிகளை விரும்பி வளர்த்தால் வீட்டில் யாருக்கும் சளி எட்டிப் பார்க்காது. துளசிச் செடிகள் வளர்த்தால் நுளம்புகள் படை எடுத்து வராது. வேப்ப மரத்தால் நல்ல ஒட்சிசன் கிடைக்கும். வீட்டின் முகப்பில் வேப்ப மரம் வைப்பது நல்லது.

# சர்வதேச மொபைல் கண்காட்சி!

ஆண்டு தோறும், ஸ்பெயினில் உள்ள பார்சிலோனா நகரில், சர்வதேச அளவிலான மொபைல் கருத்தரங்கு மற்றும் கண்காட்சி நடைபெறும். இந்த ஆண்டும் வரும் மார்ச் 2 முதல் 5 வரை இது நடைபெற உள்ளது. உலகெங்கும் இருந்து மொபைல் போன் தயாரிப்பாளர்கள், சேவை வழங்குபவர்கள் எனப் பலர் இதில் கலந்து கொள்வார்கள்.


மொபைல் தொலை தொடர்பு, தற்போது பன்முகக் கோணங்களில் பரவி வருகிறது. உடலில் அணிந்து தொலை தொடர்பு ஏற்படுத்தும் கருவிகள், கார் மற்றும் பிற வாகனங்களை நம் வீடு மற்றும் அலுவலகத்துடன் தொடர்பு




படுத்தும் சாதனங்கள் என மொபைல் டிஜிட்டல் சாதனங்களின் விரிவாக்கம் பரவலாக ஏற்பட்டு வருகிறது. இந்த கருத்தரங்கில் கலந்து கொள்ளும் மொபைல் சாதனங்களைத் தயாரிப்பவர்கள், அவற்றை இயக்க அப்ளிகேஷன்களை, ஒப்பரேட்டிங் சிஸ்டங்களை உருவாக்குபவர்கள் எனப் பலரும் இணைந்து, வரும் ஆண்டுகளில், இதற்கான தொழில் நுட்பம் எவ்வகையில் வளர இருக்கிறது என்பதனைத் தீர்மானிப்பார்கள்.

மார்ச் 2 அன்று நடைபெற இருக்கும் இந்த மொபைல் உலகக் கருத்தரங்கில், மைக்ரோசொப்ட் புதியதாக சிலவற்றை அறிமுகப்படுத்தவிருப்பதாக அறிவித்துள்ளது. மொபைல் போன்களுக்கான விண்டோஸ் 10 தொகுப்பு குறித்து தகவல்கள், அறிமுகக் காட்சிகள் கிடைக்கலாம் எனத் தெரியவருகிறது. புதிய ஸ்மார்ட் போன்கள் அறிமுகமாகலாம். அந்த வகையில் லூமியா 1330 மற்றும் லூமியா 1335 என்ற இரு மொபைல் போன்கள் அறிமுகமாகலாம். இவை 5 அங்குல திரையுடன் 8.7 எம்.பி. திறன் கொண்ட பியூர்வியூ கேமரா கொண்டு வடிவமைக்கப் பட்டுள்ளன.

# முழு உலோகாயத நிலையும் முற்றும் துறந்த முனி நிலையும்



## வெளிவாயன் வேலாயுதன் சொல்லுவது....

'இது எங்கடை அரசு பாருங்கோ. அதாலை இதுநாள் வரையிலை செய்து வந்த எதிர்ப்பு அரசியலைக் கை விட்டு இணக்க அரசியலுக்கை செல்லப் போறம்' எண்டு சொந்தங் கொண்டாடி இருக்கிறார் வடக்கின்ரை முதலமைச்சர் விக்கினேஸ்வரன்.

மெத்தப் படிச்ச மனிசன் சொல்லுது இணக்க அரசியல்தான் சரி எண்டு. சுடலை ஞானம் எண்டு இதைத்தான் சொல்லுறது. ஆனால் அந்தாளுக்கு கொஞ்சம் பயமும் தொட்டிட்டுது. எங்கை தமிழரசுக் குஞ்சுகளும், புலம்பெயர் கொம்புகளும் கொதிச்சிடுமோ எண்டதுதான் அந்தப் பயம்.

அதுக்காக அவர் இன்னொண்டையும் சொல்லியிருக்கிறார். அதாவது முந்தியிருந்தவை சொன்ன இணக்க அரசியலும் இந்த இணக்க அரசியலும் வேறையாம். எப்பிடியெண்டால் இரு சமமான இரு இனக்குழுக்கள் எண்ட அடிப்படையிலான இணக்க அரசியலாம்.

இந்த மனிசன் நல்லாய்க் கனவு காணும் போலை கிடக்குது. பேசேக்கையும் கனவு காணுற வழக்கம் இருக்குதோ தெரியேல்லை. அந்தக் காலத்திலை ஜீ.ஜீ.பொன்னம்பலம் அம்பதுக்கு அம்பது கேட்டவர். அப்பவே குடுக்கேல்லை. பிறகு புலி பெருமளவு பிரதேசங்களைக் கட்டுப்பாட்டிலை வச்சுக் கொண்டு பேரம் பேசிற வலுவோடை கனக்கக் கேட்டவை. குடுக்கவேயில்லை. இவர் ஒரு ஆறேழு லச்சம் சனம் சார்பாய் நிக்கிறவர். தமிழர் எண்டு பார்த்தால் எட்டில் ஒரு பங்குதான் இருக்கினை. இந்த லச்சணத்திலை சமமாய் நிண்டு இணக்க அரசியல் செய்யப் போறம் எண்டு சொல்லுறார்.

முந்தின டக்ளஸின்ரை இணக்க அரசியலிலை கட்டடங்கள் எழுந்துது. கல்லும் முள்ளுமான றோட்டுகள் தாரும் காப்பெற்றும் எண்டு மிளிர்ந்துது. கன குடும்பங்களுக்கு வீடும் காணியும் கிடைச்சுது. சனம் வாழ்க்கையிலை போகேலாது எண்டு நினைச்ச இடங்களுக்கெல்லாம் ஆமி வழி விட்டுக் குடுக்க போய் குந்திச்சுதுகள். கன குடும்பங்களின்ரை வாழ்க்கைப் பாடுகளுக்கு ஆதாரம் கிடைச்சுது. பல்லாயிரக் கணக்கிலை பெடிபெட்டையளுக்கு வேலை கிடைச்சுது. சனம் கொஞ்சம் மூச்சு விடத் தொடங்கிச்சுதுகள். அந்த இணக்க அரசியல் இல்லையெண்டால் இது எந்த இணக்க அரசியலாம்?

ஒரு வேளை தமிழீழத்தைத் தங்கத் தட்டிலை மைத்திரி வச்சுத் தாற மாதிரி ஒரு இணக்கமோ? அல்லாட்டில் சமஸ்டியை அள்ளிக் குடுக்குற இணக்கமோ? சரி, 13ஆவது திருத்தத்திலை காணியையும், பொலிசையும் தாற இணக்கமாச்சும் உண்டோ?...

என்ன இழவோ எதிர்த்து ஒண்டுமே செய்யேலாது. சனங்களுக்கும் கன நாளைக்கு பூசி மெழுகேலாது எண்டதை இப்பவாவது தெரிஞ்சு இணக்க அரசியல் எண்டு பேசுறது நல்லதுதான் பாருங்கோ மிஸ்டர் முதலமைச்சர் (அமெரிக்கன் ஸ்ரைல்).

ஆனால் உங்கடை செய்கையள் கொஞ்சம் குழப்பத்தைத் தருகுது ஐயா. மறைகழண்டவை செய்யிற வேலையள் மாதிரியும் சிலது இருக்குது. எல்லாரும் தமிழரசு எண்டு முரசு கொட்ட நீங்கள் ஓடிப் போய் ஜனாதிபதியிட்டை சத்தியப் பிரமாணம் செய்தீங்கள். பிறகு இன அழிப்பு பிரேரணை எண்டு கொண்டு வரேக்கை சிவஞானத்தாரோடை சேர்ந்து தட்டிக் கழிச்சீங்கள். இன அழிப்பு எண்டு எழுந்தமானத்திலை சொல்லேலாது எண்டு வியாக்கியானம் செய்தீங்கள். பிறகு ஆளுநரை மாத்து எண்டீங்கள். மகிந்த ஜனாதிபதி மாத்தித் தாறன் எண்டு உறுதியும் அளிச்சார். சில நாளையாலை ஒருக்கால் என்னோடை இந்தியாவுக்கு வாருங்கோ எண்டு மகிந்த கேக்கவும் மாட்டன் எண்டீங்கள்.

பிறகு மகிந்தவை வீட்டுக்கு அனுப்பி மைத்திரியை அரியணை ஏத்த ஆதரவு தாங்கோ எண்டு சனத்திட்டைக் கேட்டீங்கள். அடுத்ததாய் நீங்களே இனஅழிப்பு பிரேரணையை சபையிலை சமர்ப்பிச்சீங்கள். காட்டமாய் உரையாற்றினீங்கள். அந்தச் சூடு ஆறுறதுக்குள்ளை மைத்திரியைச் சந்திச்சு அது உங்களுக்கில்லை. முந்தின கவர்மெண்டுக்கு எண்டு சொல்லி விரல் சூப்பினியள். என்னதான் நடக்குதிங்கே?

அது சரி. முந்தின கவர்மெண்டுகள் எண்டால் அதிலை மகிந்த சகோதரர்களை விட்டுப் பார்த்தால் பொன்சேகா, பதில் பாதுகாப்பு அமைச்சராய் இருந்து இறுதி யுத்தத்தை வழி நடத்தின மைத்திரி, அதுக்கு முதல் ஆண்ட சந்திரிக்கா, பிரதமராயிருந்த ரணில் எல்லாரையும் தென்னவன் பிரமராஜன் சிவபெருமானுக்கு அடிச்ச அடி எல்லாரையும் தாக்கினது போலை தாக்கும் எண்டதை அப்ப விரல் சூப்பேக்கை மறந்து போனீங்களே?

இப்ப உங்கடை பிரேரணையை ஒருத்தரும் கவனிக்கேல்லை. மீண்டும் ஐ.நா.அறிக்கை செப்ரெம்பர் மாதத்துக்குப் பிற்போடப்பட்டிட்டுது. 24ஆந் திகதி பிரேரணையைச் சமர்ப்பிக்க வேணும் எண்டு பெரிய வாத்தியார்மார் பேரணி போகப் போறதும், அதுக்காக அணி திரளச் சொல்லி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்டதும் விழலுக்கு இறைக்கிற வேலையாய்ப் போச்சுது. வாங்கின காசுக்குக் கணக்குக் காட்டத்தானே வேணும். ஒருக்கால் காலாற நடந்து போங்கோ!

இப்பிடிக் கஸ்டப்பட்டு நீங்கள் பிரேரணையைச் சமர்ப்பிச்சிருக்கிறியள். அதைப் பற்றி சம்பந்தன் வாய் திறக்கேல்லை. அது மதிக்கப்பட வேண்டும் எண்டு ஒற்றைச் சொல்லிலை முடிச்சு விட்டார். இப்ப என்னடா வெண்டால் ஐ.நா.அறிக்கை ஒத்தி வைக்கப்பட்டது தொடர்பிலை மனிசனிட்டைக் கேட்டதுக்கு அவர் சொன்ன பதில் தூக்கி வாரிப்போட்டிட்டுது பாருங்கோ. 'ஐ.நா.அறிக்கை பிற்போடப்பட்டது தொடர்பிலை எனக்கு மகிழ்ச்சியோ துக்கமோ இல்லை' எண்டு அந்தாள் சொல்லுது. சபை நடுவே நீட்டோலை வாசியாய் நிண்டான் மரம் எண்ட பாட்டுத்தான் உடனை ஞாபகத்துக்கு வந்துது. எத்தனை காலந்தான் ஏமாற்றுவார் இந்தச் சனங்களை எண்டு பாடிக் கொண்டு போவம்.




முழு உலோகாயத நிலை





முற்றும் துறந்த நிலை


# புதிர்ப்போட்டி இல. 28

◆ வினாக்குறியுள்ள இடங்களில் பொருத்தமான எண்ணை இடுவதன் மூலம் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடைதருக


01)





02)





03)




04)




05)




### விடுகதைகள்

06) தொட்டுப் பார்க்கலாம் எட்டிப் பார்க்க முடியாது அது என்ன?

07) மாமா போட்ட பந்தல் மறுபடி பிரிச்சா கந்தல் அது என்ன?

08) முறையின்றித் தொட்டால், ஒட்டிக் கொண்டு உயிரை எடுப்பான் அவன் யார்?

09) நூல் நூற்கும் நெசவாளிக்கு கட்டிக்கொள்ள துணியில்லை அது என்ன?

10) நடக்கவும் மாட்டேன், நகராமல் இருக்க வும் மாட்டேன் நான் யார்?

11) காலையிலும் மாலையிலும் நெட்டை மதியம் குட்டை நான் யார்?

12) பற்கள் இருக்கும் கடிக்கமாட்டான் அவன் யார்?

13) வெள்ளை மாளிகை உள்ளே செல்ல வாசல் இல்லை அது என்ன?

14) ஐந்து வீட்டிற்க்கு ஒரு முற்றம் அது என்ன?

15) தொப்பொன்று விழுந்தான் தொப்பி கழன்றான் அவன் யார்?

16) சட்டையைக் கழற்றினால் சத்துணவு அது என்ன?

17) பட்டுப்பை நிறைய பவுண் காசு அது என்ன?

18) அடிக்காத பிள்ளை அலறித் துடிக்குது. அது என்ன?

19) தட்டச் சீறும் அது என்ன?

20) உரிச்ச புறா சந்தைக்குப் போகுது அது என்ன?

21) நீளவால் குதிரையின் வால் ஓடஓடக் குறையும் அது என்ன?

22) உருவத்தில் சிறியவன் உழைப்பில் பெரியவன் அவன் யார்?

23) கண்ணால் பார்க்கலாம் கையால் பிடிக்க முடியாது அது என்ன?

24) முதுகிலே சுமை தூக்கி முனகாமல் அசைந்து வரும் அது என்ன?

25) ஓயாது இரையும் இயந்திரம் அல்ல. உருண்டோடி வரும் பந்தும் அல்ல அது என்ன?

## அனுப்பவேண்டிய முகவரி

புதிர்ப்போட்டி இல: ------
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

26) வயதான பலருக்கு புதிதாக ஒரு கை அது என்ன?

27) தலையைச் சீவினால் தாளில் நடப்பான் அவன் யார்?

28) காற்றைக் குடித்து காற்றில் பறப்பான், அவன் யார்?

29) பச்சை நிற அழகிக்கு உதட்டுச் சாயம் பூசாமலே சிவந்தவாய் அவள் யார்?

30) அம்மா படுத்திருக்க மகள் ஓடித்திரிவாள் அது என்ன?

31) கன்று நிற்க கயிறு மேயுது அது என்ன?

32) கசக்கிப் பிழிந்தாலும் கடைசிவரை இனிப் பான். அவன் யார்?

33) பிடுங்கலாம் நடமுடியாது அது என்ன?

34) வாலால் நீர் குடிக்கும்,வாயால் பூச்சொரியும் அது என்ன?

35) நன்றிக்கு வால் கோபத்துக்கு வாய் அது என்ன?

36) உயரத்தில் இருப்பிடம்,தாகம் தீர்ப்பதில், தனி யிடம் அது என்ன?

37) தலையில் கீரீடம் வைத்த தங்கப்பழம் அது என்ன?

38) எட்டுக்கால் ஊன்றி இருகால் படமெடுக்க வட்டக் குடைபிடித்து வாறாராம் வன்னிய ப்பு அது என்ன?

39) படபடக்கும்,பளபளக்கும் மனதுக்குள் இடம் பிடிக்கும் அது என்ன?

40) சங்கீதம் பாடுபவனுக்கு சாப்பாடு இரத்தம் அது என்ன?

41) கந்தல் துணிக்காறி முத்துப் பிள்ளைகள் பெற்றாள் அவள் யார்?

42) மரத்திற்கு மேலே பழம், பழத்திற்கு மேலே மரம் அது என்ன?

43) ஊசி நுழையாத கிணற்றிலே ஒரு படி தண்ணீர்?

44) நாளெல்லாம் நடந்தாலும் நாற்பதடி செல் லாது அந்த நாயகனுக்கோ உடல் மேல் கவசம் அது என்ன?

45) ஏரியில் இல்லாத நீர்,தாகத்திற்கு உதவாத நீர், தண்ணீர் அல்ல அது என்ன?

46) கண்ணீர் விட்டு வெளிச்சம் தருவாள் அவள் யார்?

47) தலைக்குள் கண் வைத்திருப்பவன் இவன் மட்டும்தான் அவன் யார்?

48) ஓர் அரண்மனையில் முப்பத்திரெண்டு காவ லர்கள் அது என்ன?

49) உணவை எடுப்பான் ஆனால் உண்ண மாட்டான் அவன் யார்?

50) ஒற்றைகிண்ணத்துக்குள இரட்டை தைலங்கள் எவை?

51) ஓட்டியவன் ஒருத்தன், பிரித்தவன் இன்னொ ருவன். அது என்ன?

52) வெள்ளத்தில் போகாது, வெந்தணலில் வேகாது, கொள்ளையடிக்க முடியாது, கொடுத்தா லும் குறையாது. அது என்ன?

53) பொட்டுப்போல் இலை இருக்கும், பொரி போல் பூப் பூக்கும், தின்னக்காய் காய்க்கும், தின்னாப் பழம் பழுக்கும் அது என்ன?

54) தண்ணீரில் பிறப்பான் தண்ணீரில் இறப்பான். அவன் யார்?

இதற்கான விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும் புதிர்ப்போட்டியில் வெளியிடப்படும். அதற்கு முன்னதாக பெயர் விபரத்துடன் உங்களது பதில்கள் புகைப்படத்துடன் குறித்த முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் கிடைப்பதோடு படங்களுடன் பெயர்களும் பிரசுரிக்கப்படும்.

55) குண்டு குள்ளனுக்கு குடுமி நிமிர்ந்தே இருக்கும் அவன் யார்?

## சென்றவார விடைகள்

01) வெங்காயம் 02) மூன்றாம் பிறை

03) தமிழில் முதல் நாவலை எழுதியவர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை, அவர் 1879இல் எழுதிய பிரதாப முதலியார் சரித்திரம் தான் தமிழில் முதல் உரைநடைவடிவ நாவல்

04) அலகாபாத் 05) பெப்ரவரி 28

06) சிங்கப்பூர் 07) ஆன் ட் ரோபோபியா

08) ஹீலியம்

09) தாலின். இது கெடெம்பே என்ற செடியில் இருந்து கிடைக்கிறது

10) தீபம் 11) நிலா

12) மஞ்சள் 13) இதயம்

14) தக்காளி 15) கடல்

16) கண் 17) காளான்

18) மின்விசிறி 19) பூட்டும் திறப்பும்

20) நெல் 21) வேம்பு

22) காட்ஸ் 23) கண்ணீர்

24) மேளம் 25) வாய்

26) சாக்கடை 27) தீக்குச்சி

28) பாம்பு 29) கண்இமை

30) ஆறு அல்லது அருவி 31) வெங்காயம்

32) நெருப்பு 33) 32 x 8 = 256

34) 55 வட்டத்திற்கு வெளியே உள்ள எண்க ளைக் கூட்டி 2ஆல் வகுத்தல்

35) 7 கூட்டுத்தொகைக்குச் சமம்

36) 24 = 4 x 6 1

37) 5 x 6 = 15 x (2)

## சரியான விடைகளை எழுதி பாராட்டுப் பெறுவோர்

பெயர் :- சி.உதயன்
தரம் :- 10
பாடசாலை:-யா/சத்தியசாயி பாடசாலை

பெயர் :- பா.தேனுகா
தரம் :- 12
பாடசாலை:-யா/சன்மார்க்கம் மகாவித்தியாலயம்

பெயர் :- ம.சுரேன்
தரம் :- 11
பாடசாலை:-யா/மத்திய கல்லூரி

### விண்ணப்பதாரரின் விபரம்

முழுப்பெயர் :- ............................

பாடசாலை :- ............................

கல்வி கற்கும் தரம் :- ............................

வீட்டு முகவரி :- ............................

தொ.பேசி இலக்கம் :- ............................

# முல்லை மாவட்ட பிரதேச சபை தேர்தல்

# கிளி.மாவட்ட உத்தியோகத்தர்கள் கடமையில்

## மாவட்ட செயலகத்தின் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று புதுக்குடியிருப்பு பிரதேச சபைகளுக்கு எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள தேர்தலுக்கு கிளி நொச்சி மாவட்டத்தில் கடமையாற்றும் உத்தி யோகத்தர்களும் தேர்தல் கடமைக்குச் செல்லவுள் ளனர். இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட செய லகத்தின் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் மேற் கொண்டுள்ளார்.

20 பதவிநிலை உத்தியோகத்தர்களே இவ் வாறு சிரேஷ்ட தலைமைதாங்கும் அலுவலர்களாக (SPO) ஆக கடமையாற்றச் செல்லவுள்ளனர்.

இத் தேர்தலில் அமைக்கப்படவுள்ள 95 வாக் களிப்பு நிலையங்களில் 20 இற்கு கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலராக கட மையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி இரு சபைகளுக்குமான தேர்தல் குறு கிய கால அவகாசத்தில் நடைபெறவுள்ளதால் உத்தி யோகத்தர்களுக்கு தபால் மூல வாக்களிப்பிற்கு சந்தர்ப்பம் வழங்க முடியாமை காரணமா கவே இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட உத்தியோ கத் தர்கள் கடமைக்கு செல்கின்றனர்.

இவர்களுக்குரிய பயிற்சி வகுப்பு எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடத்துவதற்கும் ஏற்பாடுகள் செய் யப்பட்டுள்ளன.

இவர்கள் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக் கிழமை அதிகாலை கிளிநொச்சி மாவட்ட செயலகத திலிருந்து முல்லைத்தீவிற்கு வாகனத்தில் அழைத் துச் செல்வதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் வாக் குப் பெட்டிகள், வாக்குச்சீட்டுக்கள் ஏனைய ஆவ ணங்களையும் பெற்று தமக்குரிய வாக்களிப்பு நிலையத்திற்கு செல்லவுள்ளார்கள்.

இந்த பிரதேச சபை எல்லைகளுக்குள் உள்ள உத்தியோகத்தர்கள் வாக்கெண்ணும் கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். (90)

## சட்டவிரோத மண் அகழ்வு அரியாலையில் அதிகரிப்பு

(திருநெல்வேலி)

அரியாலை கிழக்கு கட்டடப்பகுதியில் சட்ட விரோத மண் அகழ்வு அதிகளவில் இடம்பெறு வதாக அப்பகுதிக்கான நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினர் வ.கணேசா தெரிவித்துள் ளார்.

இரவிரவகாக மண் அகழ்வு இடம் பெறு வதாகவும் இதுபற்றித் தட்டிக் கேட்பதற்கு முன்வருபவர்கள் மண் அழ்வாளர்களினால் பயமுறுத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

சம்பந்தப்பட்டவர்களிடம் இது பற்றி பலமுறை முறையிட்ட போதும் அதனால் பலன் எதுவும் கிடைக்கவில்லை மண் அகழ்வு தொடரு மானால் கடல் நீர் ஊருக்குள் புகுந்து கொள்வ தூடன், விவசாயச் செய்கையும் பெருமளவில் பாதிப் படையும் அபாயம் உள்ளது எனவும் கணேசா மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும் மண் அகழ்வு துணிகரமாக நடைபெறு வதால் சம்பந்தப்பட்டவர்கள் இதில் தலையிட்டு இதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடு படவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத் துள்ளார். (137)

## ஞானச்சுடர் வாசகர்போட்டியில் பரிசு பெறுவோர் விபரம் வருமாறு

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண் பாட்டுப்பேரவையினரின் ஞானச்சுடர் வாசகர் போட்டியில் பரிசு பெறுவோர் விபரங்கள் வெளி யிடப்பட்டுள்ளன. இவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 27ஆம் திகதி வெள் ளிக்கிழமை நடைபெறவுள்ளது. அன்றையதினம் மாசி மாத ஞானச்சுடர் வெளியீட்டு விழா நடை பெறவுள்ளமையும். குறிப்பிடத்தக்கது.

பரிசு பெறுவோர் விபரம் வருமாறு திருமதி மைதிலி பார்த்திபன் வல்வெட்டித்துறை எஸ்.பாலசுந தரம் யாழ்ப்பாணம், திருமதி இ.யாழினி புலோலி.

ஆறுதற்பரிசுகள்

திருமதி.சறோஜினி சிவஞான சுந்தரம் (தும் பளை, பருத்தித்துறை) செல்வி தாரணி சண்முக ரத்தினம் (கோண்டாவில்), பாலகிருஸ்ணன் சாளினி (அல்வாய்), கார்த்திகா இராஜேஸ்வரன் (யாழ்ப்பா ணம்), திருமதி ஹாசினி மூதூர், செல்வி கே.கம லாம்பிகை (மீசாலை), வே. குமாரசாமி காரைநகர், செல்வி.சுபதா.மாலவன் (யாழ்ப்பாணம்), எஸ். சந்திர சேகரம் (நீர்வேலி.) (01)

# உடைந்த நிலையில் பாலம் அச்சத்தில் போக்குவரத்து



(கிளிநொச்சி)

அக்கராயனிலிருந்து-ஜெயபுரம் செல்லும் வீதியில் ஆரோக்கியபுரம் பகுதியில் பாலம் ஒன்று இடிந்த நிலையில் காணப்படுகின்றது.

ஜெயபுரத்தில் இருந்து அக்கராயன் ஊடாக கிளிநொச்சி ஏ-9 வீதியை இணைக்கும் இப்பாதை யினூடாக பெருமளவு வாகனங்கள் போக்கு வரத் தில் ஈடுபட்டுவருகின்றன.

மிக நீண்ட காலமாக இந்தப்பாலம் இடிந்த நிலையில் காணப்படுவதால் வாகன சாரதிகளும் பயணிகளும் கடும் அச்சத்துடனேயே பயணம் மேற் கொண்டுவருகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுத்து பாலத்தை புனரமைக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (81)

# வாரம் ஒரு காரம்

## இரட்டை வேட இணக்கப்பாட்டை உங்களால் புரிந்து கொள்ள முடிகின்றதா?....

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மக்கள் மத்தியில் ஒரு வேடமும் மைத்திரியர சின் மத்தியில் வேறொரு வேடமும் போட்டுவருவதை தற்போதய அரசியலில் தமிழ் மக்களால் புரிந்து கொள்ள முடிகின்றதா? என்பது தான் இந்த வார காரத்தின் கருப்பொருளாக உள்ளது.

அரச எதிர்ப்பை ஆதாரப்படுத்தாவிட்டால் தமிழ் மக்களின் ஆதரவினை எதிர்காலத்தில் சம்பாதிக்கமுடியாது என்பதை உணர்ந்து அரசின் ஆமோ திப்போடு அரச எதிர்ப்புக்கோசங்களை ஒரு துருவத்திலும். இதுவரை கண்ட அனுபவங்களின் அடிப்படையில் மத்திய அரசுடன் இணக்கப் பாடின்றி எதுவுமே செய்யமுடியாது என்பதை உணர்ந்து ஓர் இணக்கப் பாட்டினை மறு துருவத்திலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முன்னெடுத்து வருகின்றது என்பது தற்போது தெளிவாகத் தெரிகின்றது.

இந்த இருவேடம் இது வரை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மக்களிற்கு செய்த துரோகங்களை விடப் பெரும் துரோகமாக உருவெடுக்கப் போகின்றது என்பதும் தெளிவாகத் தெரிகின்றது. மறுபுறத்தில் சிங்கள அரசு தமிழ் மக் களிற்கான நிரந்தர தீர்வினை இழுத்தடிப்பதற்கும் கூட்டமைப்பு உதவி செய்யப் போகின்றது என்பதும் தெளிவாகத் தெரிகின்றது.

- வடமாகாண சபையில் அரச எதிர்ப்புத் தீர்மானத்தை நிறை வேற்றிவிட்டு சிங்கள அரசு பேச்சு மாறுகின்றது. மாமன் வழியில் மருமகன் பயணிக்கின்றார் என சீறிய முதலமைச்சர் விக்னேஸ் வரன் கடந்த சில நாட்களிற்கு முன் வடக்கு மாகாண உள்ளூ ராட்சி மீளாய்வுக் கூட்டத்தில் போசும்போது 'இது எங்கள் அரசு இதனுடன் இணக்கம் கொண்டு செயற்படுவதே எமது எதிர்கால அரசியல்' என சரணடைந்துள்ளார்.
- 'சம்பந்தர் சுமந்திரன் போன்றோர் சுதந்திர தினத்தில் கலந்து கொண்டமை கூட்டமைப்பு எடுத்த முடிவல்ல, தனிப்பட்டவர்கள் எடுத்த முடிவு. மைத்திரியரசு 'நம்பி வாக்களித்த தமிழ்மக்களை' ஏமாற்றிவிட்டது, இதுவரை தனது திட்டங்களில் தமிழ்மக்களிற்கு சாதகமாக எதை முன்னெடுத்தது' என கொதித்தெழுந்த எங்கள் சுரேசண்ணா தற்போது தேசிய அரசில் இணைந்து கொள்ளத் தாம் தயாராம்... அரசின் அழைப்பிற்காக காத்திருக்கின்றோமாம்!...
- ஐ.நா. வின் விசாரணை அறிக்கை திட்டமிட்டபடி அடுத்த மாதம் ஜெனீவாவில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். உள்ளக விசாரணையை ஒருபோதும் நாம் ஏற்க மாட்டோம் என பத்திரிகையில் தலைப்புச் செய்தியாக அறிக்கைவிட்ட எங்கள் சம்பந்தரய்யா தற்போது பிற்போடப்பட்டமை தொடர்பாக எதுவும் பேசவில்லையே...
- ஐ.நா. அறிக்கையை ஒத்திவைத்தால் 3 நிபந்தனைகளிற்கு உடன பட்டேயாக வேண்டும் என தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தலை யடிபோட தமது கும்மாளத்திற்கு குறி வைக்கின்றார்கள் என்பதை உணர்ந்த எங்கள் பரிசுத்தவான் சுமந்திரனண்ணா தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியை தம்முடன் இணைந்து செயற்பட அழைப்பு விடுத்துள்ளார்.
- முன்னைய அரசு 13 இற்கு அப்பால் தீர்வினைப் பெற அழைத்த போதும் செல்லாத கூட்டமைப்பு தற்போது 13 தான் தீர்வென செயற்பட ஆரம்பித்து விட்டதா?...
- போர்க்குற்ற விசாரணை பிற்போடப்பட்டதில் உடன்பாடில்லை என எங்கோ இருக்கின்ற பிரிட்டன் கூறுகின்றது. ஆனால் எங்கள் சுமந்திரனண்ணாவோ அது போனது போகட்டுமாம் செப்ரெம்பரில் வெளியாக இருக்கும் அறிக்கையை கனதியாக்க அனைத்து மக்களையும் தம்மோடு ஒன்றிணைய வேண்டுமாம். மக்கள் பட்ட வலியின் தன்மை இவரோடு ஒப்பிடும்போது பிரிட்டனிற்கு நன்றாகத் தெரியுமல்லவா?.....அது தான் இதன் பின்னணி.
- மறு புறத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு வேறொரு பிரச்சி னையும் உள்ளது. புதிய அரசோடு ஏற்பட்ட இணக்கப்பாடு தமிழ் மக்களிற்கு விரோதமான முறையில் திசைமாறினாலும் அதைப் பொருட்படுத்தாது தொடர்ந்து தக்க வைக்க வேண்டிய தேவை யுள்ளது. காரணம் அந்த இணக்கப்பாடு முறிந்தால் ஈழமக்கள் ஜன நாயகக் கட்சி பழைய இடத்தைப் பிடித்துவிடுவார்கள் என்பது. தமிழ் மக்களின் தீர்வு தொடர்பான பிரச்சினையை விட, கூட்ட மைப்பிற்கு அரசையும் டக்ளஸ் தேவானந்தாவையும் பிரிப்பது முக்கியமான பிரச்சினையே...

ஆகவே இவற்றையெல்லாம் நோக்கும் போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தற்போது போடும் இரட்டை வேடமே இனிவரும் தமிழ் மக்களின் சாபக் கேடாகும். காலத்திற்குக் காலம் ஒவ்வொரு சாபக்கேடுகள் தமிழ் மக்களிற்கு வருவது சகஜம்தானே...

- வெண்கட்டியன்

# எண்பது வீதமான மருந்துகள் இந்தியாவிலிருந்தே இறக்குமதி

(கொழும்பு)

**இலங்கைக்கான மருந்துகளில் 80 சதவீதமானவை இந்தியாவிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன . இம் மருந்துகளைக் கால தாமதமின்றி தரத்துடன் கூடியவையாக ஏற்றுமதி செய்யுமாறு இந்திய சுகாதார அமைச்சர் ஜே.பி.நட்டாவினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.**



கடந்த நாட்களில் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள், அரசியல் பிரமுகர்களுடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

என நேற்று முன்தினம் அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களைக் தெரிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போது அமைச்சரவைப் பேச்சாளர தெரிவித்துள்ளார்.

மேலும் இது பற்றி அவர் நறிப்பிடுகையில் இலங்கையின் மருந்துத் தேவைகளில் 80 வீதமானவை இந்தியாவிலிருந்தே பெறப்படுகிறது.

இவ்வாறு பெறப்படும் மருந்துகளின் மாதிரிகளை அனுப்பி வைக்கும் போது அவை தரத்துடன் காணப்படுவதாகவும் மருந்துகள் அனுப்பிவைக்கப்பட்ட பின் அவற்றில் பிரச்சினைகள் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன் மலேரியா ஒழிப்பு பற்றியும் கருத்துத் தெரிவித்த பேச்சாளர் தெற்காசியாவில் மலேரியா இல்லாத நாடாக முதலில் சிங்கப்பூர் இனங்காணப்பட்டது. தற்போது தெற்காசியாவிலே மலேரியா இல்லாத இரண்டாவது நாடாக இலங்கை இனங்காணப்பட்டுள்ளது. இலங்கையில் இரண்டு வருடங்களாக மலேரியா குறித்து எதுவித முறைப்பாடுகளும் முறையிடப்படவில்லை.

அத்துடன் இந்த மலேரியா ஒழிப்பு நடவடிக்கையை மேலும் தொடர்ந்து இன்னும் இரண்டு வருடங்களுக்கு மலேரியா இல்லாத நாடாக இலங்கையினை நாங்கள் பேணி வந்தால் உலக சுகாதார ஸ்தாபனத்தின் சான்றிதழ் கிடைக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் எதிர்வரும் ஏப்ரல் மாதம் இடம்பெறவுள்ள சார்க் மாநாட்டின் சுகாதார அமைச்சர்கள் மாநாட்டில் பங்கேற்குமாறு இந்தியாவின் சுகாதார அமைச்சர் ஜே.பி.நட்டா நாட்டின் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு அழைப்பு விடுத்துள்ளார் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# வேலை நிறுத்தத்திற்கு ரயில் ஊழியர்கள் முஸ்தீபு

(கொழும்பு)


தமது பிரச்சினைக்குத் தீர்வு வழங்க அரசாங்கம் தவறியுள்ளதால் வேலை நிறுத்தம் மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக ரயில் தரப்படுத்தல் தொழிற்சங்க ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

சம்பள உயர்வு குறித்து கடந்த அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தி வந்த போதிலும் தேர்தல் வந்ததால் அது கைவிடப்பட்டுள்ளதாக ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் ஜானக பெனாண்டோ தெரிவித்துள்ளார்.

எனினும் தற்போதைய அரசாங்கத்தின் போக்குவரத்து அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டாரவிடம் பேச்சுவார்த்தைக்கு நேரம் கேட்டுள்ள போதும் இது வரை அது கிடைக்காததால் தொழிற் சங்க போராட்டத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வேலை நிறுத்தம் குறித்து இன்னும் ஓரிரு நாட்களில் இறுதி முடிவு அறிவிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

# சுந்தரபுரம் முத்துமாரி கோவில் கதவுகள் உடைத்து திருட்டு



(வவுனியா)

வவுனியா சுந்தரபுரம் நாகர் இலுப்பைக்குளம் பகுதியில் அமைந்திருக்கும் முத்துமாரி அம்மன் கோவிலில் நேற்று முன்தினம் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த புதன்கிழமை பூசை நடைபெற்று நிறைவடைந்தவுடன் பூட்டப்பட்ட நிலையில் இருந்த கோவிலின் கதவுகள் நேற்று முன்தினம் காலை உடைக்கப்பட்ட நிலையில் இருந்ததாகவும், அம்மனின் தாலிப் பொட்டு, வாள் உள்ளிட்ட பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

நேற்று முன்தினம் காலை வழமை போன்று வழிபாட்டுக்காக அடியார்கள் ஆலயத்திற்கு வந்த போதே கதவுகள் உடைக்கப்பட்டு திருடப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து விரைந்து வந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறுவர்களின் போஷாக்கு உதவி வழங்கும் ஐ.நா.

(கொழும்பு)

இலங்கையில் சிறுவர்களது போஷாக்கை மேம்படுத்தல் உட்பட சிறுவர் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஐ.நா. உணவு மற்றும் விவசாய அமைப்பு அனுசரணை வழங்கவுள்ளது.

சிறுவர் விவகார அமைச்சில் ராஜாங்க அமைச்சர் ரோசி சேனாநாயக்க மற்றும் ஐ.நா. அமைப்பின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் பிரதிநிதி திருமதி பெத் க்ரோபோர்ட் ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற விசேட சந்திப்பின் போது இவ்விணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.



இதன்போது குழந்தைகளின் போஷனையை மேம்படுத்த நூறு நாள் திட்டத்தில் அறிமுகப் படுத்தப்பட்ட கர்ப்பிணித் தாய்மாருக்கு 20,000 ரூபா வழங்கும் நடவடிக்கை தொடர்பில் திருமதி க்ரோபோர்ட்டுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

ஆரம்ப பருவத்தில் முன்னெடுக்கப்படவேண்டிய பாடசாலையை கேந்திரமாக கொண்ட உணவு- போஷாக்கு திட்டம் -போசனை தொடர்பாக தெளிவூட்டும் திட்டம் என்பன தொடர்பிலும் அமைச்சு விசேட கவனம் செலுத்துவதாகவும் அமைச்சர் ரோசி சேனநாயக்க இதன் போது தெரிவித்தார்.

இவ்விடயங்களைக் கேட்டறிந்த திருமதி க்ரோபோர்ட் சிறுவர் போஷாக்கு செயற்றிட்டத்திற்கு ஐ.நா.வின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுப்பதாக அவர் உறுதியளித்தார்.

# வெளிவந்தது கலிங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ் எய்ட்டால் வெளியிடப்படும் 'கலிங்கம் பரணி-8' சஞ்சிகை வெளிவந்துள்ளது.

பால்ய விவாகமும் பரிதாப வாழ்வியலும் எனும் முகப்புக் கட்டுரையுடன் அரசியல், வரலாறு, சமயம் நகைச்சுவை, அறிவியல், உண்மைச் சம்பவங்கள், என பல்வேறான கனதியான கட்டுரைகளைத் தாங்கி பரணி-8 வெளிவந்துள்ளது.

# முன்னாள் ஜனாதிபதியின் ஊழல் முறைப்பாடுகள் கிடப்பில் இல்லை

## இலஞ்ச, ஊழல் தவிர்ப்பு பணிப்பாளர் தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ மற்றும் அவரது குடும்பத்தாருக்கு எதிரான இலஞ்ச ஊழல் மோசடி முறைப்பாடுகள் கிடப்பில் போடப்படவில்லை என இலஞ்ச ஊழல் தவிர்ப்பு ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் தில்ருக்ஸி டயஸ் விக்ரமசிங்க தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தான் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட சந்தர்ப்பத்தில் 1600 முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாகத் தெரிவித்துள்ளார்.

கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டு ஆறு நாட்களில் 427 கோவைகள் பற்றி ஆராய்ந்து உரிய பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் இதுவரையில் 521 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட அவர்

இவற்றுள் 31 முறைப்பாடுகள் பாடசாலை அதிபர்களுக்கு எதிரானவை. அவை குறித்து விசாரணை நடாத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

முதலில் ஆணைக்குழுவின் அதிகாரிகள் தொடர்பில் முறைப்பாடு இருந்தால் அது குறித்து விசாரணை நடாத்தப்படும் அதிகாரிகள் தொடர்பில் 077 60 11 954 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முறைப்பாடு



செய்ய முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

விசாரணை செய்யப்பட்டு வரும் அரசியல்வாதிகள் தொடர்பிலான தகவல்களை ஊடகங்களுக்கு வெளியிட முடியாது எனவும், அவர்களின் இரகசிய தன்மையை பாதுகாக்க வேண்டியது தமது கடமையாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சிறீதரன் எம்.பி.யின் நூல் வெளியீடு

யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் ஜெனீவா தீர்மானம் மெய் நிலையும் அரசியலும் ஒரு நோக்கு எனும் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

சிரேஷ்ட சட்டத்தரணியும் இலங்கை தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளை தலைவருமாகிய கே.வி.தவராசா தலைமையில் நடைபெற உள்ள இந்நிகழ்வில் விருந்தினர்களாக இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மாவை சேனாதிராசா, மேல் மாகாண சபை உறுப்பினரும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவருமாகிய மனோ கணேசன், கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தண்டாயுதபாணி ,கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமாகிய சி.துரைராசசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

நூலின் வெளியீட்டுரையை மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் நிகழ்த்த உள்ளார்.

நூலின் ஆய்வுரையை அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் ,கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தின் பீடாதிபதி வி.ரி.தமிழ் மாறன் ஆகியோர் நிகழ்த்த உள்ளனர்.

ஏற்புரையை நூலாசிரியரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய சி.சிறீதரன் நிகழ்த்த உள்ளார்.

(38). ஒரு பூனை இருக்கும் இடத்திலிருந்து ஒரு மீற்றர் தூரத்தில் ஒரு எலி இருக்கிறது. பூனை ஒரு செக்கனில் 50cm ஓடும். எலி ஒரு செக்கனில் 15cm கொண்ட 3பாய்ச்சல் பாயும். பூனை எலியைப் பிடிக்க எவ்வளவு நேரம் எடுக்கும்?

..............................................................................................................

(39). அந்த எலி பூனையிடமிருந்து தப்ப வேண்டுமானால் ஒரு பாய்ச்சல் குறைந்தது என்ன அளவாக இருக்க வேண்டும்?

..............................................................................................................

(40). ஒரு உடைந்த கடிகாரம் 30 நிமிடங்களுக்கு ஒருமுறை மணி அடிக்கும். முதலாவது தடவையாக 7.30க்கு மணி அடித்தது. அது 9ஆவது தடவையாக மணி அடிக்கும் போது நேரம் என்னவாக இருக்கும்?

..............................................................................................................

(41). தராசியின் ஒரு பக்கத்தட்டில் 250g படி ஒன்றும் 500g படி ஒன்றும் மறுபக்கத்தில் பொட்டலம் ஒன்றும் 100g படி இரண்டும் வைக்கப்பட்டன. அப்போது அதன் இரு பக்கத்தட்டுக்களும் சமநிலையில் காணப்பட்டன. எனின் தட்டில் வைக்கப்பட்டுள்ள பொட்டலத்தின் நிறை யாது?

..............................................................................................................

(42). ஐந்து வருடங்களுக்கு முன் எனது வயது 25 வருடமாகும். எனது தந்தையின் வயது எனது வயதைப்போன்று இரண்டு மடங்குக்கு 5வருடம் குறைவானது எனின் எனது தந்தையின் வயது என்ன?

..............................................................................................................

(43). 2l பாலின் விலை 8.50 ரூபாவாகும். 5l பாலின் விலை யாது?

..............................................................................................................

(44). கவிதா 30நிமிடங்களில் 15kg கொழுந்து கொய்வாள். விமலா 15 நிமிடங்களில் 8kg கொழுந்து கொய்வாள். இருவரும் 2 மணித்தியாலயங்களின் எவ்வளவு கொழுந்து கொய்வார்கள்?

..............................................................................................................

(45). மாலினி 7 பாடங்களின் பெற்ற சராசரி புள்ளி 60ஆகும். அவள் 8பாடங்களில் பெற்ற சராசரி புள்ளி 63ஆகும். அவள் 8ஆவது பாடத்தில் பெற்ற புள்ளி யாது?

..............................................................................................................

(46). கவிதாவின் வயது மாலாவின் வயதின் இரண்டில் ஒரு பங்குக்கு ஒரு பங்குக்கு 2 வருடம் குறைவானது. கவிதாவின் வயது 11வருடம் எனின் மாலாவின் வயது என்ன?

..............................................................................................................

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01). 1. 3 2. 3 3. 3 (02). 4. 2 5. 2 6. 1 7. 3 8. 3 9. 2 (03). 10. 2 11. 3 12. 1 (04). 13. காய் 14. களிமண் (05). 15. பெண்பிள்ளை காலையில் பாடசாலை நோக்கிச் செல்கின்றது 16. ஆண்பிள்ளை காலையில் பாடசாலை நோக்கி மகிழ்ச்சியுடன் திரும்பி வருகின்றான் 17. 1 18. 2 19. 2 20. 3 21. 2 22. 3 23. 2 24.2 25. 4 26. 2 (06). 27. ஆகாரம் 28.தேசம் 29. இந்தியா / சீனா 30. உடல் உறுப்பு 31. உயிர்ச்சத்து A,B,C 32.ஏற்றுமதி 33. இலங்கை 34. புரதம், காபோவைதரேற்று, கொழுப்பு, உயிர்ச் சத்துக்கள், கனிஉப்புக்கள், நார்ப்பொருள், நீர் 35.ஒழுங்கான 36.காலை,மதியம்,இரவு (07). 37. மாணவர்கள் பாடங்களை படித்தல் வேண்டும் 38.மாணவர்கள் ஒழுக்கத்தை கடைப்பிடித்தல் நன்று (08). 39. நிகழ்காலம் (09). 40. அரண்மனைத் 41. அழைத்து (10). 42. உழத்தி 43. பாடினி (11). 44. Water 45. Hands 46. North 47. May I come in? (12). 48. சந்தை 49. தோடம்பழம் 50. கிழமை 51. இது ஒரு வங்கி (13). 52. 4 53. 2

**பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**





## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக

(01) இன்னும் மூன்று வருடங்களில் புனிதாவின் வயது வனிதாவின் வயதின் 3 மடங்காகும். இப்பொழுது புனிதாவின் வயது 15 எனின் வனிதாவின் வயது யாது?

..............................................................................................................

(02) ரூபா 30இற்கு 15 கொய்யாப்பழங்கள் வாங்கலாம். 35 கொய்யாப்பழங்கள் வாங்குவதற்கு எவ்வளவு பணம் வேண்டும்?

..............................................................................................................

(03) செவ்வகத்தின் நீளம் அதன் அகலத்தைப் போன்று 3 மடங்காகும். செவ்வகத்தின் சுற்றளவுக்கு சமமான சதுரம் ஒன்று உள்ளது. செவ்வகத்தின் நீளம் 12cm எனின் சதுரத்தின் ஒரு பக்க அளவு யாது?

..............................................................................................................

(04) 25கிராம் எள்ளிலிருந்து ஒரே அளவான 25 எள்ளுருண்டைகள் செய்யலாம். 1.5kg எள்ளிலிருந்து எத்தனை எள்ளுருண்டைகள் செய்யலாம்?

..............................................................................................................

(05) 1லீற்றர் பெற்றோலில் 28 கிலோமீற்றர் பிரயாணம் செய்யலாம். 196 கிலோ மீற்றர் தேவையான பிரயாணம் செய்ய தேவையான பெற்றொலின் அளவு யாது?

..............................................................................................................

(06) மு.ப.8.15 மணிக்கு புறப்பட்டுச் சென்ற குமார் பி.ப.3.35 மணிக்கு வீட்டுக்கு வந்தார். குமார் வெளியே இருந்த கால அளவு யாது?

..............................................................................................................

(07) ஒரு கிலோகிராம் அரிசியின் விலை ரூபா 37.50 ஆகும். 10 கிலோகிராம் அரிசியை 400 ரூபாவிற்கு விற்ற வியாபாரியின் இலாபம் எவ்வளவு?

..............................................................................................................

(08) கவிதா கடைக்குச் சென்று 2kg 500g பருப்பும், 1kg 750g சீனியும் வாங்கினாள். அவள் வாங்கிய சமான்களின் மொத்த நிறை யாது?

..............................................................................................................


(09) ஒரு மாம்பழத்தின் விலையைப் போன்று நான்கு மடங்கு விலைக்கு ஒரு அன்னாசிப்பழம் வாங்கலாம். ஒரு அன்னாசிப்பழத்தின் விலை 36ரூபா எனின் 6 மாம்பழங்களின் விலை யாது?

..............................................................................................................

(10) கவிதா மு.ப.6.30க்கு பாடசாலைக்குப் புறப்பட்டுச் சென்றாள். அந்த கடிகார நேரத்தை நியம கடிகார நேரத்தில் எழுதுக

..............................................................................................................

மதிய உணவின் போது மீன், இறைச்சி, முட்டை உண்பதற்கு விருப்பமானவர்களின் எண்ணிக்கையை கீழே உள்ள படம் காட்டுகிறது




(11) முட்டை உண்ண விருப்பமும், இறைச்சி உண்ண விருப்பமில்லாதவரும் மீன் உண்ண விருப்பமானவர்களும் எத்தனை பேர்?

..............................................................................................................

(12) மீனும் இறைச்சியும் மட்டும் விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை யாது?
..............................................

(13) மீன் உண்ண விரும்பும், இறைச்சி முட்டை உண்ண விரும்பாத மாணவர்கள் எத்தனை பேர்?
..............................................

(14) உடரட்ட மெனிக்கே புகைவண்டி மு.ப.7.45மணிக்கு கண்டியில் இருந்து புறப்பட்டுச் சென்று பி.ப.2.15க்கு கொழும்பை அடைந்தது. அது கொழும்புக்குச் செல்ல எவ்வளவு நேரம் எடுத்தது?
..............................................

(15) ஒரு வகுப்பில் 45 பிள்ளைகள் இருக்கின்றார்கள். அவர்களின் $\frac{4}{9}$ பங்கினர் பெண்கள் அவர், வகுப்பில் உள்ள ஆண்கள் எத்தனை பேர்? ..............................................

(16) கவிதா 15நிமிடங்களில் 30 மாலைகள் கட்டுவாள். குமுதா 20 நிமிடங்களில் 15 மாலைகள் கட்டுவாள். இருவரும் 1 மணித்தியாலயத்தில் எத்தனை மாலைகள் கட்டுவர்
..............................................

(17) 250 மில்லிலீற்றர் பாலில் 9 கோப்பை தேனீர் தயாரிக்க முடியும். 2லீற்றர் பாலில் எத்தனை கோப்பை தேனீர் தயாரிக்கலாம்?
..............................................

(18) மூன்று மாம்பழங்களினதும், 5 தோடம்பழங்களினதும் விலை 74ரூபா மாம்பழத்தை விட தோடம்பழம் 2ரூபா விலை கூடியது. ஒரு டசின் தோடம்பழத்தின் விலை என்ன?
..............................................

(19) மு.ப.7.40க்கு புறப்பட்ட நிசார் பி.ப4.10க்கு கொழும்பை அடைந்தார். அவர் கொழும்புக்குச் செல்ல எவ்வளவு நேரம் எடுத்தார்?
..............................................

கீழே கொடுக்கப்பட்டுள்ள கடதாசிக்கீலங்களை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக


A 1m 75cm
B 1m 45cm
C 2m 25cm
D 1m 35cm
E 1m 50cm

(20) மிகுதியின்றி 4மீற்றர் அளப்பதற்கு பாவிக்கக்கூடிய கீலங்கள் எவை?
..............................................

(21) மிகவும் நீளமான கீலத்திற்கும் மிகவும் குறைந்த கீலத்திற்கும் இடையே உள்ள வித்தியாசம் என்ன?
..............................................

(22) கீலங்களின் நீளங்களை இறங்குவரிசைப்படுத்தி அதற்குரிய ஆங்கில எழுத்துக்களை புள்ளிக்கோட்டில் எழுதுக

(23) குறித்த ஒரு பூப்பாத்தியின் படம் கீழே தரப்பட்டுள்ளது அதன் சுற்றளவை காண்க




(24) 7மீற்றர் உயரமான தூணில் இருந்து வரும் நிழலின் நீளம் 10.5 மீற்றர் ஆகும். 3மீற்றர் உயரமான மரத்திலிருந்து வரும் நிழலின் நீளம் யாது?
..............................................

(25) சிறியதவளை  பெரியதவளை



ஒரு பெரியதவளை 15cm விதம் பாய்ந்து முன்னால் சென்றது. அது பாய்ந்த இடங்களைப் ஆங்கில எழுத்துக்கள் காட்டுகின்றன. சிறிய தவளை ஒன்று பெரிய தவளை பாய்ந்த இடம் வழியாக பாய்ந்து சென்றது. அது 10cm விதம் பாய்ந்து செல்கிறது. சிறிய தவளை பெரிய தவளை பாய்ந்த இடத்திற்கும் பாய்கிறது அந்த இடங்களுக்குரிய ஆங்கில எழுத்துக்கள் எவை?
..............................................

(26) 4 /10, 1 / 4, 1 / 2, 2 / 5 இதில் இரண்டு சம வலுப்பின்னங்களை தெரிந்து எழுதுக
..............................................




(27) ABC ஆகிய வகுப்புக்கள் ஒவ்வொன்றிலும் 30 மாணவர்கள் விதம் கல்விகற்கிறார்கள் பின்னர் B வகுப்பிலிருந்து 4பேர் A வகுப்பிற்கு மாற்றப்பட்டார்கள் C வகுப்பிலிருந்து B வகுப்புக்கு ஒரு மாணவன் மாற்றப்பட்டார். இப்போது குறைந்த மாணவர் உள்ள வகுப்பு யாது?
..............................................

கீழே காட்டப்பட்டுள்ள கைக்குட்டை மாலதியினுடையதாகும். அது நான்கு சதுரமாக மடிக்கப்பட்டுள்ளது. அதன் நீளம் இங்கே காட்டப்பட்டுள்ளது





(28) மாலதியின் கைக்குட்டையை விரித்து அதன் சுள்ளறவை அளந்தால் அதன் நீளம் என்னவாக இருக்கும்?
..............................................

(29) 



முதலாவது உள்ள கடதாசியை முற்றாக ஒட்டி மறைப்பதற்கு படத்தில் காட்டிய சிறியதுண்டு போன்று எத்தனை கடதாசித்துண்டுகள் தேவை?
..............................................

(30) 



இப்பாத்திரத்தில் 10 தடவைகள் பால் அளந்து ஒரு பானையில் இடப்பட்டது. பானையில் உள்ள பாலின் அளவு எத்தனை லீற்றர்?
..............................................

(31) 

20ரூபாவுக்கு எத்தனை ரொபிகள் வாங்கலாம்?
..............................................


(32) 


இதைப்போன்று 20கற்களை ஒன்றின் மேல் ஒன்றாக வைத்தால் முழு உயரம் எத்தனை மீற்றர்?
..............................................

(33) 


இம் முக்கோணத்தில் செங்கோணம் உள்ள எழுத்தை எழுதுக
..............................................

கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தை அவதானித்து வினாக்களுக்கு விடைதருக




(34). ஒரு சிறுவன் A யிலிருந்து தமது வீட்டுக்குச் சென்ற பாதையை படம் காட்டுகிறது. அந்தப்பிள்ளை எத்தனை தடவைகள் வலப்பக்கமாகத் திரும்பிச்சென்றிருப்பான்?
..............................................

(35). அந்தச்சிறுவன் கிழக்குத்திசையாக சென்ற தடவைகள் எத்தனை?
..............................................

(36). அச்சிறுவன் F யிலிருந்து கிழக்குத்திசையாக சென்ற தடவைகள் எத்தனை?
..............................................

(37). அந்தச்சிறுவன் வீட்டுக்குச் செல்வதற்கு எத்தனை மீற்றர் நடக்க வேண்டும்?
..............................................

### தவிசாளரின் எதிர்ப்புக்கு மத்தியிலும்

## வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையில் இனப்படுகொலைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றம்

(கரணவாய்)

வடமாகாண சபையினால் முன்வைக்கப்பட்ட இலங்கையின் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது நடாத்தப்பட்டதாக கூறப்படும் சம்பவங்கள் தொடர்பான தீர்மானம் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையிலும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையின் மாதாந்த கூட்டம் நேற்று முன்தினம் சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஆளுங்கட்சி உறுப்பினர் குறித்த தீர்மானம் சபையிலும் நிறைவேற்றப்பட வேண்டும் என கோரிக்கை ஒன்றை முன் வைத்தார். இதனை அடுத்து சபையில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கிடையே வாக்குவாதமும் சலசலப்பும் ஏற்பட்டது.

இதன்போது சபைத் தவிசாளர் வடமாகாண சபையில் குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் சபையில் இவ்விடயம் தேவையற்றது எனவும் எடுத்துக்கூறினார்.

எனினும் ஆளும்கட்சி உறுப்பினர்கள் இது தொடர்பில் தவிசாளரின் கருத்தை ஏற்றுக் கொள்ளாது தீர்மானம் சபையில் நிறைவேற்றப்பட வேண்டும் என கோரிக்கை முன் வைத்தனர்.

இதனையடுத்து பலத்த வாக்குவாதத்தின் பின்னர் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒன்றிணைந்து சபையில் குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (18)

## இரத்ததானம்



அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை இரத்தவங்கியின் அனுசரணையுடன் "we care" சமூக சேவைகள் அமைப்பினரால் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரத்ததான முகாம் ஒன்று நடாத்தப்பட்டது. இதில் சுமார் 35 பேர் கலந்துகொண்டு இரத்ததானம் செய்தனர். (48)

## முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டவர்களின் பிள்ளைகளுக்கு உபகரணங்கள் வழங்கல்




வவுனியாவில் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

வவுனியா சமூகசேவைகள் திணைக்களத்தில் நேற்று முன்தினம் மாவட்ட சமூகசேவைகள் உத்தியோகத்தர் எஸ்.வாசன் தலைமையில் உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு இடம் பெற்றது.

உயிரிழை என்ற அமைப்பின் ஊடாக இவ் உப கரணங்கள் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத் தீவு, யாழ்ப்பாணம் போன்ற இடங்களைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கௌரவ விருந்தினராக வவுனியா பொது வைத்தியசாலை மனநல வைத்தியர் எஸ்.சுதாகரன் கலந்துகொண்டார். (70)

## ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான நீதிநூல் மனனப்போட்டி முடிவுகள்

*(நேற்றைய தொடர்ச்சி...)*

(யாழ்ப்பாணம்)

**வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக் கழகம் பாடசாலை மாணவர்களிடையே நடாத்திய சைவசமய அறிவுப் பரீட்சையில் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான நீதிநூல் மனனப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.**

தரம் -2

ம.மதுவந்தி (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), அ.தேனுஜென் (சுன்னாகம் நாகேஸ்வரி விததியாசாலை), கு.அபிரா, ர.மதுஷா (நயினாதீவு ஸ்ரீ கணேசா கனிஷ்ட மகா வித்தியாலயம்).

சு.திகழோவியன், பி.சாமந்தி (மல்லாகம் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம்).

ர.தர்சானந் (ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை), ச.சம்புஜன், வி.ஆரணி, பி.கிருததிகா, ப.பவிஷாலி, சு.மோனிஷா (ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயம்). லோ.கோபிகா (மிருசுவில் அ.த.க.பாடசாலை), ந.கம்சிகா (நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி) வி.நேருகா (கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்.

ஞா.சங்கவி, ந.தேனுஷாந், ஜெ.ஜெயதுவாரகா, சு.மதுஷியா (ஆனைப்பந்தி மெதடிஸ் மிஷன் வித்தியாலயம்).

பி.ஆகாஸ்வரசர்மா (காரைநகர் கிழவன்காடு கலாமன்றம்), ம.மதுரிகா (சுன்னாகம் கந்தரோடை அருளானந்தப்பிள்ளையார் அறநெறிப்பாடசாலை).

ச.சங்கவி (இளவாலை பாரதி அறநெறிப்பாடசாலை) சு.ஜெனோவா (சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயம்).

பி.கஜனி (இந்து ஆரம்ப பாடசாலை), சுகனிமொழி, சிபவித், ம.கருணிஜா (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), கு.தீபிகா (ஈவினை அ.த.க. பாடசாலை), தி.டிலானி (வண்.நாவலர் மகா வித்தியாலயம்).

ம.கபிசா, ச.மதுமதி, நீர்வேலி ஸ்ரீ கணேஷா அறநெறிப் பாடசாலை), செ.ருக்சிகா, ஜெ.ரினோஷிகா (இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை).

சு.பிரணவன், சு.மானுஷா (அளவெட்டி வடக்கு அ.மி.த.க. பாடசாலை), கு.சிறிசுபங்கன் (இந்து அரம்ப பாடசாலை), லோ.ஸேனுஷா (கோண்டாவில் நெட்டிலிப்பாய் ஸ்ரீ கணேஷா அற நெறிப் பாடசாலை). (முற்றும்)

## களவாடப்பட்ட தாலிக்கொடி வீட்டு முற்றத்தில் கண்டெடுப்பு

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு முன்பாகவுள்ள ஒரு வீட்டில் நான்கு நாட்களுக்கு முனபாக களவாடப்பட்ட தாலிக் கொடி கடந்த புதன்கிழமை வீட்டின் முற்றத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த வீட்டில் கடந்த திங்கட்கிழமை இரவு 25 பவுண் தாலிக்கொடியை திருடர்கள் இலாவகமாக திருடிக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

எனினும் இது தொடர்பில் வீட்டு உரிமையாளர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

பொலிஸார் மோப்ப நாய்களைக் கொண்டு வந்து சோதனை நடவடிக்கையை மேற்கொள்வதாக வீட்டு உரிமையாளருக்கு தெரியப்படுத்திய நிலையில் அவர் அயற்பகுதியில் உள்ளவர்களுக்கு மோப்ப நாய் வரப் போகுது திருடன் பிடிபடப் போறான் எனக் கூறியுள்ளார்.

இதனையடுத்து கடந்த புதன் கிழமை காலை வீட்டு உரிமையாளர் தனது வீட்டு முற்றத்தில் களவாடப்பட்ட தாலிக்கொடி கிடப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்துள்ளார். (18)

## நாடகமும் அரங்கியலும் வழிகாட்டல் பயிற்சிப்பட்டறை

க.பொ.த.(சா/த) செய்முறைப்பரீட்சைக்குத் தோற்றுகின்ற நாடகமும் அரங்கியலும் மாணவர்களுக்கான செய்முறை மீட்டல் அரங்க வழிகாட்டல் பயிற்சிப்பட்டறை அண்மையில் நடாத்தப்பட்டது.

புத்தாக்க அரங்க இயக்கத்தினரால் (ஐ.ரி.எம்) மல்லாகத்தில் அமைந்துள்ள புத்தாக்க அரங்க இயக்கத்தின் பிரதான மண்டபத்தில் இயக்குநர் எஸ்.ரி. குமரன் தலைமையில் இப் பயிற்சிப் பட்டறை நடாத்தப்பட்டது.

இப்பயிற்சிப்பட்டறை நிகழ்வில் 150 மாணவர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சிப் பட்டறை தொடர்பாக மாணவர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது மிகவும் பயனுள்ள முறையில் அமைந்திருந்ததுடன் புதிய அனுபவங்களையும் பரீட்சைக்குரிய பயிற்சிகளையும் அறிந்து கொள்ள முடிந்துள்ளதாகத் தெரிவித்தார்கள்

இப் பயிற்சிப்பட்டறையில் செய்முறை சம்பந்தமான விடயங்கள் மாணவர்களுக்கு துறைசார்ந்த வளவாளர்களினால் வழங்கப்பட்டன. (63)

## முரசின் இன்றைய பலன்

21.02.2015 சனிக்கிழமை)

ஜய வருஷம் மாசி மாதம் 09 ஆம் திகதி.
திருதியை திதி. சித்த யோகம்.
உத்தரட்டாதி நட்சத்திரம் பி.இ.02.59 வரை. பின் ரேவதி
இராகு காலம 9.31 - 11.01 வரை. சுபநேரம 03.31 - 05.01 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**: அரசியல் விமர்சனத்தால் நட்புக் கெடும் நிலை ஏற்படல்.

**இடபம்**: குடும்பத்தில் நிலவும் சச்சரவால் திருமணம் ஸ்தம்பித்து விடல்.

**மிதுனம்**: விண்ணப்பித்த கடன் கிட்டுவதினால் மகிழ்வு.

**கடகம்**: மாதாவின் நோய் நிலை குணமடைவதினால் அச்சம் அகன்று விடல்.

**சிம்மம்**: புதிய மனைகோலத்திற்கு ஏற்ற இடத்தைதெரிவுசெய்யஎண்ணுதல்.

**கன்னி**: தேங்கியதை விற்பனை செய்ய புதிய யுக்தியை கையாளுதல்.

**துலாம்**: இடமாற்றம் கருணை மனுவினால் தற்காலிகமாக இரத்துச் செய்தல்.

**விருச்சிகம்**: பாகுபாடு காட்டியதினால் குடும்பத்தில் களேபரம் உருவாதல்.

**தனுசு**: போலியான பொருள் கைக் கெட்டியதால் கவலை தக்க வைத்தல்.


**மகரம்**: சில்லறைப் பிரச்சினையால் முரண்பாடு ஏற்படல்.

**கும்பம்**: சத்திர சிகிச்சைக்கு நாள் குறித்தல்.

**மீனம்**: பெற்றோரின் புத்திமதியைக் கேட்டதால் ஆபத்து விலகி விடல.

# மக்களைக் கொல்பவர்கள் மதத்தின் பிரதிநிதிகள் அல்ல

## ஒபாமா தெரிவிப்பு



(வொஷிங்டன்)

கடவுளின் பெயரைச் சொல்லிக்கொண்டு, அப்பாவி மக்களை கொல்கிறவர்கள் பைத்தியக்காரர்கள் போன்றவர்கள் தானே தவிர அவர்கள் இஸ்லாம், கிறிஸ்தவம், புத்த மதம், யூத மதம், இந்து மதம் என எந்தவொரு மதத்தின் பிரதிநிதிகளும் அல்ல. என அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார்.

வொஷிங்டன் வெள்ளை மாளிகையில் வன்முறை தீவிரவாதத்தை எதிர்கொள்ளுதல் தொடர்பான 3 நாள் உச்சிமாநாடு நடந்தது. இந்தியா உட்பட 60 நாடுகளின் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர். மாநாட்டின் 2ஆவது நாளான கடந்த புதன்கிழமை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது,

நாங்கள் இஸ்லாமுக்கு எதிராக போரிடவில்லை. இஸ்லாமை தவறான வழியில் பயன்படுத்துகிறவர்கள் மீதுதான் போர் தொடுத்திருக்கிறோம். ஐ.எஸ். ஐ.எஸ் தீவிரவாதிகள், அல்-கொய்தா தீவிரவாதிகள், இவர்களைப் போன்ற பிற தீவிரவாதிகள் சட்டத் தின் மீது நம்பிக்கை இழந்து செயற்படுகின்றனர். இவர்கள், தங்களை மதத்தலைவர்கள் போல காட்டிக்கொள்கிறார்கள்.

புனிதப் போராளிகளாகவும் காட்டிக்கொள்கிறார்கள். அப்படித்தான் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் தங்களை இஸ்லாமிய அரசு என அறிவிக்கிறார்கள். அவர்கள், அமெரிக்காவும், மேற்கத்திய நாடுகளும் இஸ்லாமுக்கு எதிராக போரிடுவதாக தவறான பிரசாரத்தில் ஈடுபடுகின்றனர். அப்படித்தான் அவர்கள் தங்கள் இயக்கத்திற்கு ஆள் சேர்க்கிறார்கள்.

அவர்கள் இளைஞர்களை, தீவிரவாதிகளாக மாற்ற முயற்சிக்கிறார்கள். இஸ்லாமும், மேற்கத்திய நாடுகளும் மோதிக் கொள்வதாக அல்லது நவீன வாழ்வும், இஸ்லாமும் மோதிக் கொள்வதாக இவர்கள் செய்கிற பிரசாரத்தை நிராகரிக்க வேண்டும். அவர்கள் பொய்யை சொல்வதால், அவர்கள் முன் வைக்கிற வாதத்தை நாம் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளக்கூடாது.

தீவிரவாதத்துக்கு எந்தவொரு மதமும் பொறுப்பு ஏற்கவில்லை. வன்முறைக்கும், தீவிரவாதத்துக்கும் மனிதர்கள்தான் பொறுப்பு. வன்முறை தீவிரவாதத்துக்கு எதிராக படை பலத்தை மட்டுமே கொண்டு போரிட்டு வெற்றி பெற்று விட முடியாது. சமூகங்களும் இதில் தங்கள் பங்களிப்பை செய்ய வேண்டும் என்றார்..

# நைஜீரியாவில் இராணுவம் தாக்குதல் 300 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை



(அபுஜா)


நைஜீரியாவின் வடகிழக்கு போர்னோ மாநிலத்தில் உள்ள மான்குனோ பகுதியில் போகோஹறம் தீவிரவாதிகளுக்கும் நைஜீரிய இராணுவத்தினருக்கும் இடையே துப்பாக்கித் தாக்குதல் நடைபெற்றது. இத்தாக்குதலின்போது 300இற்கும் மேற்பட்ட போகோஹறம் தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நைஜீரியாவின் பல்வேறு பிராந்தியங்களில் முஸ்லிம் மதத்தினரை ஒருங்கிணைத்து தனி நாடாக அறிவிக்க வேண்டும் என்றும், நைஜீரியாவின் மதவாத சக்திகள் மட்டுமே ஆட்சி செய்ய வேண்டும் என்றும் கடந்த 6 ஆண்டுகளாக போகோஹறம் தீவிரவாதிகள் ஆயுத தாக்குதல் நடாத்தி வருகின்றனர். இவர்களின் தாக்குதலில் இதுவரை 13 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பலியாகி உள்ளனர். இந்நிலையில், நைஜீரியாவில் அடுத்த மாதம் 28ஆம் திகதி ஜனாதிபதி தேர்தலை நடத்த திட்டமிடப்பட்டு வருகிறது. ஆனால், நைஜீரியாவில் என்றுமே தேர்தலை நடத்தவிடமாட்டோம். இங்கு எங்களைப் போன்ற மதவாத சக்திகள்தான் ஆட்சி செய்ய வேண்டும் என்று போகோஹறம் தீவிரவாத இயக்கத் தலைவர் அபூபக்கர் செகாவு நேற்றுமுன்தினம் வீடியோவில் செய்தி வெளியிட்டார்.

இந்த நிலையில் தீவிரவாதிகள் கைப்பற்றி வைத்திருந்த மான்குனோ உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை நைஜீரிய இராணுவம் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. இதுதவிர ஏராளமான வெடி பொருட்கள், 8 வகையான தானியங்கி துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன.

# தீவிரவாதத்திற்கு ஆதரவளிக்கும் மத நிறுவனங்கள் மீது நடவடிக்கை

## பாக். பிரதமர் தெரிவிப்பு



(பாகிஸ்தான்)

தீவிரவாதம் மற்றும் தீவிரவாதிகளுக்கு ஆதரவாகச் செயற்படும், மதரசாக்கள் (முஸ்லிம் மத கல்வி நிறுவனங்கள்) மீது, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கடும் நடவடிக்கை எடுக்க, பாக்., பிரதமர் நவாஸ் ஷெரீப் உத்தரவிட்டுள்ளார்.தென் மேற்கு மாகாணங்களில், தீவிரவாத அச்சுறுத்தல்களை கண்கா ணிக்க, பலுசிஸ்தான் உயர்மட்ட குழு ஏற்படுத்தப்பட்டு உள்ளது. அக்குழுவின் கருத்தரங்கிற்கு தலைமை வகித்த, ஷெரீப் மேலும் கூறியதாவது,

நாட்டில் தீவிரவாத அமைப்புகள், வேரூன்றி கிளைகள் பரப்புவதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. பெஷாவர் பள்ளி தாக்குதலில், 150 பேர் பலியானார்கள். அவர்களில், பெரும்பாலானோர் குழந்தைகள். அது தவிர, மசூதிகளிலும் தீவிரவாதிகள் தொடர்ந்து கொலை வெறிதாக்குதல் நடாத்தி வருகின்றனர்.இதுபோன்ற தீவிரவாத நடவடிக்கைகளின் பின்னணியில், மதரசா கல்வி நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் இருப்பது கண்டறியப்பட்டு உள்ளது. அத்தகையோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டு உள்ளது.

தீவிரவாதத்தை அடியோடு ஒழித்துக்கட்ட, பாக்., அரசு உறுதி பூண்டுள்ளது. இதற்கு உறுதுணையாக, மாகாண அரசுகள், தீவிரவாதிகளுக்கு எதிரான தேசிய அதிரடி செயற்றிட்டத்தை (என்.ஏ.பி.,) அமுல் படுத்துவதில், முனைப்புடன் செயற்பட வேண்டும். என தெரிவித்தார்.


# கூடங்குளம் அணு உலையில் விரைவில் மின் உற்பத்தி

(திருநெல்வேலி)

கூடங்குளம் இரண்டாவது அணு உலையில் 6 மாதங்களில் மின்உற்பத்தி தொடங்கும் என கூடங்குளம் அணுமின் நிலைய அதிகாரி காளிராஜன் தெரிவித்தார்.


திருநெல்வேலி அறிவியல் மையத்தில் "டெக்னோபேர்" தொழில்நுட்ப கண்காட்சி நேற்று முன்தினம் ஆரம்பமாகி மூன்று நாட்களுக்கு நடக்கிறது. இதனை கூடங்குளம் அணு மின் நிலைய கூடுதல் தலைமைப் பொறியியலாளர் எஸ்.காளிராஜன் தொடக்கி வைத்தார்.

அவர் பேசியதாவது,



கூடங்குளம் அணுமின்நிலையம் அறிவியல் தொழில்நுட்பங்களால் உருவானது. அங்கு தற்போது பெரிய அளவில் சத்தம் வராத, மாசு இல்லாத, பாதிப்பில்லாமல் ஆயிரம் மெகாவாட் மின்உற்பத்தி தொடர்ந்து நடந்துவருகிறது. இரண்டாவது அணுஉலையில் ஆறு மாதங்களில் மின்உற்பத்தி தொடங்கும் என்றார்.

# மிகப் பெரிய டெலஸ்கோப் நிர்மாணிக்கிறது அமெரிக்கா



சோலர் தொழில்நுட்பத்தில் இயங்கும் உலகின் மிகப்பெரிய டெலஸ்கோப் (வானியல் தொலைக்காட்டி) ஹவாய் தீவில் நிர்மாணிக்கப்படவுள்ளது. Daniel K Inouye Solar Telescope (DKIST) எனப்படும் இத்தொலைக்காட்டியை நிர்மாணிப்பதற்கு 344 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 2019ஆம் ஆண்டளவில் இதன் கட்டுமாணப்பணிகளை முடிக்கவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இதில் 4.24 மீற்றர் அகலம் கொண்டதும் 75 மில்லி மீற்றர்கள் தடிப்புடையதுமான தளவாடி பயன்படுத்தப்படவுள்ளது. இத் தொலைக்காட்டியின் மூலம் 100 கிலோமீற்றர்களுக்கு அப்பால் உள்ள ஒரு அங்குல விட்டம் கொண்ட சிறிய நாணயத்தினையும் துல்லிய மாக கண்டறிய முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

# வெளிநாட்டு வாழ் இந்தியர்களின் விசா நடைமுறையில் திருத்தம்

## இந்திய அமைச்சரவை ஒப்புதல்




(புதுடில்லி)



இந்தியப் பிரதமர் மோடியின் உறுதிமொழிக்கமைய வெளிநாட்டு வாழ் இந்தியர்களுக்கான விசாநடை முறையில் 2 விதி முறைகளை தளர்த்துவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பிரதமர் மோடி அமெரிக்கா சென்றிருந்த போது நியூயோர்க்கில் இந்தியர்களிடையே உரையாற்றுகையில், வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கு அதிகபட்சம் 15 ஆண்டுகால விசா மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு முறையும் அவர்கள் இந்தியா வரும்போதும் காவல் நிலையங்களுக்குச் சென்று தகவல் தெரிவிக்க வேண்டும் என்பதும் நடைமுறையில் உள்ளது. இந்த 2 விதிமுறைகளும் தளர்த்தப்படும் என்று உறுதியளித்திருந்தார்.

இதையடுத்து இந்த விதிமுறைகளை நீக்கி திருத்தப்பட்ட குடியுரிமை அவசரச் சட்டம் கடந்த மாதம் 6ஆம் திகதி கொணடு வரப்பட்டது. இந் நிலையில் அவசரச்சட்டதுக்கு மாற்றாக குடியுரிமைச் சட்டத் திருத்த மசோதாவை நாடாளுமன்ற பட்ஜட் கூட்டத் தொடரில் அறிமுகம் செய்ய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டது.

உலகச் செய்திகள்

# பீகார் முதல்வர் இராஜினாமா

(பாட்னா)

இந்தியாவின் பீகார் சட்டசபையில், முதல்வர் மஞ்சி அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு நடக்க உள்ள நிலையில், திடீர் திருப்புமுனையாக, முதல்வர் பதவியை மஞ்சி இராஜினாமா செய்துள்ளார். ராஜ்பவனில் ஆளுநர் திரிபாதியை சந்தித்த மஞ்சி, தனது இராஜினாமா கடிதத்தை கொடுத்ததாக கூறப்படுகிறது.

# பொன்சேகாவை மன்னித்த அரசு அரசியல் கைதிகளை மன்னிக்காதது ஏன்?

## நாடாளுமன்றில் சந்திரகுமார் எம்.பி. கேள்வி

(கொழும்பு)

அண்மையில் ஜனாதிபதியினால் பொது மன்னிப்பு என்ற அடிப்படையில் நாட்டின் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதிராகச் சுமத்தப்பட்ட எல்லாக் குற்றச்சாட்டுக்களிலிருந்தும் அவர் விடுவிக்கப்பட்டார். அவரிடமிருந்து மீளப்பெறப்பட்ட பதவி நிலைகளெல்லாம் மீண்டும் வழங்கப்பட்டிருக்கின்றன. அதேபோல, பிரதம நீதியரசருக்கும் அவருடைய பதவி நிலை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்த அணுகுமுறையை ஏன், எங்களது தமிழ் இளைஞர்கள் மீது காட்டக் கூடாது? என்பதை நான் இங்கே வலியுறுத்திக் கேட்கின்றேன் என நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் குறிப்பிட்டுள்ளார். நேற்று முன்தினம் நாடாளுமன்றில் நடைபெற்ற குற்றச்செயல் களுக்குக் பலியாக்கப்பட்டோருக்கும், சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டமூலம் சம்பந்தமான விவாதத்தின் போது உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் தெரிவிக்கும் போது,

இங்கே நான் முக்கியமானதொரு விடயத்தைப்பற்றி அதாவது நீண்டகாலமாக சிறைகளிலே தடுத்து வைக்கப் பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாகப் பேச விரும்புகின்றேன். சிறிய குற்றங்களுக்காக அல்லது சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் நீண்டகாலமாகச் சிறைகளிலே வாடுகின்ற பரிதாப நிலைமையைப் பற்றி யும் அவர்களது விடுதலை தொடர்பாகவும் நாங்கள் எல்லோரும் இந்தச் சபையிலே பல தடவைகள் வலியுறுத்தி யிருக்கிறோம். ஆனால், இன்னமும் அது நிறைவேற்றப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வரும் நிலைமையையே நாங்கள் பார்க்கின்றோம். கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் தமிழ் அரசியல் கைதிகள் சிறைகளுக்குள் இருந்து பல்வேறு போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். அவர்களது அந்தப் போராட்டத்துக்கு நியாயம் வழங்குவதாக வாக்குறுதிகள் வழங்கப்பட்டிருந்தன. முன்னாள் நீதியமைச்சராக இருந்த, தற்போது இந்த அரசிலே அங்கம் வகிக்கின்ற அமைச்சர் கூட இரண்டு வருடங்களுக்கு முன்பு, விசேட நீதிமன்றங்களை உருவாக்கி, இவர்களது விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டு விரைவாக விடுதலை செய்யப்படுவார்கள் என்ற உத்தரவாதத்தை வழங்கியிருந்தார். ஆனால், அது இன்றுவரை நிறைவேற்றப் பட வில்லை. இப்போதும் அவர்கள் அந்தச் சிறைகளிலே வாடுகின்றார்கள்.

சிறைகளிலே வாடும் தமிழ் இளைஞர்கள், தமிழ் அரசியல் கைதிகள் மூன்று வகையாக இருக்கிறார்கள். ஒன்று, எதுவித விசாரணையுமின்றி நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் இரண்டாவது, நீண்டகாலமாக வழக்குகள் நடந்துகொண்டிருப்பவர்கள் மூன்றாவது, சிறிய குற்றங்களுக்காக தண்டனை அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள். ஆனால், இந்தத் தண்டனையானது குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டது என்று இப்போது குறிப்பிடப்ப டுகின்றது. இது இப்பொழுது விமர்சனத்துக்குள்ளாக்கப்படும் நிலைமையை நாங்கள் காண்கின்றோம். குற்ற ஒப்புதல் வாக்குமூலம் எப்படிப் பெறப்பட்டது? என்ன மாதிரியாக அந்த அணுகுமுறை பின்பற்றப் பட்டது? என்பவை தொடர்பாக பல விமர்சனங்களை இன்றும் பலருடைய பேச்சுக்களிலே அவதானித்தோம். ஆகவே, அந்த குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள் சரியானதா? என்பதை மீளாய்வு செய்ய வேண்டுமென்று நான் வலியுறுத்துகின்றேன்.

நீங்கள் இந்த விடயத்திலே துரிதமாக நடவடிக்கை எடுக்க முனைவதற்கு நான் உங்களுக்கு நன்றி தெரிவிக்கின்றேன். அண்மையில் ஜனாதிபதியினால் பொது மன்னிப்பு என்ற அடிப்படையில் இந்த நாட்டின் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதிராகச் சுமத்தப்பட்ட எல்லாக் குற்றச்சாட்டுக்களிலிருந்தும் அவர் விடுவிக்கப்பட்டார். அவரிடமிருந்து மீளப் பெறப்பட்ட பதவி நிலைகளெல்லாம் மீண்டும் வழங்கப்பட்டிருக்கின்றன. அதேபோல, பிரதம நீதியரசருக்கும் அவருடைய பதவி நிலை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இந்த அணுகுமுறையை ஏன், தமிழ் இளைஞர்கள் மீது காட்டக்கூடாது? என்பதை நான் இங்கே வலியுறுத்திக் கேட்கின்றேன். நாட்டின் ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்த விடயத்தில் ஒரு மனிதாபிமான அணுகுமுறையைப் பின்பற்ற முன்வர வேண்டும் என்பதையும் நான் இவ் அவையிலே வலியுறுத்துகின்றேன் என்று கேட்டுக் கொண்டார்.

இதற்கு நீதியமைச்சர் பதிலளிக்கும் போது,

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 182 பேர், சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மிக நீண்டகாலமாக சிறையில் உள்ளனர். இவர்களை நீதி மன்றுக்கு முற்படுத்த போதுமான சாட்சியங்கள் உள்ளனவா? என்பதைக் கண்டறிய தற்போது குழுவொன்றை நியமித்துள்ளோம். அவர்களில் குற்றச் சாட்டை நிரூபிக்கப் போதுமான சாட்சியங்கள் இல்லாதவர்களை மேற்குறித்த குழுவின் அறிக்கை இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் கிடைக்கப்பெற்றவுடன் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

# கிளிநொச்சி மாவட்டத்தின் மேலதிக அரச அதிபர் ஓய்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் மேலதிக அரசாங்க அதிபராக கடமையாற்றிய செல்லமுத்து சிறிநிவாசன் தனது அரச சேவையிலிருந்து நேற்று முதல் ஓய்வு பெற்றுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையின் அதி விசேட தரத்தைச் சேர்ந்த இவர் 1991 ஆம் ஆண்டில் இலங்கை நிர்வாக சேவைக்கு தெரிவாகினார்.

கரவெட்டி,கோப்பாய், தென்மராட்சி, சாவகச்சேரி பிரதேச செயலகங்களில் பிரதேச செயலராக கடமையாற்றினார்.

கிளிநொச்சி மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் நேற்று மனப்பூர்வமான பிரியாவிடை கொடுத்தார்கள்.

நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இவரது பிரியாவிடை நிகழ்வு மாவட்ட செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ளது. (90)

## கூட்டமைப்பின்...

விடியலைக் கொண்டு வர நாம் வழிகளைத் தேடினோம்.

எமது மக்கள் பட்டுணர்ந்த துயரங்களும், நாம் கற்றுணர்ந்த அனுபவங்களும் இணக்க அரசியல் வழிமுறையே மாற்றத்திற்கான வழிமுறை என்ற உண்மையை எமக்கு கற்றுத்தந்தன.

இந்த வழிமுறை நோக்கி விரைந்து வருமாறு நாம் தீர்க்கதரிசனமாக சகல தமிழ் அமைப்புகளையும் நோக்கி அழைப்பு விடுத்திருந்தபோதும், அதை அன்று யாரும் ஏற்றுக் கொண்டிருக்கவில்லை.

இணக்க அரசியல் வழிமுறை என்பது சரணாகதி அரசியல் என்று இழித்துரைத்தார்கள், ஏளனம் செய்தார்கள். எம் மீது அவதூறுகளை வகை தொகையின்றிப் பரப்பினார்கள்.

ஆனாலும், நாம் எமது மக்களுக்காக அரசியல் துணிச்சலோடு எமது இணக்க அரசியல் செயற்பாட்டை முன்னெடுத்திருந்தோம்.

வெறுமனே அறிக்கை விட்டு காலம் தள்ளும் வெற்று வீர எதிர்ப்பரசியல் எமது மக்களுக்கு அழிவுகளையும் அவலங்களையும் தவிர எந்த இலக்கையும் பெற்றுத்தராது என்பதையே நாம் தொடர்ந்தும். வலியுறுத்தியிருந்தோம்.

எமது பாதையில் அழிவுகள் இல்லை, அவலங்கள் இல்லை என்பதை நாம் நடைமுறையில் காண்பித்தோம்.

எதிர்ப்பரசியல் என்பது சுலப மானது. மக்களை அழிவுகளுக்குள் தள்ளிவிட்டு தாம் மட்டும் தப்பித்துக்கொள்ளும் சுயலாப நோக்குடையது. ஆனாலும் இணக்க அரசியல் வழி முறையே கடினமானது. அதை முன்னெடுப்பதற்கு அர்ப்பணங் கள் தேவை.

மக்கள் மத்தியில் இடையறாது நீடித்து நின்று உழைக்கும் செயற்பாட்டுத் திறன் அதற்குத் தேவை. மதிநுட்ப சிந்தனையே அதன் அடிப்படை கொள்கையாகும்.

எமது மதிநுட்ப சிந்தனை வழிநின்று அழிவு யுத்தத்தின் போது அவலப்பட்டு நின்றிருந்த எமது மக்களின் துயர்களை நாமே துடைத்திருக்கின்றோம்.

அழிவு யுத்த காலத்தில் அபிவிருத்திப்பணிகளை முன்னெடுத்த தோடு, அதற்குப் பிந்திய காலத்திலும் சிதைந்து போன எமது வரலாற்று வாழ் விடங்களை அழிவில் இருந்து தூக்கி நிறுத்தவும் உழைத்திருக்கின்றோம்.

13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதில் இருந்து தொடங்கி அதற்கு மேலதிக அதிகாரங்களை பெறுவதன் மூலம் எமது அரசியல் இலக்கு நோக்கிச் செல்ல முடியும் என்பதே எமது அரசியல் கொள்கையாகும்.

நகர முடியாமல் சகதிக்குள் புதைந்திருந்த அரசியல் தீர்வு நோக்கிய முயற்சிகளை நாம் முன்னோக்கி வெளியே இழுத்து வந்திருக்கிறோம். 13 ஆவது திருத்தச்சட்டத்தின் ஆரம்ப நடைமுறையாக மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதற்கும் நாமே எமது இணக்க அரசியல் வழிமுறையில் முன்னின்று உழைத்து வந்திருக்கிறோம்.

அரசியல் பேரம் பேசும் பலத்தை மக்கள் எமக்கு அதிகமாக வழங்கியிருந்தால் எமது அரசியல் மற்றும் அபிவிருத்திப் பணிகளை இன்னமும் முழுமையாகவே நாம் நடத்தி முடித்திருப்போம்.

13 ஆவது திருத்தச்சட்டம் என்பது அரைகுறைத் தீர்வு என்றும், ஒன்றுக்கும் உதவாத தீர்வு என்றும், உழுத்துப்போன தீர்வு என்றும், அதை தும்புத் தடியாலும் தொட்டுக்கூட பார்க்க மாட்டோம் என்றும் இழித்து ரைத்தவர்கள் இறுதியில் எமது வழிமுறையை ஏற்று எவ்வாறு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட முன்வந்தார்களோ,

அது போலவே இன்று தமிழரசுக் கட்சி உறுப்பினரும், வட மாகாணசபை முதல்வருமாகிய மு.விக்னேஸ்வரன், நாம் கூறி வந்த இணக்க அரசியல் வழிமுறை மூலமே எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண முடியும் என்று காலம் கடந்தாவது கூறியிருக்கின்றார்.

இதை அன்றே ஏற்றிருந்தால் தமிழ் பேசும் மக்கள் இத்தனை அழிவுகளைச் சந்தித்திருக்க வேண்டிய துயரங்கள் நடந்திருக்காது. ஆனாலும், மனந்திருந்தி தீர்வின் திசை நோக்கி வந்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை எமது செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கூறுவது போல் நாம் மா இலை தோரணம் கட்டி தொங்க விட்டு நேச முடன் கை நீட்டி வரவேற்கின்றோம்.

இவ்வாறு தெரிவித்திருக்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பேச்சாளரும், தேசிய அமைப்பாளருமான பசுபதி சீவரத்தினம் (கி.பி), உண்மையாகவே எமது மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பற்றுறுதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இருக்குமாயின் கடந்த காலங்களைப் போல் அடிக்கடி நிறம் மாறாமல் எமது வழிமுறையை உறுதியுடன் ஏற்று செயற்பட வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசு...

நாளை முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை யாழ்.கிறீன் கிறாஸ் விடுதியில் இடம்பெறவுள்ளதுடன், இதில் முதன்மை விருந்தினர்களாக சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன, சுற்றுலாத்துறை அமைச்சரான நவீன் திசாநாயக்க, கைத்தொழில் அமைச்சர் றிசாட் பதியுதீன், நீர்ப்பாசன மற்றும் நீர் வள அமைச்சர் துமிந்த திசாநாயக்கவும் கலந்து கொள்கின்றனர்.

இதில் சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.இராசகுமாரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதுடன் நாடாளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்கள், நகர, பிரதேசசபை உறுப்பினர்கள், அரச சார்பற்ற நிறுவன உறுப்பினர்கள், இளைஞர் கழக உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.(இ)

## உடையார்கட்டில்...

ஓலையில் வேயப்பட்டு தறப்பாளினால் மறைக்கப்பட்டு பாதியளவு சீமெந்திடப்பட்ட தற்காலிக கொட்டில்களில் நடத்தப்படுகின்றன.

ஜப்பான் அரசு வழங்கியுள்ள நிதியில் 13 வகுப்பறைகளைக் கொண்ட 2 மாடிக் கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கான ஒப்பந்தம் நேற்று முன்தினம் ஜப்பான் தூதுவர் நொபிஹிட்டோ ஹோபோ மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் என்ற அமைப்பிற்கான வதிவிடப் பிரதிநிதி வில்லியம் லின்ச் ஆகியோர் ஜப்பான் தூதுவரின் உத்தியோகப்பூர்வ இல்லத்தில் வைத்து கையெழுத்திட்டனர்.

## சுன்னாகம்....

மின் உற்பத்தி நிலையத்தின் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய, மல்லாகம் நீதிமன்ற பதிவாளர், மின்சார சபையின் யாழ். மாவட்ட பிரதம பொறியியலாளர், மத்திய சுற்றுச் சூழல் அதிகார சபையின் பிரதிநிதிகள் முன்னிலையில் பராமரிப்புப் பணிகளை முன்னெடுக்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, எதிர்வரும் திங்கட்கிழமை முதல் பராமரிப்புப் பணிகளை ஆரம்பிக்க முடியுமெனவும் நீதிமன்றத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், மின் உற்பத்தி நிலையத்தின் பணிகளுக்கு மல்லாகம் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தடையுத்தரவு தொடர்ந்தும் அமுலில் இருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய..

கிரிசாந்த டி சில்வா 2013 ஆகஸ்ட் மாதம் முதல் 2014 மே மாதம் வரை இலங்கை இராணுவத்தில் பதவி நிலை பிரதானியாக செயலாற்றினார்.

இலங்கை இராணுவத்தின் தொண்டர் படையணியின் படைத் தலைவராகவும் செயலாற்றிய அவர், திறமையான அனுபவமுள்ள அதிகாரியாவார்.

அவர் கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவராவார்.

## தேசிய...

நீக்கப்பட்டமை, இந்தியாவில் அகதிகளாக உள்ள ஈழத்தமிழர்களை தாயகத்திற்கு அழைக்கின்றமை, புரொண்ட்லைன் சஞ்சிகை மீதான தடையை நீக்கியமை போன்ற விடயங்கள் தேசியப் பாதுகாப்புக்கு சவாலை ஏற்படுத்துகின்றன. இதனை செய்யத்துணிந்த பிரதமர் ரணில் விக்ரமசிங்கவே இதற்கு முழுப்பொறுப்பு எனத் தெரிவித்தே இந்த முறைப்பாட்டைப் பதிவு செய்ததாக மெடில்லே பக்ஞாலோக்க தேரர், கூறினார்.

## ஜெனிவா...

வுள்ளனர்.

இந்த விஜயத்தின் போது ஐ.நா. மனித உரிமைக் கவுன்ஸிலின் உயர்ஸ்தானிகர் சையத் அல் ஹுசைனை வெளிவிவகார அமைச்சர் சந்திக்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கடும்போக்குவாதிகள் நாம் அல்ல

## சுதந்திர தினத்தில் பங்குகொண்டதும் தவறு அல்ல



போர் வெற்றி வெறுமனே நிலத்தில் கிடைத்த வெற்றி மட்டும் தான் சுதந்திர தினத்தில் சிங்களத்திலே ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு மிக முக்கியமான பேச்சைப் பேசுகின்ற போது ஜனாதிபதி எங்களை நோக்கி நேசக்கரம் நீட்டு கின்றார்.

அப்படி அவர் நேசக்கரம் நீட்டுகின்ற போது நாங்கள் ஒருவரும் அங்கே இல்லாது இருந்தால் அது பல தவறான சமிக்ஞைகளை சர்வதேசத்திற்கும், சிங்கள மக்களுக்கும், எங்களது மக்களுக்கும் கொடுக்கும் என்பதால் தான் நானும், சம்பந்தனும் சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொண்டதாக தெரிவித்தார் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்.

நேற்று நல்லூர் 2 ஆம் குறுக்கு வீதியிலுள்ள விடுதியில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொள்வதில்லை என்பது உண்மை. அரசின் தேசிய நிறைவேற்றுக் குழுவில் அங்கத்தினராக இருக்கின்ற நிலையில் ஒருவரும் இதில் கலந்து கொள்ளாவிடின் சுதந்திர தின நிகழ்வை பகிஷ்கரிப்பதாகி விடும் என்ற காரணத்தினால் தான் சுதந்திர தின நிகழ்வில் நாம் கலந்து கொண்டோம். இப்போது பார்க்கின்ற போது அது சரியான தீர்மானம் என்றே சொல்லலாம்.

ஜனாதிபதியின் சுதந்திர தின பேச்சு ஊடகங்களில் சரியாக வெளியிடப்படவில்லை. தாங்கள் சந்தர்ப்பங்களைத் தவற விட்டிருப்பதாகவும், அந்த தவறுகளை திருத்த விரும்புவதாகவும், சர்வதேச சமூகத்துடன் ஏற்பட்ட தவறுகளையும் திருத்த விரும்புவதாகவும், சர்வதேசத்தில் சிறந்த நாடுகளாகத் திகழ உழைப்பதாகவும் ஜனாதிபதியின் உரை இருந்தது.

அதுமட்டுமல்ல அரசு இவ்வளவு தூரம் முன்வந்து தவறுகளைத் திருத்திக்கொள்கின்றோம் எனக் கூறி தனது கைகளை நீட்டுகின்ற போது கூட முகத்தைச் சுழித்துக் கொண்டு வேறு பக்கம் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள் என்று எம்மை நினைக்கக் கூடாது.

சுதந்திரதின நிகழ்வில் கலந்து கொள்ளாது இருப்பது எமது மக்களின் நலனைப் பாதிக்கும் செயலாகும். நாம் கடும் போக்குவாதிகள் அல்ல என் பதைக் காட்டவே சுதந்திர தின நிகழ்விற்குச் சென்றோம் என சுமந்திரன் மேலும் தெரிவித்தார். (இ, 25)

# கிராமங்கள் தோறும் குறைகேள் சந்திப்புக்கள்



(வேலணை)

வேலணைப் பிரதேசத்தில் அம்பிகைநகர், செட்டிபுலம், புங்குடுதீவு போன்றகிராமங்கள் உட்பட கிராமந்தோறும் ஈபிடிபி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் உதயன், மக்களின் தேவைகள் தொடர்பாக பொதுமக்களுடன் கலந்துரையாடியதுடன் வேலணைப்பிரதேசத்தில் இடம்பெறும் வேலைத்திட்டங்களினையும் பார்வையிட்டார். மேற்படி கலந்துரையாடல்களில் வேலணைப் பிரதேச சபை தவிசாளர் சிவராசா உடனிருந்தார்.

# போதை பாக்கு விற்பனை யாழில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் அனுமதி பெறப்படாது போதை ஏற்படுத்தும் பாக்குகளை விற்பனை செய்த ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

பான்பராக், மஜா என்று கூறப்படும் போதைப் பாக்குகளை விற்பனை செய்வதற்கு அனுமதி அளிக்க யாழ். மாநகர சபையினர் மறுத்த நிலையில், அவற்றை விற்பனை செய்த ஒருவர் ஐந்து சந்திப் பகுதியில் நேற்று யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

இப்பாக்குகளின் பாவனையை தொடர்ந்து எதிர்காலத்தில் பெரியளவிலான போதைப் பொருள் பாவனைக்கு இளம் சமுதாயத்தை தள்ளிவிடும் என்பதற்காக அனுமதி அளிக் காத நிலையில் அது சட்டவிரோதமானது என தெரிவிக்கும் நிலையில் பாக்கு விற்பனையில் ஈடுபட்ட ஒருவரை யாழ். பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்ய ஏற்பாடாகியிருந்துள்ளது. (இ)

# நூலக உதவியாளர்களுக்கு வேலணையில் நிரந்தர நியமனம்

(வேலணை)

வேலணை நூலக உதவியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வு கடந்த 16ஆம் திகதி வேலணை பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது. நிரந்தர நியமனம் பெற்ற மூன்று ஊழியர்களுக்குமான கடிதங்களை வேலணைப் பிரதேச தவிசாளரும் வேலணைப் பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளருமான சின்னையா சிவராசா (போல்) வழங்கி வைத்தார். (த)

# சீனி விலை குறைந்தும் தேநீர் விலை குறையவில்லை

சீனியின் விலை குறைந்தும் வடமராட்சி மந்திகைப் பகுதி உணவகங்களில்தேநீர் வகை ஒரு சில கடைகளில் மாற்றமடையாமல் விற்பனை செய்யப்படுகிறது.

சில உணவகங்களில் தேநீர் பத்து ரூபாவாகவும் சில உணவகங்களில் 15 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

உணவு வகைகளிலும் மாற்றம் ஏற்படாத நிலையே காணப்படுகிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என பொதுமக்கள் கோருகின்றனர். (150)

# தகுதியானவர்களுக்கு நியமனம் சுகாதாரத் தொண்டர்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுகாதாரத் தொண்டர்களாக நீண்ட காலம் கடமையாற்றுவோருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ள நிலையில அந்நியமனங்கள் நீதியான முறையில் நடைபெறவேண்டும் என சுகாதாரத் தொண்டர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இம்மாவட்டத்தில் கடந்த 1995ஆம் ஆண்டு காலப் பகுதியில் இருந்து சுகாதாரத் தொண்டர்களாக கடமையாற்றிவரும் தமக்கு இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை எனவும் தாம் மிகுந்த கஷ்டத்தின் மத்தியிலே கடமையாற்றுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இம்மாவட்டத்தில் 63 சுகாதார தொண்டர்கள் கடமையாற்றுகின்ற நிலையில் இவ் 63 பேருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் எனவும் முன்னைய காலங்களில் அரசியல் செல்வாக்குகள் மூலம் நியமனங்கள் வழங்கப்பட்டதாகவும் இதனால் தாம் உள்வாங்கப்படாமல் போனதாகவும் சுகாதாரத் தொண்டர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

நீண்ட காலமாக உரிய சம்பளங்கள் இன்றி தாம் கடமையாற்றி வருவதாகவும் எனவே. வழங்கப்படவுள்ள நியமனம் நீதியான முறையில் நடைபெறுவதுடன் 63 பேருக்கும் நியமனம் வழங்கப்படவேண்டும் என சுகாதாரத் தொண்டர்கள் உரியவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (69)

# சோழன் "அறுவடை விழா" கிளிநொச்சியில் நேற்று

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இராமநாதபுரம் பகுதியில், சோழன் அறுவடை விழா நேற்று இடம்பெற்றது. இரணைமடு நீர்பாசண திட்டத்தின் கீழ் உள்ள விவசாய நிலங்களில் உப உணவு பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்ட சிறுதானிய பயிர்ச்செய்கையின் ஓர் அம்சமாக சோழன் பயிர்ச் செய்கை அறிமுகப்படுத்தப்பட்டது.

குறித்த சோழன் பயிர்ச் செய்கையின் அறுவடை விழா நேற்று 10.30 மணியளவில் இராமநாதபுரம் பகுதியில் முன்னெடுக்கப்பட்டது. குளங்களில் நீர் குறைவடைந்து காணப்படும் சூழலில், சிறு போக நெற்செய்கைக்கு மாற்றீடாக குறித்த பயிர்ச்செய்கையை முன்னெடுக்கும் வகையிலும், நெற்செய்கையை பார்க்கிலும், சிறுதானிய உற்பத்திகளை அதிகரித்து விவசாயிகளிற்கு அதிக இலாபத்தினை பெற்றுக்கொடுக்கும்



நோக்குடனும் குறித்த பயிர்ச் செய்கை அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.

பிரதேசத்தின் நில அமைப்பிற்கு அமைவாக சிறுதானிய பயிர்ச்செய்கையை மேற்கொள்வதுடன், நீர்சிக்கனத்தினையும் பேணமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வயல் விழாவில் வடமாகாண விவசாயப் பணிப்பாளர், மாவட்ட விவசாய பணிப்பாளர்கள், பிரதேச செயலக அதிகாரிகள், இரணைமடு நீர்ப்பாசண திட்ட அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (29)

# "துளிராய் சருகாய் உயிர்ப்பாய்" பாடல் இறுவட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் இசைத்தென்றல் கலாபூசணம் ம. யேசுதாசனின் ஆக்கத்தில் உருவான துளிராய் சருகாய் உயிர்ப்பாய் என்னும் கிறிஸ்தவப் பாடல்கள் அடங்கிய இறுவட்டின் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு இல.286,பிரதான வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ. யோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையமான கலையருவியின் இயக்குநரும் மன்னார் தமிழ்ச்சங்கத் தலைவருமான அருள்திரு தமிழ்நேசன் அடிகள் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.



இந்நிகழ்வில் வரவேற்புரையை திருமறைக் கலாமன்ற ஊடக இணைப்பாளர் கி. செல்மர் எமிலும், வெளியீட்டுரையை வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கு. அற்புதனும் மதிப்பீட்டுரையை அச்சுவேலி பங்குத தந்தை அருள்திரு சி.யே. அன்ரனிபாலா வழங்குவார்கள்.

தொடர்ந்து ஏற்புரையை இசைத்தென்றல் ம. யேசுதாசன் வழங்க நன்றியுரையை திருமறைக் கலாமன்றத்தின் கணக்காளர் திருமதி ஸ்ரெல்லா எட்மன் நிகழ்த்துவார்.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 பெப்ரவரி 21ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.